ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை | உள்நாடு 1 அணா
வெளிநாடு [illegible]

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன்பணம் — | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, — | ,, 1 12 |
| வெளிநாட்டிற்கு ,, — | ,, 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம்: அங். 1க்கு ரூ. 1
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
☞ நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | சென்னை, சுக்கிலஹு புரட்டாசிமீ 28உ (13—10—29) ஞாயிற்றுக்கிழமை | மலர் 23

இந்தியாவிலும் இலங்கையிலும் நடைபெற்ற அநேக வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும் முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்கபதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்ற பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

## டாக்டர் டி. சி. சிங்காரம்

அவர்களால் தயார் செய்யப்படும் பிரசித்தி பெற்ற மருந்துகள்.

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவமுறைப்படி தயார் செய்யப்படுவது.)

### ஆச்சரியமாய் அநேக நோய்களை குணம் செய்கிறது.

### மஹா சந்தனாதி தயிலம்

உலகப் பிரசித்தி பெற்றது

கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இத்தயிலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

இத்தயிலத்தால் குணமாகும் நோய்கள்

| | |
|---|---|
| கண் எரிச்சல் | வெட்டை சூடு |
| கண் சிகப்பு | காது நோய் |
| கண்ணில் நீர் வடிதல் | மண்டை இடி |
| கண் அரிப்பு | பீனிசம் |
| கண் பார்வைக்குறைவு | தலைமயக்கம் |
| கண் கூச்சம் | தலைப்பொடுகு |
| கண்ணில் பீளைசாருதல் | சொறி சிரங்கு |
| மேகநீர், வெள்ளெழுத்து | தலைமயிர் உதிர்தல் |
| ஒருத்தலை நோய் | நாள்பட்ட தலைநோய் |
| கைகால் எரிச்சல் | முதலிய பல வியாதிகளை |
| மூலச்சூடு | ஆச்சரியமாய் குணம் செய்யும் |
| அஸ்திகாங்கை | |

### சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து!

மிகுந்த பலத்தையும் வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தை சாப்பிட்டு வந்தால் கைகால் அசதி, இடுப்பு வலி, பலக்குறைவு, ஆயாசம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கி குறைந்த ஆண் தன்மையை அதிகரிக்கச்செய்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, வீரியத்தை விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும், சுறு சுறுப்பையும் கொடுக்கும். எவ்வளவு கடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது. பத்தியமில்லை.

ஒருசேர் டப்பி விலை ரூ. 2—8—0

சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி குளிர்ச்சியைக்கொடுக்கும். ஒரு முறை இத்தயிலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரிக்ஷித்துப்பார்க்கவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0 12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

பாக்கிங், தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும்.

## டி. சி. சிங்காரம் அண்டு கோ.,

(38) தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

## பகுத்தறிவு

கூடிய விரைவில் "குடிஅரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப் போகும் மாதப்பத்திரிகை.

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளி வரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள்பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருடசந்தா அணா 0—8—0 எட்டே. வெளிநாடுகளுக்கு 0 12 0.

(எப்) விலாசம் :— "பகுத்தறிவு" காரியாலயம், 14, மவுண்ட்ரோட், சென்னை


கடவுள் கடவுளென காலைத் தொலைக்காதே

## பூவுலக வாழ்க்கைக்கு இன்றியமையாத சிங்கபலத்தைத் தருவதெது?

# அமிர்த சஞ்சீவி லேகியமும் அயக்காந்த செந்தூரமுமே

முறையாய்ச் செய்த அயக்காந்த
செந்தூரத்தைக் காட்டிலும்
தேகபலத்தைத் தரும் ஔடதம்
வேறொன்று மில்லை

**விளம்பரம்**
**இதைக் கண்ணுறும் கனவான்களே!**



இந்த லேகிய செந்தூரங்கள் சாமான்யமானவையல்ல. அபாரமான பலத்தைத் தரக்கூடிய சக்தி அமைந்துள்ளவை. உறுதியாய் இவற்றை நம்பி வாங்கிச் சாப்பிட்டால் ஒரே தடவையிலேயே இவற்றின் விசேடகுணம் நன்கு விளங்கும்.

## இந்த லேகிய செந்தூரங்களால்

### நிவர்த்தியாகும் முக்கிய வியாதிகளாவன:

தற்காலத்தில் மனிதரின் பால்ய சேஷ்டையாலும், இரத்தப் போக்காலும் அவர்க்கு உண்டான 20 வகை மேகரோகங்கள், குஷ்ட ரோகம், குன்மரோகம், பித்தப்பாண்டு, கைகால் முடக்கு, ஓய்வு, பித்த எப்பம், நெஞ்சு தொண்டை எரிச்சல், வயிற்றுப்பிசம், அஜீரணம், பசியில்லாமை, தாதுஹீனம், தேக உளைச்சல், கண்ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரையில்லாமை, தலை சுழற்றல், நீர் இறங்கும் போது பொறுக்கமுடியாத பாதையைத்தரும் தந்திமேகம் முதலியவைகள் ஆச்சரியப்படத்தக்க விதமாய் நீங்கிவிடும். பயங்கரமான மேக சம்பந்த வியாதிகளைப் பத்தே வேளையில் போக்கி சப்த நரம்புகளுக்கும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியைப் பெருக்கி பலத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின இலேகிய பஸ்பம் வேறெங்குமில்லை என்று நாம் உறுதியாகச் சொல்லுவோம். இதல்லாமல் தேகத்தைப் புஷ்டியாக்கித் தேகத்தடிப்பு, நகக்கண் வெளுத்திருத்தல் முதல்ய வியாதிகளைக் கண்டித்து, தினந்தோறும் மலத்வதைத் தாராளமாய்ப் போக்குவதில் இந்த லேகிய செந்தூரங்களே முதன்மையானவையென்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருக்கிறோம். நிற்க, இந்த லேகிய செந்தூரங்கள், மேற்கண்ட வியாதிகளைக் கண்டிப்பாய் நிவர்த்திக்குமா என்னும் சந்தேகமுடையோர் பரீக்ஷார்த்தமாக முதலில் 48-நாளாவது வாங்கி புண்டால் இவற்றின் அபார குணம் தெரியவரும் தவிர யாங்கள் இம்மகத்துவம் பொருந்திய லேகிய செந்தூரங்களை எவ்வளவு சிறப்பித்துக் கூறியபோதிலும் அது தகும் மேலும் இவற்றை நோய் உள்ளவரேதாம் சாப்பிடவேண்டும் என்ற அவசியமில்லை; யாவரும் சாப்பிடலாம். நோய் உள்ளவர்களைவிட நோய் இல்லாதவர்கள் எண்ணிக்கையாக 48-நாள் இந்த லேகிய செந்தூரங்களை யாதும் பத்தியமின்றிச் சாப்பிட அவர்க்கு நல்ல பலம் ஏற்படும் இது தவறாது. இவற்றைத் தருவித்து நண்பர் எண்ணிக்கையாகச் சாப்பிட்டு 10-நாளைக்குள் குணம் இல்லாவிடில் உடனே தெரியப்படுத்தினால் கட்டாயம் இவற்றிற்கு வாங்கிய பணம் வாபீஸ் செய்யப்படும். தவிர மேற்காட்டிய நோய்கள் உடையோர் 48-நாட்கள் சாப்பிடுவார்களேயானால் அவை முழுதும் நீங்கிவிடும். அப்படி நீங்கிக் குணம் ஏற்படாவிடில் நாங்கள் அதற்கு உத்திரவாதிகளாவோம். யாங்கள் இவ்வளவு அருமையான லேகிய செந்தூரங்களை எவ்வளவோ சிரத்தையுடன் கஷ்டப்பட்டு முடித்துப் பரோபகாரத்தமாக வெளியிட்டோம். இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களுக்குப் பொன் மெடல், வெள்ளி மெடல் பெற்றதல்லாமல் ஆயிரக்கணக்கான யோக்கியதா பத்திரங்களும் பெற்றிருக்கின்றோம். ஆதலின் நமது லேகிய செந்தூரங்கள் யாம் சொன்னபடி குணத்தைக் கொடுக்கும் என்பதைப்பற்றி ஜவாப்தாரியாயிருக்கக் காத்துக்கொண்டிருக்கிறோம்; இது உண்மை. இவற்றை ஒரே தரம் தருவித்துப் பாருங்கள்; எமது உண்மை விளங்கும்.

வாதாதிக்க தோஷத்தினாலாவது, துரப்பியாசத்தினாலாவது, அதிக மனக்கவலையினாலாவது, அடிக்கடி உண்டாகும் நோயினாலாவது, மற்றெந்தக் காரணத்தினாலாவது பல மிழந்தவர்கள் எண்ணிக்கையாக மேற்படி லேகிய செந்தூரங்களைப் புசிப்பார்களானால் இவை தேகாரோக்கியம், வலிமை, அழகு முதலியவற்றை அவர்க்குக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யுமென்பதில் தடையில்லை. வெளியூர்க் கனவான்கள் இந்த லேகிய செந்தூரங்களில் முழு நம்பிக்கைவைத்து ஒரே ஒருதரம் இவற்றைப் பரீக்ஷிப்பார்களானால், அவர்கள் அவசியம் ஆனந்த மடைவார்கள்.

இந்த லேகிய செந்தூரங்களுக்குப் பத்தியமே கிடையாது. எந்தப் பண்டங்களையும் நீக்குதலின்றி சாப்பிடலாம். மருந்து சாப்பிடும்போது பசி அதிகமாய் எடுக்கும் ஆதலால் பச்சைப்பயற்றுக் குழம்பு, கறி, மார்க்கண்ட ரூப்பு. இவைகளை அதிகமாகப் பசியைத் தணிக்கக்கூடிய விதமாகத் தாமதம் செய்யாமல் சாப்பிட்டுவர வேண்டியது. இவற்றைப் புசிக்கும்போதெல்லாம் பலகாராதிகள் சாப்பிடல் வேண்டும். தயிர், பால், நெய் முதலியவைகள் எவைகளாயிருந்தாலும் சந்தேகமின்றிச் சாப்பிட்டுவரலாம்

இவ்வருமை வாய்ந்த லேகிய செந்தூரங்களை மட்டும் ஒருவர் தருவித்து எண்ணிக்கையாக 48 நாள் சாப்பிடுவாரேயானால் இவை தேகத்தில் ஊற ஊற, மேகமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கி அவர் தேகமானது வலுத்துப் புதிய ரத்தம் பரவித் தன் வாழ்நாள் பரியந்தம் இளைக்காமலிருக்கும். இவற்றைப் புருஷன் பெண்ஜாதி இருவரும் ஏககாலத்தில் ஒற்றுமையாய்ச் சாப்பிட்டு வந்தார்களேயானால் அவர்க்கு உதிக்கும் மக்கள் மிகுந்த தேஜஸோடு தோன்றுவார்கள். இது உண்மை. இதை அதிகம் எழுதுதல் அனாவசியம்.

இந்தியா, பர்மா, ஸிலோன் ஆகிய உள் நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் செந்தூரமும் விலை ரூ. 1 12 0 போஸ்டேஜ் அணா 6. ஒரே தடவை 48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூ. 4.

பினாங்கு, சிங்கப்பூர், நேட்டால் முதலிய அயல்நாடுகளுக்கு 24 நாள் சாப்பிடக்கூடிய மருந்து விலை: ரூபா 1 12 0 தபாற் கூலி ரூபா 1 4 0

48 நாள் மருந்து வாங்குவோருக்கு போஸ்டேஜ் உள்பட ரூபா 5—8—0. சிங்கப்பூர், பினாங், மலாக்கா முதலிய வெளி நாடுகளுக்கு வி. பி. ஆர்டர் இருந்தாலும் முன்பணம் அனுப்பாதவர்களுக்கு மருந்து அனுப்பப்படமாட்டாது.

(51) விலாசம்:— **கருணாநிதி டிப்போ,** 1/6 வெங்கடேசமேஸ்திரி தெரு, சென்னை.

# எங்கள் விளக்கமும் ஆராய்ச்சியும்

(கைவல்யம்)

ii

வித்வப்பெரியார்கட்கு நூலாராய்ச்சி என்பது வேண்டப்படும் ஓர் அரும்பெருந் தொழில் பெருமை என்பதை மறுப்பவர் கவில்லை. நூலின் அருமை பெருமையை உணர்தற்கும் அதன் உண்மை மதிப்பினைத் தெளிதற்கும் ஆராய்ச்சி உதவக்கூடியதுமாகும். ஆராய்ச்சிகளின் உண்மைகள் மனுஷிய உலகத்தை இன்பமடைதற்கு உயிர்வளமுடையதாக்கி பலவிதங்களில் அழகுபடுத்தவேண்டும். நமது பண்டிதர்களின் ஆராய்ச்சியோ செத்த கட்டுப்பாடாய் இருக்கின்றது; ஒரு மரக்காலுக்குள் தங்கள் புத்தியை விளையாடவிட்டால் அந்த ஆராய்ச்சி அறிவை எப்படி விளக்கும்? அந்த அழகைக் கண்டு அவர்கள் பள்ளிப்பிள்ளைகள் கூட நகைப்பதை அறிந்தும் இவர்கள் தம்மை சமய சாஸ்திரப் பண்டிதர்களென நினைத்துத் திருப்தியடைகிறார்கள்!

பார்ப்பாரப் பையன்கள் சந்தியாவந்தன முதலிய நித்தியகர்மானுஷ்டானங்களில்லாமல் கெட்டுப் போவதால் அவர்களுக்குத் தனியாக ஒரு உபாத்தியாயர் வைத்து சொல்லிக்கொடுக்க வேண்டுமென்று ஆலோசித்து திருச்சி கோவில் மண்டபத்தில் சில வருடங்களுக்குமுன் ஒரு பள்ளியுமகட்டினார்கள். உபாத்தியாயரான சாஸ்திரிகள் காயத்திரி மந்திரத்தின் சுலோகத்தைச் சொல்லி அர்த்தமும் சொன்னார். அதில்ஒருபையன் எதற்காக நான் காயத்திரி செய்ய வேண்டுமென்றான். சாஸ்திரியார் காயத்திரியின் சுலோகத்திற்கு மேற்கோளாக வேறு ஒரு சாஸ்திரத்திலிருந்து ஒரு சுலோகம் சொன்னார். பையன் அந்த சங்கை இந்த சுலோகத்திலும் தீரவில்லையேயென்றான். உடனே சாஸ்திரியாருக்குக் கோபம் வந்து போய்விட்டார். அதுபோல பண்டிதர்கள் எடுத்துக் கொண்ட விஷயங்களுக்கு புராணங்களிலிருந்து கவி சொல்லுவதும் அதற்கு மற்றோர் புராணத்திலிருந்து மேற்கோள் காட்டுவதும் வழக்கமாகவிருக்கிறது. ஒரு கவிக்கு இன்னொரு கவி உதவியாக விருக்கலாம். ஆனால்கேள்விக்குயேற்றவிடையளிப்பதில்லை; பண்டிதர்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தை தெளிவாக விளக்கிக் கூறுகின்றார்களா? அதுவுமில்லையே. இதற்குத் திருஷ்டாந்தமாக நமது பண்டிதர்கள் அகஸ்தியரைப் பற்றி இதுவரையிலும் நம்பிக் கொண்டிருப்பதையும் இப்பொழுது வித்வப் பெரியார்கள் என்பவர்கள் செய்யும் ஆராய்ச்சியையும் கவனிப்போம்.

சிவபெருமான் மலையரையன் பாவையைத் திருமணம் புரிதரு காலத்தே தேவர் முனிவர் முதலாய பல்கணத்தாரும இமயத்தில் திரண்டிருந்தமையின் பொறையாற்றாது வடபுவி தாழ்ந்து தென்புவி உயர்ந்தது; அப்பொழுது இறைவர் அகத்தியனாரைத் தெற்கின்கண் பொதியில் சென்றிருக்குமாறு வேண்டிக் கொள்ள அவரும் அங்ஙனமே போந்திருந்தனர்; 'புவியும் துலை ஒத்தது' என்றுகந்தபுராணம்கூறுகின்றதுஎன்றும்; அகஸ்தியர் இறைவரிடம் விடைபெற்றுச் செல்லும்பொழுது தென்தேயம் தமிழ் நாடென்றும் அங்குள்ள மாந்தரெல்லாம் தமிழ்க்கல்வி மிக்காரென்றும் கூறுவர்; அனையவர் கேட்பவற்றுக்கு விடையிறுத்தல் வேண்டுமாகலின் செந்தமிழ் இயல் நூலினை எம்பெருமான் அடியேற்கு அருளிச் செய்யவேண்டும் என்று வேண்டிக் கொள்ள சிவபெருமான் அவருக்கு முதல்நூல்அருளிச்செய்தனர் என்று திருவிளையாடற்புராணம் கூறுகின்றது என்றும்; சிவபெருமான் அகத்தியருக்குத் தமிழறிவித்த முதற்குரவரென்பதை காஞ்சிப்புராணமும்கூறுகிறது என்றும்; அகத்தியனார்க்கு ஆசிரியர் முருகக் கடவுள் என்று சிவஞான சித்தியாரிலும் சிவப்பிரகாசத்திலும் சொல்லுகிறது. தேவர் முனிவர்கைலகிரியில் கூடினதற்கு வடக்கு உயர்ந்து தெற்கு தாழ்ந்தது அதன் நொய்ம்மை தீர அகத்தியர் வடக்கினின்றும் வந்தார். வரும்போது கங்கையிடம் போய் காவேரியை வாங்கிக் கொண்டுவந்தார் என்றும்; தொல்காப்பிய பாயிர உரையில் நச்சினார்க்கினியார் கூறுகிறார் என்றும்; வடக்கு மலையும் தெற்குமலையும் போட்ட சண்டையில் ஆகாசமெல்லாம் தூளாகி சந்திரர் சூரியர்கள் செத்துப்போகும் சமயம் தேவர்கள் அகஸ்தியரை வேண்டமலைகளை அடக்கும் வரத்தைச் சிவபெருமானிடம் வாங்கித் தெறகேவந்து மலையை அடக்கினாரென்று கந்த புராணம் சொல்லுகிறது என்றும்; பண்டிதர்கள் சொல்லுவதே அகஸ்தியரைப் பற்றின ஆராச்சி!

இவ்விதமான ஆராய்ச்சியில் நாம் அறிந்ததென்ன? கந்தபுராணம் திருவிளையாடல் புராணம் இன்னும் சில புராணங்களிலுள்ள சில செய்யுள் தெரிந்தோம். உள்ள சமயங்களின் உண்மைகளிலும் நம்பிக்கையற்று நம் புத்திக்கும் ஆபாசமாகத் தோன்றி புராணத்திலுள்ள கற்பனைகளும் வெளிப்பட்டுப் பண்டிதர்களின் புத்தியை குறுக வைக்கும் அவர்கள் படிப்பு வெளிப்பட்டதையும் பார்த்தோம்.

இமயமலையில் மலையரையன் மகளுக்கும் சிவபெருமானுக்கும் கலியாணம் நடந்ததையும் தேவர்கள் முனிவர்கள் கூடினதையும் விரித்தால் சமயவாதிகளுக்கு கோபம் வரும், ஆனதால் அதை விட்டுவிடுவோம். இமயகிரியில் கூட்டம் எவ்வளக்கு எவ்வளவு கனமுடையவர்கள் கூடினாலும் வடகோடு தாழ்வதும் தென்கோடு உயர்வதும் ஆகக்கூடிய காரியமா? சிவபெருமானின் அருள் நோக்கு அவ்விதம் செய்தாலும் அவர் சிருஷ்டி அல்லோல கல்லோலமாகி விடாதோ? பூமிக்கு வடகோடு இமயமும் தென்கோடு பொதிகையும் தானோ? இமயகிரிக்கு வடக்கே பல தேசங்களும் சமுத்திரங்களும் மலைவனாந்திரங்களுமிருக்கின்றனவென்றும் பொதிகைக்குத தெற்கே மலைவனாந்திரங்களும் தீவு தீவாந்திரங்களும் இருக்கின்றனவென்றும், பூமி உருண்டையென்றும், பள்ளியில் பத்துவயதுப் பையன்களுக்கும் பாடத்தின் மூலமாகப் பாடம் கற்பிக்கப்பட்டு அவனும் பரீட்சைத் தேறுகையில், அர்தப் பண்டிதர்கள் ஆராய்ச்சியில் பூமியின் வடகோடு தாழ்ந்து விட்டது தென்கோடு உயர்ந்து விட்டது அதைச் சமப்படுத்த சிவபெருமான் அகஸ்தியரை அனுப்பினார் என்பதை யார் ஒத்துக்கொள்வார்கள்? சிவபெருமானிடம் அகத்தியர் காவேரியை வாங்கி வந்தார் என்பதையும் விரித்தால் தீர்த்தஸ்நானத்தால் மோட்சத்திற்குப் போகிறவர்களுக்குக் கோபம் வரும். ஆனதால் சிவபெருமான் கொடுத்ததையும் அகஸ்தியர் வாங்கினதையும் நிறுத்திகாவேரியை மட்டும் ஆலோசிப்போம். குடகு மலையில் பெய்யும் மழையே காவேரி. சிவபெருமானிடம் அகஸ்தியர் காவேரியை வாங்கி வருவதற்கு முன்னால் வயநாடு, மானந்தவாடி, மலையாளம், நீலகிரித் தொடர், குடகு முதலிய இடங்களில் மழையே இல்லையா? தென் தேசமெல்லாம் அரேபியாவைப் போன்ற பாலை வனமா? தென்மேற்குப் பர்வதமும் அதற்குப் பின்னரா உண்டாயிற்று? கல்லாறு, வாணியாறு, கொய்பல், அமராவதி முதலிய நதிகள் எவ்வழியாக இதற்குமுன் ஓடிக்கொண்டிருந்தன? இவைகளை எந்த அகஸ்தியர் கொண்டுவந்தார்? உலகத்தில் காவேரியை விடப் பெரிதான நதிகள் எத்தனையோ ஓடுகின்றன. அந்நதிகளைப் பற்றி அகஸ்தியர் கதைகள் அங்கே காணோம். ஏனென்றால்; தெர்ப்பைப் புல்லால் மோட்சம் காட்டும் பார்ப்பானும் இந்த விதமான ஆராய்ச்சிப் பண்டிதனுமங்கில்லை.

வடகோடு தாழ்ந்ததென்றும், தென்கொடு உயர்ந்ததென்றும் அகஸ்தியரை சிவ பெருமான் அதைச் சமப்படுத்த அனுப்பினதாகவும் அதற்காக அவருக்கு முதனூல் அருளிச் செய்து அதையும் கொடுத்து புண்ணிய நதி கங்கையின் தங்கையான காவேரியையும் அகஸ்தியச் சுரைக் குடுக்கையில் அடைத்துவந்து தமிழ்நாட்டைப் புனிதப்படுத்தி இலக்கணமும் செய்தாரென்று சொல்லப்படும் கதைகளில் நமது வித்வப்பெரியார்கள் சண்டைபோடுவதில் ஒரு சாமர்த்தியமுமில்லை. முதல் முதல் இந்தக் கதையை தமிழ்நாட்டில் நுழைத்தவனே சமர்த்தன். அன்றே தமிழும் அதன் நாடும் அடிமை பூண்டது. தென்னாடு உயர்ந்திருந்ததை அழுத்த வந்த அகஸ்தியர்கதை தென்னாட்டை அழுத்தியே விட்டது. கல்வியும் அறிவும் உலக அனுபோகமும் முன்னால் நிற்கும் இந்தக் காலத்திலேயே பண்டிதர்களின் ஆராய்ச்சி அகஸ்தியனை இவ்வாறாகக் கட்டியழுமானால், ஆராய்ச்சிக்கு வேண்டிய அங்கமில்லாத பண்டைகாலப் பண்டிதர்களைப் பற்றி நாம் என்ன சொல்லுவது? திரு.கா.நமசிவாயமுதலியார் உண்மை அகஸ்தியரை எங்கும்காணோமென்றார். ஆலோசித்துப் பார்ப்பவர்களுக்கன்றோ அவை விளங்கும். தமிழ்நாட்டிலுள்ள மாந்தர்களெல்லாம் தமிழ்கல்வி மிக்காரென்று தானே அகஸ்தியர்சிவபெருமானிடம் தமிழ்கேட்டுவருகிறார். அப்படியிருக்க அகஸ்தியர் தமிழ் உண்டாக்கினார் என்று ஏன் சொல்லவேண்டும்? சிவபெருமான் அருளிச்செய்த முதனூல் எது என்றும் அந்நூல் அகஸ்தியருக்காக உண்டாக்கப்பட்டதா? சிவபெருமானிடம் அகஸ்தியருக்கு முன்னே அந்த நூலிலிருந்தா? அகஸ்தியர்கேட்டதற்குமேல் தனிநூல் செய்துக் கொடுக்கப்பட்டிருந்தால் இங்கிருக்கும் பண்டிதர்கள் கேள்விக்கு பதில் எப்படி சொல்லியிருப்பார்? எல்லாம் சிவபெருமானின் அருள்பட்ட மாத்திரத்திலுண்டாகாதோ? அப்படியானால் அகஸ்தியர் தெற்கேஏன்போகவேண்டும்? சிவபெருமான் சொன்னதுதானோ முத்தமிழிலக்கணம்? அதற்கு முன் இலக்கணம் தமிழ்நாட்டிலில்லாமலா போயிற்று? அகத்தியமென்னுமிலக்கணமிருந்ததில்லை; இருந்திருந்தால் தொல்காப்பியத்திற்கு உரை கண்டார் பலரும் அகத்தியத்தைக் குறித்துக் கூறியிருக்கிறார்களே. இவ்விதம் அநேக காலமாக ஒருவர் சொன்னதை இன்னொருவர் மாற்றியும் அவர் சொன்னதை இவர் மறுத்தும் பண்டிதர்கள் வாதாடின புத்தியெல்லாம் நாட்டில் குப்பை கூளங்களாக நிறைந்ததேயல்லாமல், பண்டிதர்களுக்குள் சிவபெருமானோ முருகக்கடவுளோ அகத்தியருக்குத்தமிழ் உபதேசித்தது என்பதில் சந்தேகம் இனியும் தீரவில்லை. தீராவிட்டாலும் கடல் குடித்த குறுமுனி யென்றும், காவேரியை கமண்டலத்தில் அடைத்தவரென்றும், கவிபாடுவதில் சந்தேகமே இல்லை. கடலைக்குடித்த பின் அதில் காய்ந்த ஜீவஜெந்துக்களெல்லாம் என்னவாயிற்று என்றும், கழிந்த மூன்றும் வருடம் கண்ணம்பாடியைக் கத்தவைத்து, கல் அணைக்கட்டை அசைத்து, திருச்சிராப்பள்ளிப் பாலத்தைப் பெயர்த்துக் கொள்ளிடம் பாலத்தைத் தொலைத்து, மண்ணச்சநல்லூரை மணலால் மூடின

(தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

# இதிகாசங்கள்

## இராமாயணம்—கிட்கிந்தா காண்டம்

(கட்டுரை—8)

(திரு. சந்திரசேகரப் பாவலர்)

(சருக்கங்கள் 48 முதல் 53 முடிய)

அனுமான், அங்கதன் முதலியோர் புறப்பட்டு விந்திய மலையிலும் காடுகளிலும் தேடியும் சீதையைக் காணாமல் ஒரு பாழான காட்டைச் சேர்ந்தார்கள். அதில் கண்டு முனிவன் முன் ஒரு காலத்தில் வாழ்ந்திருந்தனன். அவனுடைய பதினாறு வயது மகன் வழி தப்பி இறந்துவிட்டான். அதற்காக அம்முனிவன் அக்காட்டின் மேல் கோபங்கொண்டு உயிர்கள் மடிந்து பாலைவனமாம்படி சபித்தான்.

அக்காட்டைத் தாண்டிப் போகையில் அவர்கள் எதிரே ஓர் அரக்கனைக்கண்டு துணியை இறுகக்கட்டிக்கொண்டு போர் தொடங்கினர். அவன் அவர்களைக் கொல்ல ஓடிவந்தான். அங்கதன் அவனை இராவணன் என்று எண்ணிக் கொன்றான். அவர்கள் அவனே இராவணனென்று துணிந்து அங்கே பலகாலம் தேடி அலுத்துப் போனார்கள். அங்கதன் தேற்றத்தேறி அவர்கள் மறுபடியும் தேடினர்.

அவர்கள் ஓர் குகையைக்கண்டு அதனுள் துணிந்து நுழைந்து சென்றனர். அது மிகவும் இருட்டாக இருந்தால் அவர்கள் அஞ்சினவர்களாய் ஒருவரையொருவர் பிடித்துக்கொண்டு நெடுந்தூரம் சென்று பின் ஒளிமயமான இடத்தைக் கண்டனர். அது பல உயர்ந்த கட்டிடங்களோடு பொன்மயமாக விளங்கிற்று. அவர்கள் அவ்விடத்தில் மேலும் தேடிச் சென்றபோது ஓர் கிழப் பெண்மணியைத் தவக்கோலத்துடன் கண்டனர். அனுமான் அவளை யாரென வினவி அத்தங்கமயமான நகரத்தின் வரலாற்றைக்கூறுமாறு பணித்தான். அப்பெண்மணி, "மயன் என்பவன் இவ்வனத்தைப் படைத்தான். அவன் தன்மகள் மண்டோதரியை இராவணனுக்கு மணம் செய்து தந்ததாலும், ஏமையென்ற தேவப் பெண்ணிடம் மிக விருப்பங்கொண்டிருந்ததாலும் இந்திரன் அவனைக்கொன்றான். அதன்பிறகு நன்முகன் இக்காட்டை ஏமைக்குத்தந்தான். நான் அவளுக்குத் தோழி. என் பெயர் சுயம்பிரபை. அவள் தான் மூவுலகுக்குப் போயிருக்கிறாள். நான் அவளுடைய ஆற்றலால் இங்கே ஒருவரும் வராமல் பாதுகாத்துள்ளேன். நீங்கள் இங்கே எவ்வாறு வந்தீர்கள்? பழங்களைத்தின்று நீருண்டு களைதீர்ந்தபின் கூறுங்கள்" என்றாள்.

அனுமான் தங்கள் வரலாற்றை விவரமாகக் கூறி, "நீ எங்களுக்கு உணவளித்து மகிழ்வித்ததற்கு நாங்கள் என்ன உதவிசெய்யவேண்டும்" என வினவினான். அவள், "நல்ல தவத்தைச் செய்தவரும் எனக்குப் பிறரால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை" என மறுமொழி கூறினாள். அனுமான் அவளை வணங்கி, "அம்மா! நாங்கள் உனக்கு அடைக்கலம்; எங்கள் அரசனாகிய சுக்கிரீவன் தந்த ஒருமாதமும் கழிந்தது; எங்களை இக்குகையிலிருந்து வெளியில் கொண்டுபோய் விடவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான். அவள் அவர்களைக் கண்ணை மூடிக்கொள்ளச் சொன்னாள். அவர்கள் அவ்வாறே செய்தார்கள். உடனே அவள் அவர்களை வெளியே கொண்டுவந்து விட்டு வாழ்த்திக் குகையினுள்ளே சென்றாள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

அனுமான் முதலியோர் அடைந்த காடு பாழாகக் கிடந்ததற்குக்காரணம் கண்டு முனிவன் சாபமாம். தன்னுடைய மகன் வழிதப்பி மடிந்தனனென்றால் அதற்குக் காடென்ன செய்யும்? காடு உயிர்ப் பிராணியா? உயிர்ப்பிராணியாயினும் அறிவுடையதாயின் அன்றோ வழிதப்பியவனுக்கு வழிகாட்டும்? இவ்வளவு கூட அறிவில்லாத ஒருவன் முனிவனாம்! அவன் அறிவிலனாய் கூறிய தீயசொல் பலித்ததாம்; அதனாலேயே அக்காடு உயிர்ப் பிராணிகளற்றுப் பாழாயிருந்ததாம்; என்னே பாருங்கள் இவ்வாரிய முனிவருடைய அறிவுடைமையை! இத்தகையகதைகளையும் மெய்யென மயங்கிப் படிப்போரும் உளரே! அது எதனால்? கல்வி அறிவில்லாமையினாலல்லவா? அறிவென்பது ஒரு சிறிதும் மற்ற மிருகத்தினும் கேடு கெட்ட கண்டு முனிவனை ஒரு பாவமும் அறியாத காட்டைச் சபித்தானே அதனால் அக்காட்டில் வாழும் உயிர்ப் பிராணிகள் அழிந்து அது பாழாயிற்று என்பது மதியிலாதவர்களுக்கு நடைபெற்றதென நம்ப முடியாத வீண் கதையாகவன்றோ உள்ளது; இவ்விதமான இழிந்த கதைகள் மலிந்து கிடக்கும் இராமாயணத்தை இனியாவது உண்மையில் இத்தகையதென உணர்ந்து அறிஞர் ஒதுக்குவார்களாக.

குகைக்குள் அரக்கனைக் கண்டவுடன் தமது ஆடைகளை இறுக்கிக் கட்டிக்கொண்டு போருக்குத் தயாராயினவாம்! இவை உண்மையில் குரங்குகளானால் இவைகளுக்கு ஆடையேது? இதனை முன் கட்டுரைகளிலும் குறித்தோம். இந்த வீரர்களெல்லாம் வானரர் என்று வால்மீகி கூறுபவரெல்லாரும் உண்மையில் மக்களே; குரங்குகளல்லர் என்ற உண்மையை மெய்ப்பிப்பன அல்லவோ?

இந்திரனென்ற பாதகனுடைய கொலை பாதகச் செயலை இவ்வரலாற்றுப் பகுதியிலும் காண்கின்றோம். மயன் தனது மகளாகிய மண்டோதரியை இராவணனுக்கு மணம் செய்து கொடுத்ததாலும் ஏமையென்ற தேவப் பெண்ணை விரும்பியதாலும் இந்திரன் அவனைக் கொன்றானாம்! இந்திரன் தேவர்களுக்கெல்லாம் அரசன். இவன் ஒருவனைக் கொல்லுவதற்குக் கொள்ளும் காரணங்களைப் பாருங்கள்! இவ்வளவு அறிவு கெட்ட கொலை பாதகனும் பெரிய தாயாரின் உடலினுட் புகுந்து கரு வழித்தவனுமாகிய இச்சண்டாளனுடைய இந்திரனுக்கு திருமால், நான்முகன், சிவன் முதலிய தெய்வங்களெல்லாம் உதவிசெய்து வந்தனவாம்! அவ்வாறாயின் அத்தெய்வங்களின் இயல்புதான் எவ்வாறு இருந்திருக்க வேண்டும்? அறிஞரே சிந்தித்துணர்ந்து கொள்ளுங்கள்.

குகையினுள் அகப்பட்டுக்கொண்ட அனுமான் வழி தெரியாது வெளிவரமாட்டாமல் தட்டழிகின்றனன். பின் அவன் சுயம்பிரபையைப் பணிந்து வேண்ட அவள் அவர்களைக் கண்ணைமூடச் செய்து வெளியில் கொண்டுவந்து விடுகிறாள். இனி, கம்பர் புராணியைக் காண்பாம்.

கண்டு முனிவனுடைய அறிவில்லாத சாபத்தைக் கம்பர் கூறாது மறைத்துவிட்டார். மேலும் அங்கதன் அரக்கனைக்கொன்ற பின்னரே அவர்கள் குகையினுட் புகுந்தனராகக் கம்பர் பிலம் புகுந்து வெளிவந்த பின்னரே அரக்கனைக் கண்டனர் என்று கூறுகிறார். வானரர்களனைவரும் பிலம் புகுந்தனரென வால்மீகி கூறக்கம்பர் பிலம் புகுமுன் அனுமான் முதலிய சில வீரர்மட்டும் தனித்து ஏனைய சேனையை முழுவதும் பிரித்து மகேந்திர மலையில் வந்து தம்மைக் கூடும்படி அனுப்பிவிட்டு தாம் பாலைவனங் கடந்து பிலம் புகுகின்றனர் என்று கூறுகிறார்.

கம்பருக்கு அனுமானை அளவில்லாத ஆற்றலுடையவனென்று பலவாறு புகழ்ந்து உலகத்தாரை ஏமாற்றவேண்டும்; அதற்காக அவன் பிலம் புகுந்த கதையை மாற்றி எழுதுகிறார். அதாவது பிலம் புகுந்தபோது வானரர் அனைவரும் வழிதெரியாமல் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டு சென்றனரென வால்மீகி கூறியிருக்க கம்பர் வழி தெரியாது அவர்கள் முறையிட்டதாகவும் உடனே அனுமான் அவர்களைத் தன் வாலைப் பிடித்துக் கொண்டு வரும்படி செய்து உள்ளே அழைத்துப் போனான் என்றும் கூறுகிறார்.

கம்பருக்கு எக்காலது ஒரு பெண்ணைப் பற்றிக் கூற வேண்டுமாயின் அவளுடைய கொங்கையை விவரிக்காதுபோனால் தூக்கம்வராதுபோலும் இவ்வுண்மையை நாம் நெடுக எடுத்துக் காட்டி வருகின்றோம் கம்பருக்கு கவித்திறம் எவ்வளவிருந்தாலும் இச்செயல் அவருடைய பெருமையை முழுதும் குறைத்தே விடுகின்றது. வானரர் தெய்வத் தவத்திருந்த சுயம்பிரபையைக் கண்டனர் எனக் கூறிய இடத்தில் அவளைப் பற்றி அவர் நான்கு பாடல்கள் பாடுகிறார். (பிலம்புகு படலம் 46-49) அவைகளுள் இரண்டு பாடல்களில் அவர் தமது கருமத்தை நிறைவேற்றுகிறார். அவை வருமாறு:—

(பாடல் 46)

"மருங்கு அலசவற் கலைகரிந்து
வரிவாளம்
பொரும் கலசம் ஒக்கும் முலை
மாசு புடை பூசி
பெருங்கலை மதித்திரு முகத்தள்
பிறழ் செங்கேழ்
கருங்கயல் களிப்புறவு மூக்கினுதி
கண்ணாள்"

(பாடல் 47)

"தேர் அனைய அல்குல் செறிதிண்
கதலி செப்பும்
ஊருவினொ(டு) ஒப்புற ஒடுக்கி
உறவொல்கும்
நேரிடை கலிப்புற நிறுத்தி
நிமிர் கொங்கைப்
பாரமுள் ஒடுக்குள உயிர்ப்
பிடை பரிப்ப"

தவத்திற் சிறந்த பெண்ணொருவளை விவரிக்கும்போது அவளுடைய தவக்கோலத்தையும் பெருமையையும் விவரிப்பதை விடுத்து அவளுடைய கொங்கையையும், இடையையும், தொடையையும், ஏனைப்பாகங்களையும அல்குலையும் விவரிப்பதுதான் தெய்வப்புலவர்களது இலக்கணம்போலும்!

சுயம்பிரபையைக் கண்டபோது வானரர் சீதையோ என ஐயுற்று அனுமானை ஆராயவேண்டினரெனவும் அவன் ஆராய்ந்து அல்லள் என்றனனெனவும் கம்பர்புதுக்கதைபுனைகிறார். நான்முகன் ஏவலால் தனது தோழியினுடனிருந்த சுயம்பிரபையை மிகவும் கேவலமானவளாகக் காட்டக் கருதி தமது மனம் போல் அவர் மயனுடைய ஏவுதலால் தேவதாசிகளுள் ஒருவளை அவன் கூட்டி வந்து மயனிடம் சேர்த்தாள் எனக்கூறுகிறார். அவ்வரம்பையைக் கூறும்போதும் அவள் கொங்கையைக் கம்பர் மறவாது கூறிமகிழ்கிறார். (பாடல் 59). தேவதாசியைத் தேடி வந்து கண்டு இந்திரன் மயனைக் கொன்று குகைவழி இருளடையச் சபித்துச் சுயம்பிரபையைக் காவல் வைத்தகன்றனனெனவும் அவள் இந்திரனிடம் சாப விடை கேட்க இராமனுடைய தூதர்களாகிய வானரர்கள் அங்கே வரும்போது சாபம் நீங்குமென இந்திரன் கூறினனெனவும் அந்நாளை எதிர்பார்த்து அவள் தவங்கிடந்தாளென

(தொடர்ச்சி 17-ம் பக்கம்பார்க்க)

# ஆதனூரில் பெரம்பலூர் தாலூகா 2-வது ஆதிதிராவிடர் மகாநாடு

## திரு: பொன்னம்பலனார் தலைமை வகித்தார்

பெரம்பலூர் தாலூகா இரண்டாவது மகாநாடு 1-10-29ந் தேதியன்று கூடியது. இம்மகாநாட்டிற்கு தலைவராக திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமை வகிப்பார்கள் என்று எதிர்பார்த்தபடி முடியாத காரணத்தால் திரு. அ. பொன்னம்பலனார் அவர்களைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பெற்றது. திரு. பொன்னம்பலனார், சாமிநாதன், சிவபிச்சை ஆகியவர்கள் 1-10-29ந் தேதி செவ்வாய்க்கிழமை யன்று விழுப்புரம் மார்க்கமாக ரயிலில் காலை அரியலூர் வந்து 11-மணிக்கு இவ்வூர் வந்து சேர்ந்தார்கள்.

ஆயிரக்கணக்கான மக்கள் மேளவாத்தியம் பறைஒலியுடன் வரவேற்று மலர் மாலை சூட்டி இருப்பிடத்திற்கு அழைத்து சென்றார்கள். பின் சிற்றுண்டி நடைபெற்றது. பல கிராமங்களிலிருந்து நூற்றுக்கணக்கான மக்கள் வாத்தியங்களுடன் ஆண்களும் பெண்களுமாக வந்து மகாநாட்டுப் பந்தலில் ஆயிரக்கணக்காகக் கூடியிருந்தார்கள். தலைவரவர்களையும் மற்றவர்களையும் மகாநாட்டுப் பந்தலுக்கு 12-மணிக்கு வாத்தியங்களுடன் அழைத்துச் சென்றார்கள். மகாநாடு ஆரம்பமாயிற்று. முதல் லேபர் ஸ்கூல் மாணவர்களால் அரச வாழ்த்தும் சுயமரியாதைக் கீதமும் பாடப்பெற்றது. பின்னர் தலைவராக திரு: அ. பொன்னம்பலனார் அவர்களை பிரேரணை செய்து ஆமோதிக்கப் பெற்றபின் மகா நாட்டினரால் ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்து மலர்மாலை சூட்டினார்கள். திரு: பொன்னம்பலனார் அவர்கள் தலைவர் பீடத்தமர்ந்து செய்த பிரசங்கத்தின் சாரம்.

### முன்னுரை

பெருமை வாய்ந்த பெரியோர்களே பிரியமுள்ள இளைஞர்களே! இன்று உங்கள் மகாநாடு இங்கு நடைபெறப் போகின்றதென்பதை எதிர்பாராதவாறு நேற்றுதான் திருச்சியில் அறிந்தேன். நான் உங்கள் மகாநாட்டிற்கு தலைமை வகிக்கும்படி நேரும் என்று கருதவே இல்லை? தமியேனும் அதற்கு தகுதியுடையவனல்ல? தமியேன் போன்ற இளைஞர்களெல்லாம் உத்தம தலைவர்கள் வழிநின்று தொண்டு ஆற்றவேதான் அவசியமே யொழிய தலைமைப்பதவி தாங்க வேண்டுவதே இல்லை. அதிலும் பெரியார் திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களை எதிர் பார்த்திருந்த பீடத்திற்கு தமியேன் போன்ற ஆற்றலற்றவர்களை அங்கிலைக்கு ஆளாக்குவது ஏற்றதல்ல என்றாலும் மகாநாட்டினர் முடிவையும் அன்பர்களின் அமுத மொழியையும் பெரியார் வரமுடியாத நிலைமையையும் கருதி தாங்கள் அடியேன் மீது அன்பு கூர்ந்து இட்ட பணியினை எமது பெரியவர் வழிநின்று தங்கள் மகாநாட்டைச் சிறப்புற நடத்திவைக்க முயல்வதுடன் அன்பு கூர்ந்து அளவுக்கு மீறி புகழ்ந்தளித்த வரவேற்புப் பத்திரத்திற்கும் எனது நன்றியை செலுத்துகின்றேன்.

### மகாநாடு

"மகாநாடு" என்பது இதுபோது எங்கும் காட்டுத் தீபோல் பரவி ஒவ்வொரு சமூகமும் கிராமமும், நகரமும் கூடி தாலூக்கா ஜில்லாவாரியாக மகாநாடு கூட்டவும் தங்கள் தங்கள் குறைகளைப் போக்கவும் சீர்திருத்தமடையவும் முன்னேற்றத்திற்கான பல ஆலோசனைகளை செய்வதும் அவமரியாதை நீங்கி சுயமரியாதையுடன் வாழவும் அடிமை வாழ்வினின்று நீங்கி சுதந்திர வாழ்வு பெற விரும்புவதும் அதற்கெனபல தீர்மானங்கள் செய்து அவ்வழி பிரசாரகர்கள் நிறுவி தீவிரமாகவும் திடமாகவும் விழிப்புற்று வேகமாகப் போய்க்கொண்டிருக்கின்ற இச்சமயத்தில் "மகாநாடு" என்றால் என்ன என்பது பற்றி விளக்க வேண்டுவதில்லை நீங்கள் இன்று ஆயிரக்கணக்காககூடி இருப்பதும் அளவுக்குமீறிய கஷ்டங்களையும் உள்ளூர் பிரமுகர்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஒன்றுபட்டு இரண்டாவது மகாநாடு கூட்டி இருப்பதானது பொழுது போக்கிற்கோ வேடிக்கைக்கோ இல்லவே இல்லை என்பதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் இத் தாலுகாவில் இக்கிராமத்தில் இம் மகாநாடு கூட்டவேண்டிய அவசியம் என் ஏற்பட்டது? வறுமை அதிகத்தால் கஷ்டம் பொறுக்கமுடியாததால் கொடுமை சகிக்க முடியாததால் கல்வி, கைத்தொழில், உணவு, உடை, இடம், உரிமை, தன்மதிப்பு ஆகியவைகள் பாதிக்கப்பட்டு பல வீனர்களாக வாழ்கின்றோம் என்பதை ஒருவர் இருவர்பகுத்தறிந்தபின் மற்ற சமூகங்கள்முன்னேற்றத்தைப் பின்பற்றி உங்கள் முன்னேற்றத்திற்காக நீங்களும் இன்று மகாநாடு கூடி இருக்கின்றீர்கள். உங்கள் முன்னேற்றத்திற்கு அவசியமான சில வற்றைப்பற்றி இங்கு பேசலாமென்று கருதுகிறேன்.

### தீண்டாமை

தீண்டாமை என்றால் என்ன என்பதுபற்றி கிராமவாசிகளாகிய உங்களுக்கு நன்றாய் தெரியும். தீண்டாமை ஒழியவேண்டுமென்று கூறும் போது இங்குள்ள உங்களிற் பலருக்கு பயமாகக்கூடத் தோன்றும். என்? நீங்கள் அதன் ரகசியத்தைத் தெரியவேண்டிய அவசியமில்லாமல் போனதுடன் அறிவுவளர்ச்சிக்கான கல்வி இல்லாக் குறைவுமேதான் அதற்குக் காரணம். ஒரு நாட்டில் உள்ள மக்கள் சுதந்திரம் பெற்றவர்களாக இருப்பதற்கும் மற்ற ஒரு நாட்டினர் அடிமை வாழ்க்கையிலிருப்பதற்கும்காரணம்தீண்டாமையே. நமது நாட்டை பொறுத்தமட்டில் தீண்டாமை என்ற கொடும் வியாதி கிராமங்களிலும் கல்வியற்றவர்களிடத்திலும் இதுபோது பீடித்திருக்கிறது. மக்கள் பிறவி தாங்கியுள்ள ஆறுகோடி மக்களை துன்புறுத்துகிறது. ஆறுகோடியுள்ள எங்களை ஆதி திராவிடர், பறையர், தாழ்ந்தோர், தீண்டாதார் என்று கொடுமைப் படுத்துவதோடு மதம் கடவுள் புராணம் ஆகியவைகளின் பெயரால் பிராமணன் என்பவனிலிருந்து படிப்படியாக செட்டி, பிள்ளை, முதலி, நாயுடு, ரெட்டி, கோமுட்டி, ஆசாரி, படையாச்சி, கவுண்டர், கோனார், என பல நூற்றுக்கணக்காக பிரிவுற்று ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு கற்பித்துக்கொண்டு அவர்கள் நிலைக்கு ஒத்த இழிவுக்கு ஏற்ப புராணம் பார்த்து பெருமை பாராட்டிக் கொண்டு எல்லாப் பிரிவுகளிலும் கடைசியான ஜாதி என்றும் ஈனய பிரிவான எல்லா ஜாதியினர்களுக்கும் உழைத்து இழிதொழில் செய்து ஏவல் புரியவே நீங்களெல்லாம் பிறந்து வாழ்கின்றீர்களென்றே இதுகாறும் கூறி வந்திருக்கிறார்கள்; வருகின்றார்கள். இனி அது முடியாது. இதுபோது உங்கள்சேரிக்குள் பத்து பதினைந்து பேர்கள்படித்தவர்களாகவும் பகுத்தறிவுள்ளவர்களாகவும்உலகப்போக்குதெரிந்தவர்களாகவும் மகாநாடு கூட்ட வேண்டிய அவசியம் உணர்ந்தவர்களாகவும் போய்விட்டதாலும், தீண்டாமை என்ற கொடிய பேய் இந்நாட்டை விட்டு தொலையவேண்டுமென்று பலதியாகிகள் உண்மைத்தொண்டாற்றிபெரும் பாடுபட்டு வருவதினாலும், கூடிய விரைவில் இப்பேயை நம் நாட்டை விட்டு ஓட்டிவிட முடியுமென்றுதான் எம்போன்ற இளைஞர்கள் முனைந்து தொண்டில் நிற்கின்றோம். உங்களைத் தீண்டாதார் என்று கூறும் பழக்க வழக்கம் தொலைய வேண்டுமென்பது மட்டுமல்ல? அதன் பெயரால் செய்யப்படும் அநேக கொடுமைகளும் தொலையப்படவேண்டும். அதற்காக நாம் எவருக்கும் அஞ்ச வேண்டுவதில்லை. ஆனால், ஆரம்பத்தில் பல எதிர்ப்புகளும் இடுக்கண்களும் தோற்றினாலும் அதைப் பொருட்படுத்தாமல் நமது முன்னேற்றத்தில் கருத்துடையவர்களாகவும் திடமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

### பொது உரிமைகள்

மக்கள் பிறவி தாங்கியுள்ள உங்களை தீண்டாதார் என்று வாயினால் கூறிக் கொண்டிருப்பதோடு மட்டுமல்லாமல் பொதுவான ரஸ்தாக்களில் வீதிகளில் நடக்கக் கூடாதென்று தடைசெய்கிறார்கள்; நடக்கும் போது சமீபத்தில் நின்றால் குற்றம்; நிழல் பட்டால் குற்றம்: குடை பிடித்தால்குற்றம்; கைவீசிநடந்தால்குற்றம்; காலில் செருப்பு அணிதல் குற்றம்; என்ன கொடுமை? எவ்வளவு கட்டுப்பாடுகள் கூறி ஒரு அறிவுள்ள மனிதனை கொடுமைப் படுத்துகின்றார்கள்? அவைகளை ஜாதி இறுமாப்பால் பணத்திமிரால் பழக்க வழக்கத்தால் பகுத்தறிய வேண்டிய அவசியமில்லாமல் ஆணவங்கொண்டு சகிக்க முடியாத அட்டூழியங்கள் புரிகின்றார்களே தவிர வேறில்லை. எந்த வீதியில் ஒரு மனிதனை நடக்கக்கூடாதென்று இழிவு படுத்துகிறார்களோ அந்த வீதியில் மலந்தின்னும் பன்றியும், குப்பை தின்னும் கழுதையும், நாய், ஆடு, மாடு, கோழி, ஆகிய ஜீவராசிகள் நடமாடுவதிலும் வீட்டுத் திண்ணைகளில் ஆபாசப்படுத்துவதிலும் அடுப்பங்கரைவரை நாயும் கோழியும் உணவுப் பொருள்களில் வாய் வைத்துப் போவதிலும் ஆகிய வைபவங்களை சகித்துக் கொண்டிருந்தாலும் இருப்பார்கள். காரணங்கேட்டால் ஜீவகாருண்யமுள்ள சிலரும் அருட்பாவின் ஆறுவது திருமுறையும் அதன் ஆசிரியர் வடலூரார் பெருமையும் கூற வருவார்கள். இந்த ஜீவகாருண்ய சீலர்களுக்கு நல்லபாம்பு, நட்டுவாக்காலி, தேள், கருடன், மாடு, ஆடு, கோழிதான் தெய்வங்களாகவும் அதன் வாகனங்களாகவும் தோன்றுகின்றதே தவிர மனிதப்பிறவி தாங்கியுள்ள மக்கள் மிருகங்களிலும் இழிவாகப் புலப்படுகிறது இவர்களின் தெய்வபக்தியும் ஜீவகாருண்யமும் இருந்தவாறென்னே! இத்துடன் மட்டுமல்லாமல் பொதுப்பள்ளிக்கூடங்களுக்கு படிக்கவரக்கூடாதென்றும் பொதுக்கிணறுகளிலும் ஆறுகளிலும் தண்ணீர் எடுக்கக் கூடாதென்றும் நகர் வீதிகளுக்கு வெளியேதான் குடியிருக்கவேண்டுமென்றும் கோவில்தபாலாபீஸ் நீதிஸ்தலம் ஆகியவைகளில் கூட எத்தனையடி தூரம் ஒதுங்கிநிற்க வேண்டுமென்றும் கொடுமைப்படுத்துகின்றார்கள். அரசாங்கத்தினரால் உங்களைக் கொடுமைப்படுத்தவோ இழிவு படுத்தவோ கூடாதென்றும் சமத்துவமாக பொது ஸ்தாபனங்களில் நடத்தவேண்டுமென்று சட்டமிருந்தும் சட்டப்படி நடத்தப்படுவதுமில்லை. அதற்கு போராடவாயும், வலிமையும் உங்களுக்கு இல்லாமல் இருந்தது. ஆனால் இதுபோது உங்கள் குறைகளைப் போக்கவேண்டே அரசாங்கத்தினரால் பலவித வசதிகள்செய்து இருப்பதால் அடிக்கடி உங்களுக்கு ஏற்படும் குறைகளையும் இழிவையும் இதுபோன்ற மகாநாடுகளில் தீர்மானம் செய்து அரசாங்கத்தினர்க்கு அனுப்பவேண்டும். அதுவும் பயனில்லாமல் போனால் "சத்தியாக்ரகம்" ஆரம்பித்து

எவ்வகையிலும் இழந்துள்ள உரிமையையும் இனி வரவேண்டிய உரிமையையும் பெறுவதற்காக வேண்டி போராடினால்தான் முடியுமென்று உங்களுக்கு எச்சரிக்கை செய்கின்றேன். உங்கள் குறைகளும் இழிவும் இதுபோதுள்ள அரசாங்க காலத்திலேயே போராடி வெற்றியும் விடுதலையும் பெற்றுவொழிய ஆஸ்திகர்கள் வரவேண்டுமென்று எதிர்பார்க்கின்ற சேர சோழ பாண்டிய இராம ராஜ்ய காலம் வந்தாலும் அவைகளால் உங்கள் போராட்டம் பலனும் முடிவும் ஏற்படாமல் போவதோடு "நந்தனார்" என்பவருக்கு கைலாச பதவி நெருப்புச் சட்டிக்குள் கிடைத்ததாகக்கூறும் கதையாகவே தான் முடியுமென்றும் ஞாபக மூட்டுகிறேன்.


### மூடப்பழக்க வழக்கங்கள்

இதுபோதுள்ள குறைபாடுகள் நீங்கி முன்னேற்றமடையவேண்டுமானால் உங்களை இழிவுபடுத்தச் செய்கின்ற சில மூடப்பழக்க வழக்கங்களை விட்டுவிடவேண்டும். அதாவது; சாமியாடுதல், வேல தாங்குதல், காது காத்தல், ருட்டி குடித்தல், மாம் ஏறுதல், காப்புக் கட்டிக் கொள்ளுதல், எலுமிச்சை சட்டி உடைத்தல், பிரார்த்தனைசெய்தல், காணிக்கை போடுதல், காளி மாரி வீரன் கருப்பன் பூஜை போடல், கோவில் கட்டுதல், உற்சவம் செய்தல் போன்ற கண் மூடித்தனங்களும், நாம் மனிதப் பிறவியிலேயே வடைபட்டவனுக தீண்டாதவனுக கல்வியின்றி உணவின்றி உடையின்றி இடமின்றி தொழிலின்றி நாடு விட்டு கிராமம் விட்டு கப்பலேறிப்போய் தோட்ட வேலை செய்யவும் பிறந்த நாட்டிலிருந்தால் உழைத்த உழைப்புக்குக் கூடகூலி கேட்கப் பயந்து கொடுத்ததைப் பெற்று அதிலும் பாதி கள்ளைக் குடித்து விட்டு கண்கலங்கி நிற்கவும், பெண்டு பிள்ளைகள் துன்புற்று நிற்கவும், பாடைகட்டவும், பிணஞ்சுடவும்பறையடிக்கவும், செத்தமாடு புதைக்கவும், நாள் முழுதும் உழைத்தும் நல்ல பெயரில்லாமல் கருணையில்லாமல் நடத்தினாலும் சகித்து இருந்து உயிர் மடிய வேண்டியதுதான். பறையன் பறையன்தான். பார்ப்பான் பார்ப்பான் தான் என்ற பகுத்தறிவற்ற பல்லவி பாடி தன்னம்பிக்கையற்று தயங்க வேண்டுவதில்லை என்று ஞாபகமூட்டுகின்றேன். வயிறு வளர்ப்பது பெரிதல்ல? உயிர்வாழ்வது பெரிதல்ல. தன்மதிப்போடு வாழ்தலே பெரிது. எனவே உங்கள் வறுமையான வாழ்க்கையில் பழக்கவழக்கம் என்றதின் பெயராலும் கடவுள் பக்தி என்றதின் பெயராலும் நீங்கள் கொடுமைக்குள்ளாக்கப் பட்டது போதும். அந்தக் கடவுள்கள் உங்களுக்கு சாதித்ததும் போதும். இனி அவைகளை யெல்லாம் உங்கள் முன்னேற்றத்திற்காக உபயோகப்படுத்துங்கள்.

### கடமை

கடவுள் செயலென்றும், தலைவிதி என்றும் புண்ணியவச மென்றும்

## நெல்லூர் மகாநாட்டு தலைவர்களும் பிரதிநிதிகளும்



இப்படத்தில் திருமதி இந்திராணி பாலசுப்பிரமணியம், அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள், ராவ்பகதூர், முனிசாமி நாயுடு, டாக்டர் நடேச முதலியார், வெங்கடகிரி குமார ராஜா, ராமச்சந்திர ரெட்டி முதலியோர் காணப்படுகின்றனர். [போட்டோ நியூஸ் ஏஜன்ஸி]

புலம்பாதீர்கள். ஒரு மனித சமூகத்தை வறுமையாலும் இழிவாலும் துன்புற்று மண்வெட்டிப் பிழைத்தே கஞ்சி இன்றி மடியச்செய்வதும், மற்றொரு மனித சமூகத்தை திருச்சிடம் விட்டு அசையாமல் அறுசுவையுண்டு அலங்கிருதமாக இன்புற்று வாழச்செய்து உயர்ந்தவர்களாகவும் பணக்காரர்களாக்குவதும் ஆகிய செயல்கள் கடவுள் செயலாகவேதான் நடக்கின்றதென்று கூறினுல், அந்தக் கடவுளையும் அந்தக் கடவுளால் உயர்வும், சிறப்பும் பெற்ற ஒரு கூட்டத்தோடும் நாம் ஆண்மையோடு நின்று அவசியம் ஏற்பட்டால் உயிரைத் தியாகஞ் செய்தாகிலும் உண்மையை நிலை நாட்டுவதே நமது கடமை என்று போராடவேண்டும். இன்று வடநாட்டில் வைதீகர்கள் தீண்டாதாருக்கு ஆலய உரிமை யளிக்க உறுதி கூறியளித்ததும், ஒவ்வொரு கல்லூரிகளிலும் ஹைஸ்கூல்களிலும் நூற்றுக்கணக்கான உங்களவர்கள் படிக்கவும் முன் பதட்டப்பட்ட பார்ப்பார பண்டிதர்கள் இன்று தலைகுனிந்து பாடல் கூறுவதும் தாலூகா போர்டு ஜில்லா போர்டு சட்டசபைகளில்இன்றுஉங்களன்பர்கள் இடம் பெற்றிருப்பதும் தெய்வச் செயலாலும் புண்ணியவசத்தாலும் ஏற்பட்டதல்ல. அவர்கள் முயற்சியும்தன்னம்பிக்கையும் பகுத்தறிவு வளர்ச்சியும் கடமை வழி நின்று ஆற்றியதாலேயேயாகும். அநாதையற்ற ஆதரவற்ற சமூகம் என்பவர்களின் கவனிக்கவும் ...கொடுக்கவும் அரசாங்கம் இருக்கும் போது கண்ணுக்கும் அறிவுக்கும் பொருந்தாத ஒன்றின்மேல் பழி போட்டு வாளாகிடப்பது உடம்பில் வலுமையற்றவனும் ஒருவர் உழைப்பைத்தின்று உடம்பு அசையாது உண்டு சுகம் அனுபவிக்கும் சோம்பேரிகளும் தரகர்கள் முதலாளிகள் மடாதிபதிகள் குருமார்கள் கொள்ளைக் கூட்டத்தார்கள் ஆகிய தன்னம்பிக்கையற்ற வாய்வேதாந்திகளின்வார்த்தை என்பதை ஞாபகத்தில் வைத்து உங்கள் முன்னேற்றத்திற்கு அவசியமாகவுள்ள கல்வியைப் பெற்று தைத் தொழில் உணவு உடை ஒழுக்கம் சட்டம் உரிமை ஆகியவைகளைப் பெற்ற அடிமை வாழ்வையும் அவமரியாதை நிலையையும் போக்கி முன்னேற்றம் அடைய வேண்டுவது உங்கள் கடமை என்பதையுணர்ந்து விடாது போராடினால்தான் நாம் வெற்றியும், விடுதலையும் அடைய முடியுமென்று எச்சரிக்கின்றேன்.

### முடிவுரை

இதுகாறும் உங்களுக்குக் கூறிய தெய்வப்புராணங்களிலிருந்தோபுதிதாகக்கண்டுபிடித்தோ ஒன்றும் கூறி விடவில்லை எல்லாம் உங்கள் கண் முன் பார்ப்பதும் கேட்பதும் ஆகிய கொடுமைகளையே தான் நானும் கூறினேனே யொழிய வேறில்லை. நாம் எவருக்கும்கொடுமைசெய்யவோ பிறர் உழைப்பை கொள்ளையடிக்கவோ ஏமாற்றிப் பிழைக்கவோ, கெடுதலைப் போகவோ முயன்றதில்லை. எவ்வளவு கொடுமைப்படுத்தப்பட்டாலும் அவமதித்து இழிவு படுத்தப்பட்டாலும் தீமைபுரிந்தவருக்கே நன்மை பயக்குவதே எமது கடமை உறங்கியிருந்த நீங்களும் விழித்து விட்டீர்கள்; உங்கள் விழிப்பும் முன்னேற்றமும் கண்டு பொறுமையடைந்து இதுபோதுள்ள நிலையிலும் கொடுமைப் படுத்த முயல்வார்களேயானுல் ஒரு யானை தன்பாகன் கொடுமை சகியமல் கவலையுற்று உணவற்று ஆலேசித்து கண்கலங்கி மதம் கொண்டவ் நேரத்திலும் யானைப்பாகனுடைய தொல்லை பொறுக்க முடியாமல் கொடுமை படுத்தப்பட்டால ஈட்டியால் குத்தப்பெற்றால் அது என்ன செய்யும்? பாகனை நேசிக்குமா? தன்னைக் கட்டியுள்ள கயிற்றை அவிழ்க்குமா? இல்லை. வீதி என்றும் மாட மாளிகை கூட கோபுரம் அரச வீதி பழத் தோட்டம் மார்க்கட்டு ஜனக் கூட்டம் பாகன் ஈட்டி என்று பார்த்து போகாது இடித்துக்கொண்டும் மிதித்துக்கொண்டும் சேதம் கருதாது தனது உயிர் போகும் வரை கட்டுப் பாட்டுக்கு அடங்காமல் திரியும் இதுதான். கொடுமைக்குள்ளாகு பவர்களின் முடிந்த முடிவான நிலை. ஆகவே, உங்கள் நோக்கம் சமத்துவம் கல்வி தொழில் உணவு உடை இடம் உரிமை ஆகியவைகளிலேயே கருத்துடையவர்களாகவும் திடம் பெற்றவர்களாகவும் இருக்கவேண்டுமென்று கூறுகிறேன். ,,காலத்தையும் நீங்கள்

# புராண ஆபாசங்கள்

## மாறுவேடம் பூண்டு புராண ஆபாசத்தை வெளியாக்கும் இரு இளைஞர்கள்

[தரும பரீக்ஷை என்னும் பண்டைய ஓலைச் சுவடியிற் கண்டது]

(இடம்: பாடலீபுத்திரம் பிரம்மாலயம்)

(முன் தொடர்ச்சி)

3-ம் நாள்

மனோவேகன், வாயுவேகன் என்ற நம் நண்பர்கள் ரிஷி ரூபந் தரித்துக் கொண்டு மூன்றும் நாள் பிரம்மாலயத்தின் வாயு மூலையில் சென்று அங்கு கட்டியிருக்கும் பேரிகையை அடித்து சிம்மாதனத்தில் வீற்றிருந்தார்கள், உடனே பொது ஜனங்கள் வெகு ஆவலுடன் வந்து கூடினார்கள். விப்பிரஜனங்கள்சப்தங்கேட்டு பிரம்மாலயம் புகுந்து சிம்மாதனத்தில் வீற்றிருக்கும் இரண்டு ரிஷிகளையுங்கண்டு சுவாமி ரிஷிகளே! அச்சிம்மாதனத்தில் எங்களுடன் வாதத்தில் ஜெயிக்கப்பட்டவர்களேயன்றி ஏனையோர் அவ்வாசனத்தில் அமரக்கூடாது என்றனர். உடனே இரு ரிஷிகளும் எழுந்து உங்களுடன் என்னவாதம் புரியவேண்டும் கூறுங்கள் என்றனர். நம் வாதம் ஆரம்பிப்பதற்கு முன் தாங்கள் யார்? எந்த குருவினிடத்தில் வாசித்தீர்கள்? அல்லது நீங்கள் யாருக்காகிலுங் குருவாகவிருக்கின்றீர்களா? நீங்கள் தவவேடம் பூண வேண்டிய வைராக்கியம் வந்த காரணம்யாது? என்பதை விளக்கக்கூறி பிறகு தங்கள் வாதத்தை ஆரம்பிக்கலாம் என்று விப்பிரர்கள் வினவினார்கள். ஐயா விப்பிரர்களே! எங்களுக்குகுருவுங்கிடையாது, சிஷ்யாளுங்கிடையாது. இந்தவேடத்திற்கு வைராக்கியமும் எவராலும் நேரவுமில்லை. நாங்களே வேஷமும் தரித்ததல்ல. விதியால் வந்தவேடமிது வென்றனர். விப்பிரஜனங்கள் ஆச்சரியமுற்று வந்தவினையை அறியக் கூறுங்களென்று வேண்டினர். மனோவேகன் எழுந்து நாங்கள் அயோத்தியாபுரத்தில் சமுத்திரதத்தன் என்னும் வணிகனுடைய புதல்வர்கள் நாங்கள் வேடிக்கையாக காட்டில் உலாவச் சென்றோம். அப்பொழுது ஒரு யானை மதங்கொண்டு மரங்களை முறித்துத்தள்ளிக்கொண்டு வரும்போது எங்களையும் கண்டு துரத்த ஆரம்பித்தது. நாங்களும் நடுநடுங்கி ஓடி வருகையில் யானையும் பின்னே வரக்கண்டு இனி ஓட முடியாது என்று அந்த ஒரு ரிஷி தன்கமண்டலத்தைத் தும்பைச்செடியில் மாட்டிவிட்டு தபசிலிருந்தார். இதுவே சமயமென நாங்களிருவரும், மேல் மூடியைத் திறந்துகொண்டு உள்ளே புகுந்து கொண்டு மேல் மூடியை மூடி நாளிகா துவாரத்தை மூட மறந்துவிட்டோம். பின்னே ஓடிவந்த யானை நாங்கள் மறைந்திருக்கும் கமண்டலத்தை சுற்றிச் சுற்றிப்பார்த்துக் கடைசியாக நாளிகா துவாரத்தின் வழியாய் உள்ளே புகுந்து எங்களைத் துரத்த ஆரம்பித்தது. உடனே நாங்கள் ஓட யானை துரத்த, இரண்டுவாரம் உள்ளேயே சுற்றிச் சுற்றி ஓடி ஓடி கடைசியாக நாளிகா துவாரத்தின் வழியாய் வெளியே வந்துவிட்டோம். யானையும் அவ்வழியாகப் பின்தொடர்ந்துவர, அதனுடைய வால் மயிர் நாளிகாதுவாரத்தின் வெளிப்புறத்தில் சிக்கிக்கொண்டு வரமுடியாமல் எங்கள் திசையை நோக்கிப் பார்த்துக்கொண்டு உடலெல்லாம் வெளியேயும் வால் மயிர் கமண்டலத்திலுமாய் நின்று விட்டது. நாங்கள் காடே சரணமாக கண்மண் தெரியாமல் ஓடிவரும் வேகத்தில் எங்கள் தலை மயிர்களும் வஸ்திரங்களும் வழிகளிலுள்ள முட் செடிகளில் சிக்கி அறுந்தும் கிழிந்தும்போக, கௌபீனந்தரித்துவந்த ரிஷிகளானோம். இதுவே எங்கள் வேடத்திற்குக் காரணமும்; இதுவே தலை தப்பி வரும் பிரயாணமுமென்றனர்.

இதைக் கேட்ட மஹா ஜனங்களும்விப்பிரர்களும் சிரித்துமகைகொட்டியும் சப்தமுண்டாக்கினார்கள். சப்தமடங்கியதும் விப்பிரர்கள் ஐயா அண்டப் புளுகர்களே! என்ன அநியாயம்! உங்களுடைய ரூபலாவண்ணியமும் கல்வி ஞானமும ஒருங்கே பெற்ற நீங்கள் இத்தகைய அபத்த மொழிகள் கூறலாமா? ஆ ஹா ஹா தும்பைச்செடியில்கமண்டலம்தொங்கினதாம்; இவர்களிருவரும் யானையும் உள்ளேபுகுந்துக்கொண்டார்களாம் இரண்டுவாரம் சுற்றினார்களாம்! பிறகு இவர்கள் நாளிகா வழியாய் வெளியே வந்து விட்டார்களாம்! யானைக்கு எல்லா பாகமும் வெளியே வந்தும் வால் ரோமத்தில் ஒன்று மாத்திரம் சிக்கிக் கொண்டு நின்று விட்டதாம்! இந்த ஆகாசப் புளுகை அறிவில்லா மூடர்களிடத்தில் சொல்லி கௌரவம் பெறலாமேயன்றி எங்களைப் போன்ற உயர்ந்த அறிவாளிகளிடத்தில் மொழிவது அடாதகத்தான் முடியுமென்று நகைத்தார்கள்.

மனோவேகன் பயமின்றி எழுந்து, ஹே! அறிவாளிகளே! உங்கள் மத புராணங்களில் இத்தகைய அசத்தியம் ஒன்றுமே இல்லையோ? கேளுங்கள் பொதுஜனங்களே! நீங்களும் கவனமாகக் கேளுங்கள்.

பிரம்மா உலகத்தை சிருட்டித்து விஷ்ணுவை ரட்சகனாக ஏற்படுத்த விஷ்ணுவும் உலகங்களை யெல்லாம் தன்னுதரத்திலே வைத்துக்கொண்டனன். அவ்வமயம் ஈஸ்வரன் திருவோடு எடுத்து பிச்சைக்குவர அகஸ்திய முனி ஈஸ்வரனைப் பார்த்து அதோ செடியில் தொங்கிக் கொண்டிருக்கும் கமண்டலத்துக் குள்ளேபோவென்று கூற ஈஸ்வரனும் அவ்வாறே சென்றனன். அக்கமண்டலத்துள் சகல சமுத்திரங்களும் அச்சமுத்திரங்களின் மத்தியில் பிரமாண்டமான ஒரு ஆல விருக்ஷத்தையும் அம்மரத்தின் ஓர் இலையில் பள்ளி கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவையும் கண்டு வெளிவந்தனன். பிறகு பிரம்மா அவ்வாறே சென்று கமண்டலத்திலுள்ள சமுத்திரங்களையும் ஆல விருட்சத்தின் இலையில் உறங்கிக் கொண்டிருக்கும் மஹா விஷ்ணுவையும் கண்டு பூலோகத்தைத் தேட யத்தனிக்கையில் மஹாவிஷ்ணு உறங்கிக் கொண்டே கொட்டாவி விட அப்போது பிரம்மா விஷ்ணுவின் வாயினுள் நுழைந்து வயிற்றுக்குள்ளேபோய் சகல பூமிகளையுங் கண்டுகளித்தனன். பூலோகத்தை வெளியே கொண்டுவர பிரம்மாவானவன் விஷ்ணுவினுடைய வயிற்றிலே இருந்து கொண்டு நிர்க்குதிக்காக நோக்கி கடைசியாக விஷ்ணுவின் நாபிக்கமலம் வழியாகவெளிப்படுத்த த்தனித்து சகல பூமிகளையும் நாபிக் கமலத்தின் வழியாக வெளிப்படுத்தி விட்டு தானும் வெளிவரும்போது விஷ்ணுவின் கமல மத்தியத்தில் சிக்க அவனும் கமலாசனனாக அவ்விடத்தமர்ந்தானென்று உங்கள் மதபுராணத்தில் இல்லையோ கூறுங்கள் என்றும் வாதித்து நின்றனன். விப்பிரர்கள் மறு உத்தரம் கூறாது மௌனமுற்றனர். பொது ஜனங்கள் பிரசித்தம் உண்டு! பிரசித்தமாயுண்டு! என்று கூவினர். மேலும் மனோவேகன் எழுந்து மற்றொன்று கேளுங்கள்! அஸ்தினாபுரத்தை ஆண்ட சத்தியசீல யுதிஷ்டிரனென்பான் பலவிதமானயாகங்கள் செய்ய வேண்டி விப்பிர பண்டிதர்களையும் நைமித்தகர்களையும் அழைத்து நாள் ஏற்படுத்தியபிறகு இந்த யாக பலத்தை அந்நியர்கைக்கொள்ளாமலிருக்க உபாயம் கூறுங்களென்று நைமித்தகரை கேட்டனன். நைமித்தகர்கள் ஆராய்ந்து பாதாள லோகத்தில் நகுதேவனென்றும் யோகேஸ்வரனென்றும் இருவர் உளர்; அவர்களை நம் யாகசாலைக்குக் காவல் வைத்து விடுவோமாயின் யாக பலத்தை அந்நியர் கைக்கொள்ள முடியாது என்று கூறினர். அரசன் அவர்களைக் கொண்டுவரும் சாமர்த்தியர் யாரென்று சிந்தித்துக் கடைசியாக பார்த்திபனைக் கண்டு குறையிரந்தனன். உடனே அருச்சுனன்காண்டிபம் தொடுத்து விட அது பாதாள லோகஞ் சென்றது. அதைக்கண்டு நாகராஜன் கோபத்துடன் வெளிவந்து அருச்சுனனோடு போர்புரிந்து தோல்வியடைந்தனன். நாகேந்திரன் அருச்சுனனை மெச்சி அவனுக்குத்தன் குமாரத்தி நாகதத்தையை விவாகஞ் செய்து கொடுத்து பிறகு நாகலோகத்திலிருந்து பிலத்துவாரத்தினால் சதுர் மகா சைனியங்களோடு பூலோகத்திற்கு வந்து யாகம் நடத்தி ஆட்டையும் குதிரையையும், மனிதனையும் பொசுக்கித் தின்றார்களென்று கூறியிருப்பது பொய்யா! மெய்யா! கூறுங்கள். அதுவுமன்றி ஒரு அங்குஷ்டத்தின் அளவுள்ள அகத்தியன் சமுத்திரத்தை இரு கைகளாலும் அள்ளிக் குடித்தானென்றும் கூறுகின்ற புராணம் உங்களிடத்தில் தானே இருக்கின்றது. அடா! சமுத்திரம், தீவு, பூமி, நதி, அதில் வசிக்கும் ஜீவராசிகள் இவைகளெல்லாம் ஒரு கமண்டலத்தில் தங்கியிருக்கும்போது இரு மனிதர்களும் ஒரு யானையும் ஒரு கமண்டலத்தில் இருக்கக் கூடாதா. ஐயா விப்பிரர்களே எங்களைப் பொய்யரென்று கூறுகின்றீர்களே! உங்கள் பொய்க் கதைகளை எந்த அறிவிலியினிடத்தில் கூறுவது. அறிவாளி உங்கள் புரட்டைக்கேட்பானா? அதன் வழி ஒழுகுவானா? எங்களை மூடர்களிடத்தில் சொல்லச் சொன்னீர்களே என்ன? மௌனம்; பதில் கூறுங்கள் என்றனன். உடனே விப்பிரர்கள்! நீங்களே ஜெயவாதிகள் என்று கூறிவிட்டு தரையைப்பார்த்துக்கொண்டே தங்களில்லம் போய்ச் சேர்ந்தார்கள். பொதுஜனங்கள் இவ்விரு இளைஞர்களையும் போற்றிப் புகழ்ந்தார்கள். இப்பொழுது தான் இப்புராணங்களெல்லாம் அண்டப் புளுகு, ஆகாசப்புளுகு என்று தெரிந்தது என்று பேசிக்கொண்டே ஜனங்களும் வீடுபோய்ச்சேர்ந்தார்கள்.

---

இனி கிராமங்களுக்கு தங்கள் தங்கள் இருப்பிடம் செல்லவேண்டிய அவசியத்தையும் கருதி எனது பிரசங்கத்தை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன். இதுகாறும் பொறுமையோடு இருந்து கேட்ட உங்களுக்கும் உங்கள் ஆயிரக்கணக்கானவர்கள் முன் கூட்டுறவினைப் பெரும் பாக்கியத்தை யளித்து அளவுக்கு மீறிய கஷ்டங்களினிடையில் திடத்துடன் சமூக முன்னேற்றம் கருதி இம்மகாநாட்டை கூட்டிய மகாநாட்டினர்களுக்கும் எனது நன்றியறிதலையும் வணக்கத்தையும்தெரிவித்து இம்மகாநாட்டை இத்துடன் முடிக்கின்றேன். (தீர்மானங்கள்பின்வரும்)

---

## சுயமரியாதைக்காரர்களுக்கு ஓர் விஞ்ஞாபனம்

சகோதரர்களே! நம்கொள்கைக்கு மாறாக சப் ரிஜிஸ்டரார் ஆபீசுகளில் "ஜாதி"யை வரைய வேண்டுமென வற்புறுத்துகின்றனர் ஆதலால், ஒவ்வொரு நண்பர்களும் விடாமுயற்சியுடன் மேற்படி காரியத்தைக் கேட்காமலிருப்பதற்கான விதிகளைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

எல். கே. சுப்பையா.

# நெல்லூர் மகாநாடு

## திரு முனிசாமி நாயுடு தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்

## பார்ப்பனரை கட்சியில் சேர்ப்பதா என்ற பிரச்சினையின் கதி

நெல்லூர் மகாநாட்டுத் தலைவர் ராவ்பகதூர் எம். முனிசாமி நாயுடு அவர்களும், திருவாளர்கள் மந்திரி டாக்டர் சுப்பராயன், மந்திரி முத்தைய்யா முதலியார், பி. டி. ராஜன், டபிளியூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன், மிர்சாபுரம் ராஜா, பொப்பிலி ராஜா, வெங்கிடகிரி ராஜா, ஆர் கே. ஷண்முகம், டாக்டர் நடேசன், சர். பாத்ரோ, ஏ. ராமசாமி முதலியார், பி. சி. எத்திராஜுலு நாயுடு, பி. டி. குமாரசாமி செட்டியார், எல். குமாரசாமி ரெட்டியார், சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார், எம். கே. ரெட்டி, என். சிவராஜ், ஜே. எஸ். கண்ணப்பர், பி எஸ். குருசாமி நாயுடு, இந்திராணி, பால சுப்பிரமணிய அம்மாள், அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், வி. சக்கரை செட்டியார், சுரேந்திரநாத் ஆரியா, எல்லப்ப செட்டியார், சிதம்பரநாத முதலியார், வி வி. ராமசாமி நாடார், ராமச்சந்திர சேர்வை, கரு. முத்து சிவலிங்கம், டாக்டர் செட்டோ, எம். டி. சோமசுந்திர முதலியார், ஜியார்ஜ் ஜோசப், எம்.டி என். ஷண்முகவேல் ராஜன், கி. ஆ. பெ. விஸ்வநாதம், எம். டி. என். தியாகராஜன், ஏ. டி. பன்னீர் செல்வம், சாமியப்ப முதலியார், உமாமகேஸ்வரம் பிள்ளை, ஐ. குமாரசாமிபிள்ளை, வேணுகோபால நாயுடு, கடலூர் சீதாராம ரெட்டியார், முத்துக்குமார செட்டியார், வேணுகோபால் நாயுடு, சிதம்பரம் வேணுகோபால் பிள்ளை, துரைசாமி ரெட்டியார், வட ஆற்காடு சுரூர் கிருஷ்ணசாமி நாயுடு, கிருஷ்ண ரெட்டியார், பாணி, ராஜமாணிக்க பண்டாரம், மையாபுரி பண்டாரம், மலபார் மொய்டு ஷம்னுட், ஏ. பி. ஷெட்டி, மதுரை பிச்சமுத்து, பகவதி, கோபால கிருஷ்ணகோன், செங்கல்பட்டு விஜயராம் நாயுடு, எம். வேதாசல முதலியார், கோயமுத்தூர் பழனிசாமி நாயுடு, பரமேஸ்வரன் செட்டியார், 'ரிவோல்ட்' உதவி ஆசிரியர் என். குருசாமி, பொன்னம்பலம், சி. நடராஜன், எஸ். வி லிங்கம், பட்டுக்கோட்டை தண்டபாணி, திருஞானசம்பந்தம், ஜே. என். ராமநாதன், அருப்புக்கோட்டை கருப்பையா, நாகலிங்கம், ஈரோடு ஈ.வே. ராமசாமி, சிதம்பரம் ராமலிங்கம் பிள்ளை, தண்டபாணி, உறையூர் கந்தசாமி மற்றும் சுமார் 500 பேர்கள் வரையில் 4-ந் தேதி இரவு கல்கத்தா மெயிலில் நெல்லூர் ஸ்டேஷன் வந்திறங்கினார்கள். வரவேற்புக்கழகத் தலைவர் திரு. ராமச்சந்திர ரெட்டியாரும், மற்றும் பிரபலஸ்தர்களும், வாலண்டியர்களும் ரயில் மேடையில் தலைவருக்கு மாலையிட்டு வரவேற்று மோட்டார்கார்கள் மூலமும், பஸ்கள் மூலமும் அவரவர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த ஜாகைகளுக்கு அனுப்ப வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொடுத்தார்கள். மறுநாள் காலையிலிருந்து ஒவ்வொரு வண்டிகளிலும் திரள் திரளாக பிரதிநிதிகள் வந்த வண்ணமாய் இருந்தார்கள். 5-ந் தேதி பகல் 2-மணிக்கு நெல்லூரில் தோரணங்களாலும் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த புதிய சினிமா கொட்டகையில் சுமார் 2500 பேர்கள் கூடியிருந்தார்கள்.

மகாநாட்டுத் தலைவரும் மற்ற தலைவர்களும் கொட்டகைக்குள் வந்தவுடன் பாண்டு மேள வாத்தியங்களும், கைதட்டுதலும், ஜே கோஷமும் முழங்கி அடங்க 10 நிமிஷம் சென்றது. உடனே திருவாளர்கள் முனிசாமி நாயுடு, சுப்பராயன், முத்தைய்யா முதலியார், ராமசாமி முதலியார் ஆகியவர்களுக்கு நெல்லூர் முனிசிபாலிட்டியின் சார்பாக உபதலைவரால் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுக்கப்பட்டன. பிறகு மேற்படி பத்திரங்களுக்குப் பதிலளிக்கப்பட்டதும் வரவேற்புத் தலைவர் தனது வரவேற்புப் பிரசங்கத்தை வாசித்தார்.

அது முடிந்ததும் திரு. முனிசாமி நாயுடு அவர்களை தலைமை வகிக்க திரு. சக்கரை செட்டியாரால் பிரேரேபிக்கப்பட்டு திருவாளர்கள் பட்டி வெங்கட்ட ராமய்யா, ஈ. வெ. ராமசாமி, ஜார்ஜ் ஜோசப், காளுவ ராமமூர்த்தி, அலர்மேலுமங்கைத் தாயாரம்மாள் முதலியவர்கள் ஆமோதிக்க பெருத்த சந்தோஷத்தினிடையே திரு. முனிசாமி நாயுடு அவர்கள் தலைமை வகித்து தமது தலைமைப் பேருரையை ஆங்கிலத்தில் படித்தார்.

பின்னர் காலஞ்சென்ற பானகல் அரசர், இராமநாதபுரம் ராஜா, எம். டி. சுப்பிரமணிய முதலியார், ஓ. தணிகாசலம் செட்டியார், செல்லப்பள்ளி ராஜா, கே. கோபாலகிருஷ்ணய்யா முதலியவர்கள் மரணத்திற்கு வருந்தும் அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பிறகு ஒவ்வொருவர் மனதிலும் துடித்துக் கொண்டிருந்ததான பார்ப்பனர்கள் சம்பந்தமான தீர்மானத்தை மகாநாட்டில் விவாதிப்பதற்கு இந்த மகாநாட்டையே விஷயாலோசனைக் கமிட்டியாக ஏற்பாடு செய்து கொள்ளலாமா என்று தலைவர் பிரதிநிதிகளைப் பார்த்து கேட்டார். உடனே பலர் கூடாதென்று எழுந்து பேசினார்கள். பலர் தலைவர் சொன்னபடியே செய்ய வேண்டுமென்றார்கள்.

மகாநாடு ஆரம்பத்தில் அதிகக் கூட்டமானதினாலும், நெருக்கமும் கூச்சலும் அதிகமானதினாலும் பேச எழுந்தசிலர் உள் எண்ணம் கற்பித்து பேசப் புறப்பட்டதாலும் சற்று குழப்பம் அதிகமாகவே யிருந்தது. வைஸியாக திரு. ஈ. வெ. ராமசாமியின் அபிப்பிராயம் என்னவென்று சிலர் கேட்டதும் தலைவர் திரு. ராமசாமியின் அபிப்பிராயத்தைக் கேட்டார். அதற்கு அவர் விஷயாலோசனை கமிட்டி நியமித்துவிட்டால் யாரும் ஆட்சேபனை சொல்ல முடியாதென்றும், பொது மகாநாட்டை விஷயாலோசனை கமிட்டியாக்குவதில் சிலர் உள் எண்ணம் கற்பிக்கத் தொடங்குவதால் விஷயாலோசனைக் கமிட்டி நியமிக்கலாமென்றுதான் அபிப்பிராயப்படுவதாகச் சொன்னதும் தலைவர் அந்தப்படியே ஒப்புக்கொண்டு ஒவ்வொரு ஜில்லாக்களும் 5 பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து விஷயாலோசனைக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டுமென்றும் சென்னைக்கு 10 பேர்கள் என்றும், ஒரு மணி நேரத்தில் விஸ்டு கொடுக்க வேண்டுமென்றும் சொல்லி மகாநாட்டை மறுநாளைக்கு ஒத்திவைத்துவிட்டார். அந்தப்படியே அநேகர் லிஸ்டு கொடுத்தார்கள்.

பிறகு மாலை 7-மணிக்கு மகாநாட்டுக் கொட்டகையிலிருந்து தலைவரை மோட்டாரிலேற்றி ஊர்வலம் புறப்பட்டு மேள வாத்தியங்களுடனும் பாண வேடிக்கைகளுடனும் சுமார் 3,000, 4,000 பேர் சூழ பல முக்கிய வீதிகள் வழியே அழைத்துச் செல்லப்பட்டது.

### இரண்டாம் நாள்

6-10-29 ஞாயிற்றுக்கிழமை காலை சாப்பாட்டிற்குமேல் விஷயாலோசனைக் கமிட்டி கூடிற்று. கூடினதும் பார்ப்பனர்களை சட்டசபைகளில் சேர்த்துக் கொள்ளுவதாக ஏற்கனவே நிர்வாகக் கமிட்டியில் நிறைவேற்றியிருந்ததும் மகாநாட்டிற்கு ஏகமனதாய் சிபார்சு செய்திருந்ததுமான தீர்மானத்தை தென் இந்திய நல உரிமைச் சங்க நிர்வாக சபையின் சார்பாக (அபிஷியல் பிரசுரத்தனும்) பிரேரேபிக்கப்பட்டு ஆமோதிக்கப்பட்டதும் சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் எழுந்து, தென் இந்திய நல உரிமைச் சங்கத்திலேயே பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதாக ஒரு திருத்தம் கொண்டு வந்தார். அதை இரண்டொருவர் ஆதரித்தார்கள்.

பிறகு சர். பாத்ரோ தீர்மானத்தை எதிர்த்து திரு. ஆர். கே. ஷண்முகம் ஆங்கிலத்தில் பேசினார். திரு. ஈ. வெ. ராமசாமியும் அத்தீர்மானத்தை எதிர்த்து தமிழில் பேசினார். அதன் சாராமசமாவது:—

பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்க்க முடியாதென்றும், கமிட்டி வைத்து இஷ்டப்பட்டவர்களை மாத்திரம் கமிட்டியின் மூலம் தெரிந்தெடுக்கலாமென்பது அர்த்தமற்றதென்றும் இப்பொழுது இருப்பதுபோலவும் முன் நாம் ராஜியை முன்னிட்டு மந்திரி சட்டியாரிடமும், திரு. நடேசன் கட்சியாரிடமும் ஒப்புக்கொண்டு நிர்வாக சபைக் கூட்டத்திலும் ஏகமனதாய் செய்த தீர்மானத்தின்படியும் மற்றவர்களுக்கு நமதியக்கத்தின் சார்பாக வாக்குக் கொடுத்திருக்கின்றபடியும் சட்டசபையில் மாத்திரம் சேர்த்துக் கொள்ளலாமென்றும், அப்படிச் சேர்த்துக் கொள்ளுவதிலும் உறுதியானதும் வெளிப்படையானதுமான நிபந்தனை இருக்கவேண்டுமென்றும், அதாவது எந்தக் காரணம் கொண்டும் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்ப்பதில்லை என்பதும் எந்தக் காரணத்தைக் கொண்டும் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தின் சார்பாக சட்டசபை தேர்தல்களில்பார்ப்பனர்களை நிறுத்தக்கூடாது என்றும் விவரமாய் தெரிவித்துவிடவேண்டும் என்றும், தான் அந்த நிபந்தனையின் மேல்தான் இதை ஆமோதிப்பதாகவும், மற்றப்படி சர் பாத்ரோ தீர்மானத்தை யாரும் கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளக் கூடாதென்றும், ஏனெனில் மக்கள் பிறவியில் ஜாதி உண்டென்கின்ற கொள்கை உள்ள வரையில் நமது கக்ஷியில் எந்தப் பார்ப்பனர்களையும் சேர்த்துக்கொள்வது முடியவே முடியாது என்றும், அதுவரை எந்தப்பார்ப்பனர் எவ்வித நிபந்தனைக்கு ஒப்புக்கொண்டாலும் நமக்கு பயன்படாதென்றும் பல காரணங்களையும் உதாரணங்களையும் எடுத்துக்காட்டினார். உடனே தலைவர் ஓட்டு எடுத்ததும் பாத்ரோ தீர்மானத்திற்கு சுமார் 5, 7 ஓட்டுகளும் எதிரிடையாக நூற்றுக் கணக்கான ஓட்டுகளும் இருந்ததால் அது தோல்வியுற்றது.

மறுபடியும் நிர்வாகக்கமிட்டி தீர்மானத்தை ஓட்டு விட்டார். அதுவும்

தோற்றது என்று சொல்லப்பட்டது. உடனே சிலர் நிர்வாகக் கமிட்டித் தீர்மானத்தை ஓட்டு எடுத்ததில் பிரதிநிதிகளுக்கு விளங்கவில்லை என்றும் தப்பாய்ச் சில ஓட்டுகள் கொடுக்கப்பட்டதென்றும் பிரதிநிதிகளல்லாதார்களும் ஓட்டில் கலந்து விட்டார்கள் என்றும் மத்தியானமும் விஷயாலோசனை சபை கூட்டி விஷயத்தை விளக்கிச் சொல்லி ஓட்டு எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டதில், தலைவர் பொதுஜனங்கள் அபிப்பிராயத்தைக் கேட்டு அவர்கள் சம்மதத்தின்பேரில் அந்தப்படிக்கே ஒப்புக்கொண்டு சாப்பாட்டிற்குமேல் விஷயாலோசனைக் கமிட்டிகூட்டி ஜில்லா வாரியாக விஷயாலோசனைக் கமிட்டி பிரதிநிதிகளை உட்கார வைக்கப்பட்டது. அப்படி உட்கார வைக்கப்பட்டதில் ஜில்லாவிற்கு 5 பேர் விஷயாலோசனைக் கமிட்டி பிரதிநிதிகள் என்று முதலில் சொன்ன கொள்கை மாற்றி ஒவ்வொரு ஜில்லாவிற்கும் எத்தனை பிரதிநிதிகள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் ஜில்லாவிற்கு ஒரு ஓட்டு என்று சொல்லிவிட்டதால் ஓட்டுச் சேர்ப்பவர்கள் சௌகரியம்போல் விஷயாலோசனைக் கமிட்டிக்கு பிரதிநிதிகளை உண்டாக்கிக்கொள்ள முடிந்து விட்டது. அன்றியும் தலைவர் காலையில் விஷயாலோசனைக் கமிட்டி கலையும் போது பகலில் விஷயாலோசனைக் கமிட்டி கூடியதும் விஷயத்தை விளக்கிச் சொல்லி தெளிவுபடுத்தி ஓட்டு எடுப்பதாய் கொடுத்த வாக்குறுதியையும் காற்றில் பறக்கவிட்டு விட்டு, திடீரென ஓட்டிற்குப் புறப்பட்டு அந்தந்த இடங்களுக்கு போனதினால் ஆங்காங்குள்ள ஓட்டர்களிடம் சில அக்கரையுள்ளவர்கள் திரித்துக்கூறி ஓட்டுக் கொடுக்கச் செய்ய இடமேற்பட்டுவிட்டது. விஷயம் விளக்கப்படும் என்று எதிர்பார்த்து வந்த ஓட்டர்கள் ஒன்றும் புரியாமல் சிலரும் திரித்துக்கூறியதை நம்பி, சிலரும் சரிவர விஷயத்தை விளங்காததால் தங்களுக்கு விளங்கவில்லை என்று ஓட்டில் சிலர் கலந்துகொள்ளாததால் அநுகூலத்தில் சிலரும் மற்றும் பலவிதமாக ஓட்டுச் செய்ய நேரிட்டதாலும், கசாமுசா என்று குழப்பத்தில் ஓட்டு எடுக்கப்பட்டதால் 13 ஓட்டுகள் சட்டசபை நடவடிக்கை கட்சியில் சேர்த்துக் கொள்ளலாம் என்பதற்கு அனுகூலமாகவும், 14 ஓட்டுகள் கூடாது என்பதற்கு அனுகூலமாகவும் கிடைத்ததால் தலைவர் தீர்மானம் தோற்றதாக முடிவு செய்தார். இந்த முடிவை ஆட்சேபித்துப் பேசச் சிலர் எழுந்ததும் இந்த முடிவு கிடைத்ததற்கு சந்தோஷப்படுவதற்காக கைதட்டி 'ஷேம்' அவமானம் என்று சத்தம்போட்டு எழுந்த சிலரும் போட்ட கூச்சல்களினால் அதிக கலகமுண்டாய் விடக் கூடாது என்று சிலர் கருதி ஒரு விதத்தில் அடக்கிவிட்டார்கள். பிறகு லீடர் தேர்தலைப்பற்றிய தீர்மானத்தை தலைவர் திரு. முனிசாமி நாயுடு நிர்வாக சபையின் தீர்மானத்தைப் படித்துக்காட்டினார்.

**கமிட்டி ஏற்படுத்த தீர்மானம்**

திரு. ஈ. வெ. ராமசாமி எழுந்து பேசியதன் சாரமாவது:—ஒரு தனித் தலைவரை இங்கு தேர்ந்தெடுப்பதைவிட ஐந்து அல்லது ஏழு கனவான்கள் கொண்ட ஒரு கமிட்டியை தெரிந்தெடுத்து அவர்கள் மூலம் இயக்கத்தை நடத்தலாம் என்றும், எதற்காக நாம் தனித்தலைவரை வேண்டுகின்றோமோ அதற்கு உபயோகப்படும்படியாக ஒரு தலைவரை தெரிந்தெடுக்க முடியாத நிலையில் இருக்கின்றோம் என்றும், பல கனவான்கள் தலைவர் ஸ்தானத்திற்கு ஆசைப்பட்டு பல வழிகளில் முயற்சி செய்கின்றபடியால் ஏகமனதாக தெரிந்தெடுக்க முடியாது என்றும், யாரோ ஒருவர் தலைவராயிருக்கட்டும் என்பதற்கு இதுகாலமல்லவென்றும், கண்மூடிக்கொண்டு மக்கள் பின்பற்ற மாட்டார்கள் என்றும், பலாத்காரத்தால் தலைவர் தேர்தல் நடத்திவிட்டால் பிறகு அதனால் பல சங்கடங்கள் நேரும்போல தனக்கு நன்றாய் தெரிகின்றது என்றும், நமது இயக்கம் வலுப்பட்டு வரும் சமயத்தில் தலைவர் தேர்தலால் பிளவுபட்டுப் போகக்கூடாது என்றும், பிளவு ஏற்பட்டால் சட்டசபை தேர்தலில் மிக்க கஷ்டம் ஏற்படுவதோடு நமது கட்சியின் பேரால் நிற்கவே ஆட்கள் கிடைக்காமல் போனாலும் போகும் என்றும், இதுவரையில் நமக்குள் கட்சிப்பிரிவாலேயே பல தோல்வியும் கஷ்டமும் அனுபவித்திருக்கின்றோம் என்றும், எதிரிகள் உட்புகுந்து விஷமம் செய்ய தலைவர் தேர்தல் மூலம் இடம் கொடுத்து விடக்கூடாது என்றும், இப்பொழுது தலைவர் இல்லாத கட்சி என்ன கட்சி என்று வெறும் வாய் வீரம் பேசுகின்றவர்களுக்கு இப்பொழுது தெரிந்தெடுக்கும் தலைவர் தங்களுக்கு இஷ்டமில்லாதவராயிருந்தாலும் அல்லது தங்கள் எதிர்பார்த்திருப்பது இந்தத் தலைவரால் கிடைக்காது என்று கருதினாலும் உடனே கட்சியை விட்டு ஓடிப்போய் எதிர்க்கட்சியில் சேர்ந்து தலைவரையும் நமது கக்ஷியையும் வைவார்கள் என்றும், தான் இதை நன்றாய் அநுபவத்தில் பார்த்தும் தலைவர் ஸ்தானத்திற்கு ஆசைப்படுகின்றவர்களையும் அவர்களது எஜமான்களையும் சிஷ்ய கோடிகளையும் நன்றாய் உணர்ந்தும், அதனால் ஏற்படப் போகும் கஷ்டத்தை எதிர்பார்த்துமே இப்படிச் சொல்லுகின்றேன் என்றும், தான் எல்லோரிடமும் பேசிப் பார்த்த பிறகே இந்த முடிவுக்கு வந்திருப்பதாகவும், தான் இந்தக் கமிட்டியில் ஒரு அங்கத்தினனாக இருப்பதில்லை என்பது மாற்றமுடியாதபடி உறுதி செய்துகொண்டிருக்கின்றேன், ஆகையால் சுயநலத்தைக் கொண்டு கமிட்டிப் பிரேரேபிப்பதாக யாராவது சொன்னால் நம்பாதீர்கள் என்றும் சொல்லி, ஒரு கமிட்டி நியமிக்கப் பிரேரேபித்தார். இதைதிரு: ஷம்நாத் எம். எல். சி. ஆமோதித்தார். திரு பட்டட் வெங்கிட்ட ராமய்யா ஆதரித்துப் பேசி அக்கமிட்டிக்கு மகாநாட்டுத் தலைவரை அக்கிராசனராக இருக்க ஒரு திருத்தமும் செய்தார்.

பிறகு திருவாளர்கள் ஓ. சி சீனிவாசன், ஜே. என். இராமநாதன், ஆரியா ஆகிய மூவரும் இதை எதிர்த்து ஒரு தலைவரை நியமிக்காத கட்சி என்ன கட்சி என்றும், பார்ப்பனரல்லாத சமூகத்திற்கே அவமானம் என்றும், என்ன போனாலும் என்ன வந்தாலும் ஒரு தலைவரை நியமித்தாக வேண்டும் என்றும், தலைவரைத் தெரிந்தெடுக்க பின்வாங்குவது பயங்காளித்தனமென்றும், திருவாளர்கள் நடேசரைப் போலும் தியாகராயரைப்போலும் நமக்கு வழிகாட்டும் தலைவரை நாம் தெரிந்தெடுக்க முடியாது என்றும், நாம் சொல்லுகிறபடி நடக்கும்படியான ஒருவரை தெரிந்தெடுக்கலாம் என்றும் சொல்லி திரு: ஈ. வெ. ராமசாமி தீர்மானத்தை எதிர்த்தார்கள்.

பிறகு தலைவர் திரு. முனிசாமி நாயுடு அவர்கள் சில முக்கிய தலைவர்கள் அபிப்பிராயம் தெரியவேண்டுமென்று சொல்லி சில கனவான்களை அழைத்தார். உடனே டாக்டர் நடேசன் எழுந்து தலைவரானாலும் சரி யென்றும், கமிட்டியானாலும் சரி யென்றும், ஆனால் திரு. ராமசாமி சொல்வதில் சிறிது அர்த்த புஷ்டி இருக்கின்றதென்றும் சொல்லி அமர்ந்தார்.

பிறகு சர். ஏ. பி. பாத்ரோ எழுந்து திரு. ஈ. வெ. ராமசாமி கமிட்டி நியமிக்கவேண்டுமென்று சொன்னதைதான் ஆதரிப்பதாகவும், தலைவரை நியமிக்காதது அவமானமானது என்று பேசிய நண்பர்களில் ஒருவராவது திரு. ராமசாமி பல காரணங்களால் ஏகமனதாக தலைவரை நியமிக்க முடியாதிருப்பதைப்பற்றியும், அதனால் ஏற்படும் கஷ்டங்களைப்பற்றியும் எடுத்துச் சொன்னவர்களுக்கு இதுவரை யாரும் யாதொரு சமாதானமும் சொல்லவில்லை என்றும் சொல்லி திரு. ஈ. வெ. ராமசாமியை ஆதரித்தார்.

பிறகு சில முக்கிய தலைவர்கள் வெளியில் எழுந்துபோய் சிறிது நேரம் யோசனைசெய்து, திரு. ஈ.வெ. ராமசாமியை வெளியில் கூப்பிட்டு இந்த மகாநாட்டுத் தலைவரை அடுத்த மகாநாடு வரையில் தலைவராக நியமித்துக்கொள்வது நலமாயிருக்குமென்றும், இது ஏகமனதாய் ஒப்புக்கொள்வதானால் கமிட்டி தீர்மானத்தை வாபீசு வாங்கிக்கொள்ளலாம் என்றும் யோசனை சொன்னார்கள். உடனே திரு. ராமசாமி மற்றும் சில கனவான்களைக் கலந்து இத்தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறுமா என்று பார்த்துவிட்டு வருவதாகச் சொல்லிப்போய், சில கனவான்களிடம் கலந்து பேசிவிட்டு வந்து இது ஏகமனதாய் ஒப்புக்கொள்ளக் கூடும் என்று தோன்றுவதாகவும், ஆதலால் இத்தீர்மானத்தை பிரேரேபித்தால் தனது தீர்மானத்தை வாபீசு வாங்கிக்கொள்வதாகவும் ஒப்புக்கொண்டார். அந்தப் படிக்கே திருவாளர்கள் பி.டி ராஜன், டாக்டர் சுப்பராயன், சர் பாத்ரோ, ஆர்.கே.ஷண்முகம், ஏ.ராமசாமி முதலியார், என். குமாரசாமி ரெட்டியார், திருமதி இந்திராணி பாலசுப்பிரமணிய அம்மாள் முதலியவர்கள் மகாநாட்டின் தலைவரை அடுத்த மகாநாடு வரை தலைவராயிருப்பதென்றும், அவருக்கு உதவியாக ஒரு கமிட்டி இருப்பதென்றும், அக்கமிட்டியை சங்க நிர்வாக அங்கத்தவர்கள் நியமிப்பதென்றும் திரு. ஆர். கே. ஷண்முகம் செட்டியால் பிரேரேபிக்கச் செய்து ஆமோதித்து ஆதரித்தார்கள். உடனே திரு: ஈ. வெ. ராமசாமி தனது தீர்மானத்தை வாபீசு வாங்கிக் கொண்டார். பெருத்த கரகோஷத்தினிடையே 'ஜே' சப்தத்தினிடையே ஏகமனதாய் நிறைவேறியது. உடனே தலைவருக்கு மாலையிட்டார்கள். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நிர்வாக சபை மெம்பர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

பிறகு மாலை 5 மணிக்கு முறைப்படி வந்தனோபசாரங்கள் சொல்லப்பட்டு மகாநாடு இனிது முடிவு பெற்றது.

## விதவா விவாகம்

25-9-29ந் தேதியன்று தெலுங்கு வைசிய சங்கத்தின் ஆதரவில் திருவாளர் சிங்கராபு தாமோதரனுக்கும், செல்வி கோபி செட்டி ராமுலம்மாளுக்கும் திருமணம் நடைபெற்றது. இருவரும் வணிக வகுப்பார், மணமகனுக்குப் பொருளிருப்பதைக் கருதி மணமகளைப் போஷித்து வந்தவர் மணமகளை மணப்பந்தலினின்றும் இவ்விதவா விவாகத்திற்கு எதிராக அப்புறப்படுத்த நினைத்தும் பயன் ஏற்படவில்லை. போலீசு பாதுகாப்பில் திருமணம் நிகழ்ந்தது என்று சென்னை விதவா சகாய சபையார் அறிவிக்கின்றனர்.

[மணவினை சர்க்கார் பாதுகாப்பில் நடைபெற்றதால் இதனிலும் வேறொரு சிறப்புண்டோ? —ப. ர்]

## தேவை - விதவைக்கோர் மணமகன்

22 வயதும், அழகும், மலையாளம், மராத்தி, தமிழ் ஆகிய மூன்று பாஷைகளின் பயிற்சியுமுடைய ஒரு மாத்துவப் பார்ப்பன விதவைக்கு ஒரு பார்ப்பன மணமகன் தேவை. இவ்விளம் விதவையாருக்கு ஐந்து வயதுக்குட்பட்ட இரண்டு பெண் குழந்தைகள் உண்டு. மணமகன் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாத வருமானம் உள்ளவராதல் வேண்டும். விருப்பமுள்ளவர் விதவா விவாக சகாய சபை, 161, பிராட்வே, சென்னை என்ற விலாசத்திற்கு எழுதிக் கொள்வாராக.

## அறிக்கை


கட்டுரைகள், கட்டுரைகளைப் பற்றிய நிருபங்கள், மதிப்புரைக்குரிய நூல்கள் யாவும் 'குடி அரசு' ஆசிரியர் என்ற விலாசமிட்டே அனுப்புதல் வேண்டும். கட்டுரைகளைத் தெளிவாக, ஒரு பக்கத்திலேயே எழுத வேண்டும். அறிவுடைய கட்டுரைகளாய் இருத்தல் சிறப்பு. பிரசுரிக்க இயலாத கட்டுரைகளைத் திரும்ப அனுப்ப முடியாது. அவரவர்கள் தங்கடங்கள் கட்டுரைகட்குப் பிரதிகள் வைத்துக் கொள்ளுவது நலம்.

பத்திராதிபர்

## அறிக்கை

குடியரசு சந்தாதாரர்கள் தங்கள் கடிதங்களில் தங்கள் சந்தா நெம்பரைக் குறித்தல் அவசியமாகும். இல்லையேல் கடிதங்கள் கவனிக்கப்பட மாட்டா. புதிய சந்தாதாரர்கள் தாங்கள் சேர்ந்த காலத்தைக் குறித்துக் கடிதப் போக்குவரவு வைத்துக் கொள்ளலாம்.

மானேஜர்



"அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே"

# குடி அரசு

சென்னை 1929 அக்டோபர் 13வ

## நெல்லூர் மகாநாடு

இம்மாதம் 5, 6-ந் தேதிகளில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நெல்லூரில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு என்னும் தென் இந்திய நல உரிமைச் சங்க இயக்கத்தின் 11—வது மாகாண மகாநாடு கூடிக்கலைந்து விட்டது. இந்த மகாநாடானது 1927 வது வருடம் ஜனவரியில் மதுரையில் கூடிய 10-வது மகாநாட்டுக்குப் பிறகும், அதையடுத்து கோயமுத்தூரில் கூடிய மாகாணவிசேஷ மகாநாட்டிற்கு பிறகும், இரண்டு வருஷ காலம் பொறுத்து நெல்லூரில் கூடப்பட்டதாகும். என்றாலும் இந்த இரண்டுவருஷம் பொறுத்தாவது இம்மகாநாடு இப்போது கூட்ட வேண்டிய அவசியமேற்பட்டதின் காரணம் முக்கியமாக இரண்டு விஷயத்தைப் பொறுத்ததாகும். அதாவது ஒன்று; பார்ப்பனரல்லாதார்களுக்குள் பிரிந்துநிற்கும் கட்சிகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற கருத்துக்கொண்டு மந்திரி கட்சியாகிய இண்டிபெண்டெண்டு என்னும் சுயேச்சைக் கட்சியையும், கான்ஸ்டிடியூஷனலிஸ்ட் என்னும் டாக்டர் நடேசன் கட்சியாரையும் ஒன்று சேர்க்கவும்; இரண்டாவதாக:— கட்சிக்குத் தலைவராய் இருந்த பானகல் அரசர் இறந்துபோய் விட்டதால் அவருக்குப் பதிலாக ஒரு தகுதியான தலைவரை ஏற்படுத்தவும் கருதி மகாநாடு கூட்டப்படவும் வேண்டியதாயிற்று. மேலும் பானகல் அரசர் காலமானதும் கட்சியின் தலைவர் காலமாய்விட்டதால், இனி கட்சிக்கொள்கையை ஒப்புக்கொள்ளும் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் தங்களுக்குள் இருக்கும் அபிப்பிராய பேதங்களை மறந்து ஒருவருக்கொருவர்சற்றுவிட்டுக்கொடுத்து (அதாவது தங்களுடைய முக்கிய கொள்கைக்கு விரோதமில்லாமல்) ஒன்று சேர வேண்டும் என்றுகருதி மந்திரி கட்சியாரையும், திரு. நடேசன் கட்சியாரையும், கூப்பிட்டு பேசுவது என்கின்ற எண்ணத்தின் மீது தியாகராய ஞாபகக் கட்டிடத்தில் எல்லாக் கட்சியாரும் கொண்ட ஒரு பொதுக்கூட்டம் கூட்டி அவரவர்கள் கட்சி கொள்கைகளையும் குறைகளையும் அறியவும், அவற்றிற்கு பரிகாரம் தேடி ரிபோர்ட்டு செய்யவும் என்று கட்சி ஒன்றுக்கு 3 பேர்கள் வீதம் மூன்றுகட்சிக்கு ஒன்பது பேர்களைத் தெரிந்தெடுப்பதென்றும் அவர்கள் விசாரித்து அறிக்கை செய்ய ஒரு மாதம் வாய்தா கொடுப்பதென்றும் தீர்மானித்து மூன்று கட்சியின் சார்பாக ஒருகமிட்டியும் நியமிக்கப்பட்டது. அந்தக் கமிட்டி அவரவர்கள் கட்சிக் குறைகளை விசாரித்தறிந்து ஒரு முடிவுக்கு வந்ததில் பேரில் சுயேச்சைக்கட்சியார் என்னும், மந்திரிகட்சியார் நம்முடன் சேர்வதானால் பார்ப்பனர்களை நமதுகட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்றும், அது முடியாவிட்டால் குறைந்த அளவு இப்போது அவர்களுடன் கூட இருக்கும் பார்ப்பன மந்திரியாகிய கனம் சேதுரத்தினமய்யர் தாங்கள் மந்திரியாய் இருக்கும்வரை தங்களுடன் மந்திரியாய் இருப்பதற்கு அனுகூலமாகவாவது ஏற்பாடு செய்யவேண்டும் என்றும், அதாவது சட்டசபை நடவடிக்கைகளைப் பொறுத்தவரை பார்ப்பனர்களுடன் கலந்து இருக்கும் படியான மாதிரியில் சட்டசபைக் கட்சியில் சேர்த்துக் கொள்ளும்படி இடம் கொடுக்க வேண்டுமென்றும், திரு. நடேசன் கட்சியார் நம்முடன் இருப்பதானால் அவர்கள் அபிப்பிராயத்திற்கு மதிப்பு இருக்கும்படியாக நிர்வாக சபையில் போதிய பிரதிநிதித்துவம் அவர்களுக்கு கொடுக்கவேண்டும் எனவும் சொல்லப்பட்டு அவற்றை தென் இந்திய நல உரிமை நிர்வாக சபை கூடிகவனித்து சட்டசபை கட்சியில் மாத்திரம் பார்ப்பனர்களை சேர்த்துக்கொள்ள சம்மதிப்பதால் ஒப்புக்கொண்டு அதற்கு நிர்வாக சபையில் ஏகமனதாக ஒருதீர்மானமும்செய்வித்து அதை மந்திரி கட்சியாருக்கு தெரிவித்து, அதை அடுத்த மகாநாடு கூட்டி நிறைவேற்றிக் கொடுப்பதாயும் ஒப்புக்கொள்ளப்பட்டது. இதை நம்பியே மந்திரிகளும் தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் நூறு நூறு ரூபாய்கொடுத்து ஆயுள் மெம்பராகவும்சேர்ந்தார்கள். இந்தநிலையில் இந்த மகாநாட்டை நெல்லூரில் போடப்பட்டது. ஆனால், சட்டசபைத் தேர்தல் ஒத்திப் போய் விட்டதாலும், வேறு ஏதேதோ காரணங்களாலும் மகாநாடும் ஒத்திப்போட்டுக் கொண்டே வரப்பட்டது. என்றாலும் கடைசியாக ஊராரின் பழிப்புக்குபயந்து மகாநாட்டை நடத்தியே காட்டப்பட்டுவிட வேண்டியதாயிற்று.

### மகாநாட்டுத் தலைவர்

மகாநாட்டுத் தலைவராகத்தெரிந்தெடுக்கப்பட்ட திரு. முனிசாமி நாயுடு அவர்கள் காங்கிரஸ் உணர்ச்சிஉள்ளவர் என்பதையும் பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்கின்ற மனப்பான்மை கொண்டவர் என்பதையும் தவிரமற்ற எந்த விதத்திலும் தகுதியான வரும் பானகல் அரசர் காலமானவுடன் இவரே அடுத்தபடியாக தலைவராகலாம் என்று பலரால் சொல்லப்பட்ட வருமாவார். ஆனால், அவர் சித்தூரிலிருப்பதினாலும், "பெரிய பணக்காரராகஇல்லை" என்பதனாலும்வக்கில் தொழிலில் இருக்கிறபடியாலும், கட்சிக்குத் தலைவராயிருக்க மறுத்து விடுவார் என்று சிலர் பேசிக்கொண்டதும் உண்டு. அது எப்படி இருந்தபோதிலும் திரு. முனிசாமி நாயுடு அவர்களின் மகாநாட்டு அக்கிராசனப் பிரசங்கமானது பொது ஜனங்கள் நினைத்ததுபோலவே பார்ப்பனீய காங்கிரசு சார்பாகவும், பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமை கட்சியில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதையே பூராவாகக் கொண்டதாகவும் தானிருந்ததே தவிர பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் தத்துவத்தை அனுசரித்தோ அல்லது இப்போது உலகமெங்கும் கொழுந்து விட்டெரியும் சமத்துவ உணர்ச்சியையும் சீர்திருத்தத் தத்துவத்தையும் அனுசரித்தோ ஒரு வார்த்தையும் காணக் கிடைக்காததாயிருப்பதற்கு எவரும் வருந்தாமல் இருக்க முடியாது. உபன்யாசத்தின் கடைசி பக்கத்தில் ஒரு வரியில் மதிநிரதாஸ் மரணத்திற்கு அனுதாபம், கிராம புனருத்தாரணம், கதர், நிலத்தீர்வை, மதுவிலக்கு என்கின்ற காங்கிரஸ்காரர்களின் பரிபாஷைப்புரட்டு வார்த்தைகள் மாத்திரம் காணப்படுகின்றதே தவிர, இவற்றிற்கான வேலைத் திட்ட முறைகள் ஒன்றுகூட சொல்லப்படவே இல்லை அன்றி யும் தீண்டாமைவிலக்கு, ஜாதிவித்தியாசம்விலக்கு, ஆலயப்பிரவேசம், பெண்மக்கள்கொடுமை நீக்கம், தொழிலாளர்கஷ்டம் நிவாரணம் முதலாகிய முக்கிய சீர்திருத்த விஷயங்களானவைகளாவது பார்ப்பனரல்லாதார்இயக்கத்திற்கே உயிராய் உள்ள கொள்கைகளைப் பற்றி ஒருசிறிதும்குறிப்பிடவேஇல்லை. எனவேஇவ்வளவுமோசமான அபிப்பிராயம்கொண்ட தலைமைப் பேருரை தென் இந்திய நலவுரிமைசங்கம் தோன்றியநாள்முதல் இதுவரை எந்த மகாநாடும் வழங்கி இருக்காதென்றே தைரியமாய்ச்சொல்லலாம். இந்தக் காரணத்தைக்கொண்டுதான் இந்து, சுதேசமித்திரன், சுயராஜ்ஜியா முதலிய பார்ப்பனப்பத்திரிக்கைகள் தலைவர் பிரசங்கத்தை வானளாவப் புகழ்ந்திருக்கின்றனவென்பதே நமது முடிவு. ஆயினும் திரு. முனிசாமி நாயுடு அவர்கள் பெருந்தன்மையும், யோக்கியப் பொறுப்பும் உடையவர் என்பதில்எவருக்கும்ஆட்சேபனை இருக்காது என்றே சொல்லுவோம். ஆதலால் இவரது தலை

மைப் பதவிகாலத்தில் எப்படியாவது தீண்டாமை ஒழிக்கு ஆலயப்பிரவேசம், பெண்ணுரிமை, தொழிலாளர்கஷ்டம், விவாகம் மூடப்பழக்க வழக்கங்கள் ஒழிதல் ஆகியவைகளுக்கு அனுகூலம் ஏற்படவேண்டும் என்கின்ற ஆசையின் பேரிலும் நம்பிக்கையின் பேரிலும் மனப்பூர்வமாய் பின்பற்றவும் ஒத்துழைக்கவும் தயாராயிருக்கின்றோம். ஆனால், எந்தக் காரணத்தைக் கொண்டாவது பார்ப்பனர்களைக் கொண்டுவந்து இச்சங்கத்தில் சேர்த்துவிடலாம் என்கின்ற எண்ணத்தை மாத்திரம் அடியோடு மறந்து விடும்படியும் அதற்காக தலைமைப்பதவியை உபயோகிக்கக் கூடாது என்பதையும் பலமாக எச்சரிக்கை செய்கின்றோம்.

## வரவேற்புத் தலைவர்

திரு. ராமச்சந்திர ரெட்டியவர்கள் தன்னால் கூடியவரை பிரயாசை எடுத்து மகாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வேண்டிய சவுகரியம் செய்து கொடுத்ததுடன் மகாநாட்டை பெருமையாய் நடத்திய பெருமையும் அவருக்கே உரியதாகும். அவரது வரவேற்பு உபன்யாசம் சுருக்கமாகயிருந்தாலும் கட்சி கொள்கையை தைரியமாக நன்றாகவிளக்கிக்காட்டி பல இடங்களில் உண்மையை எடுத்துக்காட்டி இருக்கின்றதற்கு நாம் அவரை பாராட்ட வேண்டும். அதாவது:—

"இந்தியாவில் எல்லா சமூகமும் சமூக விஷயத்திலும் அரசியலிலும் சமத்துவம் பெறவேண்டும். அரசியல் ஆதிக்கத்தை நேராய் பாமர மக்களுக்கு பிடுங்கிக் கொடுக்கவேண்டும். அதற்கேற்ற உணர்ச்சியையும் அறிவையும் அவர்களுக்கு உண்டாக்க வேண்டும். ஏகபோகமாய் எல்லா அதிகாரத்தையும் அனுபவிக்கும் கூட்டத்தாரின் ஆதிக்கத்தை அடியோடு அழித்து எல்லோரையும் சமமாக்க வேண்டும். ஆகிய இவைகளே பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் கொள்கைகள்" என்றும் "சமுதாய சீர்திருத்தத்தில்பம்பாயில் திரு. ஜோதிராம்பூலே ஏற்படுத்திய சத்திய சோதக இயக்கக் கொள்கைகளும் சென்னையில் திரு. ஈ வெ ராமசாமி ஏற்படுத்திய சுயமரியாதை இயக்க கொள்கைகளும் சிலருக்கு அபிப்பிராய பேதமேற்பட இடந்தந்த போதிலும் அவ்விரு இயக்கங்கள் மக்களுக்குள் அன்பை உண்டாக்கி இருக்கின்றன" என்றும்,

"வகுப்பு நியாயம் கேட்பதாலும் வாழ்க்கையில் ஒரு பார்ப்பனனுக்கு உள்ள உரிமை ஒரு பார்ப்பனரல்லாதாருக்கும் இருக்கவேண்டும் என்று சொல்வதாலும் சுயராச்சியம் ஒருக்காலும்தடைப்பட்டுவிடாது. அதிலும் பார்ப்பனரல்லாதார் தங்கள் மனித உரிமையை கேட்பது கூட தேசியத்திற்கு விரோதமென்றால் அவ்வித தேசியத்தின் தன்மையை என்னால் அறிய முடியவில்லை" என்றும் பேசியிருக்கின்றார்.

இவ்வார்த்தைகள் பொன்னேபோல் போற்றத்தக்கதாகும்.

## தீர்மானங்கள்

தென்னிந்திய நலஉரிமைச் சங்கத்தில் பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று பாத்ரோ கொண்டுவந்த தீர்மானமானது, திரு. ஆர். கே. ஷண்முகம் தாலும் திரு. ஈ. வெ. ராமசாமியாலும் எதிர்த்து தகர்க்கவென்று நசுக்கிக் கொல்லப்பட்டு விட்டதானது மிகவும் பாராட்டக் கூடியதாகும். பார்ப்பனர்களை தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தில் சேர்க்கப் போகின்றார்கள். என்கின்ற விஷயம் பரப்பப்பட்டதாலேயே மகாநாட்டிற்கு தமிழ்நாட்டிலிருந்து இவ்வளவு பிரதிநிதிகள் வந்தாரே ஒழிய மற்றபடி மகாநாட்டை உத்தேசித்தோ தலைவர் தேர்தலை உத்தேசித்தோ பெரும்பாகம் அதாவது நூற்றுக்கு எழுபத்தைந்து பேர்கள் வரவில்லை என்றே சொல்லலாம். திரு. பாத்ரோ அவர்கள் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்கின்ற தீர்மானத்தை இங்கிலீஷில் பிரேரேபித்து தெலுங்கில் ஒருவரை ஆமோதிக்கச் செய்து பின்பு தமிழில் ஆதரிக்க ஒரு தமிழரை அக்கிராசனாதிபதி கூப்பிட்டபொழுது ஒரு தமிழராவது எழுந்து வரவேயில்லை. இந்தக் காட்சியானது மகாநாட்டில் இருந்த எல்லோருக்கும் வெகு ஆச்சரியமாகவே இருந்தது. ஆகவே இதிலிருந்து பார்ப்பனர்களை பார்ப்பனரல்லாதார் கட்சியில் அங்கத்தினர்களாய் சேர்த்துக் கொள்வது என்கின்ற பேச்சு இனி வெகு காலத்திற்கு மூச்சு காட்ட முடியாதென்ற உறுதி ஏற்பட்டுவிட்டது.

## அடுத்த தீர்மானம்

திரு. பாத்ரோ அவர்களின் தீர்மானம் அடைந்த கதியினால் ஜனங்களுக்கு ஏற்பட்ட உற்சாகமானது அடுத்தத் தீர்மானமாகிய முதலில் சொல்லப்பட்ட ராஜித்தீர்மானமானது அதாவது நிர்வாகசபையின் சமனதாக ஒப்புக்கொள்ளப்பட்ட தீர்மானமும், காரியத்தில் எவ்வித குற்றமில்லாததும் இப்போதும் அமுலில் இருப்பதும் இதற்கு முன்னும் தனி ஜஸ்டிஸ் கக்ஷி மந்திரிகள் அதிகாரத்தில் இருந்த காலத்தில் அமுலில் இருந்ததுமான தீர்மானமும், மற்றும் பார்ப்பனரல்லாத தலைவர்கள் பிரமுகர்கள் ஆகிய எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு வாக்குக்கொடுத்திருந்த ஜஸ்டிஸ் பத்திரிகையில் கலம்கலமாய் ஆதரித்து எழுதிவந்த தீர்மானமும் ஆகிய "பார்ப்பனர்களை சட்டசபை கக்ஷியில் சேர்த்துக்கொள்வது" என்கின்ற தீர்மானத்தை யோசித்துப் பார்த்து முடிவு சொல்வதற்கில்லாமல் செய்துவிட்டதுடன், அளவுக்கு மீறின உற்சாகம் சில சமயங்களில் அறிவை மழுங்கச்செய்துவிடுகின்றது என்பதற்கும் உதாரணமாயிருந்தது. அன்றியும் இத்தீர்மானம் தோற்றுப்போனதானது தென் இந்திய நல உரிமைச்சங்க நிர்வாக மெம்பர்களின் மீது ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றியதாக ஏற்பட்டு விட்டதோடு பொதுவாக தலைவர்கள் என்பவர்களின் நாணயப்பொறுப்பையே அடியோடு பாதித்துவிட்டது. எப்படியெனில், சங்கத்தின் அங்கத்தினர்களால் தெரிந்தெடுக்கப்பட்ட நிர்வாக சபையாரால் சங்கத்தின் நன்மையைக் கோரி சங்கத்தின் பிரதிநிதிகளாக மற்றக் கட்சித்தலைவர்களுடன் ஒப்பந்தம் செய்து சங்க மெம்பர்களின் ஆமோதிப்பை எதிர்பார்த்து அமுலில் கொண்டு வந்து விட்ட ஒரு தீர்மானத்தை சங்க அங்கத்தினர்களால் ஒப்புக்கொள்ள மறுத்து விட்டதென்பது நிர்வாகச்சபையின் மீது அங்கத்தினர்களுக்கு நம்பிக்கையில்லை என்பதேயாகும்—மேலும் மற்றக் கட்சியாருடன் ராஜி பேசி வாக்குக்கொடுத்து அவர்களைச் சேர்த்துக்கொண்ட தலைவர்கள் ராஜி நிபந்தனையை நிறைவேற்றிக்கொடுக்க முடியாமல் போனதும், அதற்கு அனுகூலமாயில்லாமல் போனதும் இவ்வளவும் போதாமல் எதிரிடையாய் பிரசாரம் செய்தது மானகாரியங்கள் அவர்களது நாணயத்தையே பாதிக்கத்தக்கதாகும்.

நிற்க, நாம் ஏன் பிரதிநிதிகளின் அறிவு மழுங்கிப்போய் விட்டது என்று மேலே சொன்னோம் என்றால், பிரஸ்தாபத் தீர்மானத்தில் உள்ள கெடுதி என்ன என்பதையோ நமது உண்மையான கொள்கைக்கும் நடந்துவரும் அனுபவத்திற்கும் இதனால் விரோதம் என்ன என்பதையோ யாரும் உணரமுடியாமற் போனதேயாகும். எப்படியெனில் பார்ப்பனர்களை கவுன்சில் பார்ட்டியில் சேர்த்துக்கொள்ளுவது என்பதில் உள்ள நிபந்தனைகள் என்ன வென்பதைப் பற்றி வெளிப்படையாகவும் விளக்கமாகவும் மகாநாட்டிலும் வெளியிலும் நன்றாக எடுத்துச்சொல்லப்பட்டது. எப்படியென்றால், பார்ப்பனர்களை சங்கத்தில் அங்கத்தினராகச் சேர்க்கக்கூடாது என்பது ஒன்று; பார்ப்பனர்களை சங்கத்தின் சார்பாக சட்டசபைக்கு நிறுத்தக்கூடாது என்பது இரண்டு; பார்ப்பனர்களை சங்கத்தின் சார்பாக சட்டசபை தேர்தலில் ஆதரிக்கவும் கூடாது என்பது மூன்று. ஆகிய இம்மூன்று நிபந்தனைகளுக்கு அடங்கியது என்றும் சொல்லப்பட்டது. மேலும் இப்பொழுது திரு. சேதுரத்தினமையர் மந்திரியாய் இருப்பதை ஜஸ்டிஸ் கட்சி சட்டசபை அங்கத்தினர்கள் ஒன்றரை வருஷகாலமாய் ஆதரித்து வருவதுபோலவும் முதல் ஆறு வருஷம் ஜஸ்டிஸ் மந்திரிகளே முழு ஆதிக்கமாயிருந்து வந்த காலத்தில் திரு. டி. எம். நரசிம்மாசாரியார், திரு: டி. சி. தேசிகாச்சாரியார் முதலிய பார்ப்பனர்களை தங்களுடன் சேர்த்து ஓட்டு வாங்கிக்கொண்டு அவருக்கும் ஜில்லாபோர்டு பிரசிடெண்டு முதலிய பதவிகள் கொடுத்துக்கொண்டும் வந்ததுபோலவும் இருக்குமென்றும், இப்போது இருந்து வந்த நிலைமையைவிட வேறு எந்த விதத்திலும் மாற்றமுடையது அல்ல என்றும் எடுத்துச் சொல்லப்பட்டது. இன்னும் தெளிவாய் விளக்குவோமானால் ஒரு பார்ப்பனர் தனது தனி ஹோதாவில் சட்டசபைக்கு நின்று நாமும் அவருக்கு எதிராக ஒருவரை நிறுத்தி அவருடன் போட்டியும் போட்டு அதற்காக அவர் வேண்டிய பணம் தன் சொந்தத்தில் செலவழித்து நமது போட்டியையும்சமாளித்துவெற்றிபெற்று சட்டசபைக்கு வந்த பிறகு சட்டசபையில் ஒத்துழைப்பதாகவோ நமக்குப்பின்னாலிருந்து கைதூக்குவதாகவோ அந்த பார்ப்பனர் சொல்லுவதாக இருந்தால், அதை ஒப்புக்கொள்வதில் நமது கொள்கைக்கோ கட்சிக்கோ அல்லது நம்முடைய விரதத்திற்கோ ஏற்பட்ட அல்லது ஏற்படும் பங்கம் என்ன என்பதுதான். இதை ஏன் நாம் இவ்வளவு விளக்கி எழுதுகின்றோம் என்றால், மகாநாடு முடிந்து நாம் சென்னைக்கு வந்தவுடன் "என்ன அய்யா! நீர்பார்ப்பனர்களைக் கட்சியில் சேர்க்கக்கூடாது என்று பத்திரிகையில் கலம்கலமாய் எழுதிவிட்டு, மேடையில் வாய் வலிக்குமட்டும்சண்டப்பிரசண்டமாய் பேசிவிட்டுநெல்லூருக்குப்போய்ப்பார்ப்பனர்களைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமாய் பேசினீர்களாமே! இது சரியா? இதன் இரகசியம் என்ன?" என்று கேட்டதுடன் நமது மரியாதைக்கும் பக்திக்கும் உரியவருமான பெரியார் ஒருவர் வந்து நம் மீது கோபித்துக் கொண்டதாலும், இதை பொது ஜனங்கள் அறியவேண்டி விளக்க வேண்டியதாயிற்று.

கடைசியாக நாம் இதுவிஷயத்தில் சொல்வதென்னவென்றால், இவ்வளவு சங்கதியும் தெரிந்து எந்த விதத்திலும் பார்ப்பனர் சம்பந்தமே கூடாது என்பதாகக் கருதி யாராவது எதிரிடையாக ஓட்டுக்கொடுத்திருப்பார்களானால் அவர்களை யெல்லாம் நாம்பாராட்டுவதுடன், இவ்வித உணர்ச்சி பெருகி இருப்பதற்கு நாம் மகிழ்ச்சியடைவதோடு அவ்வுணர்ச்சி இவ்வளவு தூரம் பரவி இருப்பதற்கு உண்டான பெருமையில் நமக்கும் ஒரு சிறு பங்காவது இருக்கக்கூடும் என்று பெருமையும் அடைகின்றோம்-ஆனால் அர்த்தம்தெரியாமலும் கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டும் அலட்சியம் அசூயை பொறாமை முதலிய வேறு காரணங்களைக் கொண்டும் வேண்டுமென்றே தோற்கடிக்கப்பட்டதாயிருந்தால் அது விசனப்பட வேண்டிய காரியமேயாகும்.

## தலைவர் தேர்தல்

இந்த இயக்கத்திற்கு ஒரு தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று மகாநாட்டில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு இயக்கத்தை நடத்த ஒரு கமிட்டி நியமிக்கவேண்டும் என்று கொண்டுவரப்பட்ட திருத்தமானது காலநிலைமையை உணர்ந்து ஏற்கனவேமுடிவு

செய்து கொண்டு வரப்பட்டதாகும். ஏனெனில், தலைவர் தேர்தலில் யாரையும் ஏகமனதாய் தெரிந்தெடுக்க முடியவே முடியாத நிலைமையில் இருந்ததோடு யார், தெரிந்தெடுக்கப் பட்டிருந்தாலும் சிலர் தலைவர் தேர்தல் காரணத்தைச் சொல்லிக் கொண்டே கட்சியை விட்டு வெளியேறி கட்சிக்குக் கெடுதிசெய்யக்காத்துக்கொண்டிருந்தார்கள் என்பதும் நாம் நன்றாய் அறிந்திருந்ததோடு, தலைவர் தேர்தலுக்கு ஆசைப்பட்டவர்களில் பெரும்பான்மையோர் தங்களுக்கு தலைமைப் பதவி கிடைக்காவிட்டாலும், வேறு ஒருவருக்கு ஆகக் கூடாது என்பதிலேயே அதிகக் கவலை வைத்திருந்தவர்களாகவும் காணப்பட்டார்கள், இவைகளை யெல்லாம் உத்தேசித்தே கமிட்டியை வலியுறுத்தப்பட வேண்டியதாயிற்று. ஆனால், திரு. பி. டி. ராஜன் அவர்கள் தலைவர் ஸ்தானத்திற்கு அபேட்சகராய் தான் நிற்பதில்லை என்றும் மகாநாட்டுத் தலைவர் என்கின்ற முறையில் திரு. முனிசாமி நாயுடுவை தலைவராய் இருக்கட்டும் என்றும் மிக்க பெருந்தன்மையோடும் கட்சியின் நன்மையில் கவலை கொண்டும் சொல்ல முன் வந்ததே தலைவர் தேர்தல் சம்பந்தமாக ஏற்படக் கூடும் என்று எதிர்பார்த்த கஷ்டங்கள் எல்லாம் திடீரென மறைந்ததற்கு முக்கிய காரணமாகும். அந்த விஷயத்தில் திரு. ராஜன் அவர்களை யாரும் பாராட்டியே ஆகவேண்டும். பிறகு டாக்டர் சுப்பராயன் முதல் கொண்டு மற்ற தலைவர்களும் அந்த முடிவை ஒப்புக் கொண்டதும் போற்றக் கூடியதே யாகும். இவற்றால் மகாநாட்டுத் தலைவர் கட்சித்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதிலும் எல்லாத் தலைவர்களும் ஒப்புக்கொண்டதாலும் பிரதிநிதிகள் எல்லோரும் இதை ஏகமனதாய் ஒப்புக்கொண்டு தீர்மானித்ததாலும் நெல்லூர் மகாநாட்டின் முடிவு எதிர்பாராத வெற்றியைக் கொடுத்ததோடு, நெல்லூர் மகாநாட்டில் ஏற்படப் போகும் பிளவினால் தமது காரியத்தைச் சாதித்துக்கொள்ளலாமென்று கருதி எதிர்பார்த்துக்கொண்டு இருந்த நமது இயக்க எதிரிகளுக்கும், சுயநலக்காரர்களுக்கும் ஜீவநாடி ஒடுங்கிப் போய்விட்டதுடன் இன்னது செய்வது என்று தோன்றாமல் ஸ்தம்பித்து போகும்படி நேரிட்டுவிட்டது. எனவே, நெல்லூர் மகாநாடானது பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கு பலவிதத்திலும் ஒரு பெரிய வெற்றிக் குறியேயாகும்.

எல்லாவற்றையும்விட நமது கட்சிக்கு ஒருபெரிய கவுரவம் என்னவென்றால், இதுவரை நமது கட்சியைப்பற்றி குறைகூறி ஜஸ்டிஸ் கட்சி தேசத்துரோக கட்சி யென்றும் அதை எப்போதும் எதிர்த்தாக வேண்டும் என்றும் எப்படியாவது ஒழித்தாகவேண்டும் என்று எழுதிவந்த ‘தேசியப்பத்திரிகை’ களாகிய பார்ப்பனப் பத்திரிகைகளும் “தேசிய வீரர் களாகிய” பார்ப்பனர்களும் மற்றும் அவர்கள் வால்களும் இன்று நமது கட்சியில் பார்ப்பனர்களைச் சேர்த்துக்கொள்ள வக்காலத்து பேசுவதும் கட்சியின் கொள்கைகளைப்பற்றி பேச்சு மூச்சுக் காட்டாமலிருப்பதும் கட்சியின் வெற்றியாகும். ஒரு சமயம் பார்ப்பனர்களில் “சிலர் எந்தப் பார்ப்பனன் ஜஸ்டிஸ் கட்சியில் சேரப்போகிறான். இவர்கள் கூப்பிட்டால்தான் யார் வரப்போகிறார்கள்” என்று சொல்லக்கூடும். அப்படியானால் இந்த பத்திரிகை முதல் திரு. சத்தியமூர்த்திவரை பார்ப்பனர்களை இக்கட்சியில் சேர்த்துக் கொள்ளாததற்கு வருத்தப்படுவானேன்? மற்ற “தேசியப்பத்திரிகை” களும் தலைவர்களும் பார்ப்பனர்களுக்கு வக்காலத்துப்பேசுவானேன்? என்பதுதான் நமக்குவிளங்கவில்லை.


# எனது தோல்வி

நெல்லூர் மகாநாட்டில் பார்ப்பனர்களை சட்டசபைக்கட்சியில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்கின்ற தீர்மானம் தென்இந்திய நலவுரிமைச்சங்க நிர்வாக சபையின்பேரால் பிரேரேபிக்கப்பட்டு என்னால் ஆமோதிக்கப்பட்டு அது விஷயாலோசனைக் கமிட்டியில் ஒரு ஓட்டில் தோல்வியடைந்து விட்டது. ஒரு ஓட்டில் தோல்வியடைந்தாலும் அது சரியான தோல்வியே என்பதில் யாதொரு ஆட்சேபனையுமில்லை. ஓட்டு சேகரித்த முறை எவ்வளவு ஒழுங்கற்றதென்று சொல்வதாலும் முடிவை மாற்றிக் கொள்வதற்கு அந்த சமாதானம் சிறிதும் பயன்படாதாகையால் அது உபயோகமற்ற சமாதானமாகும். அன்றியும் ஒரு கட்சியார் மாத்திரம் தான் ஓட்டு சேகரிக்கும் முறையில் சரியாக நடக்கவில்லை என்று சொல்லவும் முடியாது. தீர்மானம் ஒரு சமயம் வெற்றிபெற்றிருந்தாலும் தோல்வியுற்றவர்களும் இதே சமாதானத்தைத்தான் சொல்லக்கூடும்: ஆதலால் தோல்விக்கு சரியான சமாதானம் சொல்ல வேண்டியது எமது கடமையாகும்.


முதலாவது இந்தத் தீர்மானமானது அவசியமில்லாததும் அர்த்தமற்றதுமான தீர்மானமாகும் எப்படியெனில் இத்தீர்மானம் நிறைவேறினாலும் நிறைவேறாவிட்டாலும் தீர்மானத்தின் உண்மையான தத்துவம் அமுலில் தானாகவே நடந்துதான் தீரும். அதாவது இது நிறைவேறினால்தான் பார்ப்பனர் சட்டசபையில் நம்முடன் இருக்கக் கூடுமென்றோ நிறைவேறா விட்டால் நம்முடன் இருக்க முடியாமல் போகுமென்றோ சொல்லிவிட முடியாது. மந்திரி சபையை நாமாகவே நடத்திக் கொண்டு போகமுடியும்என்கின்ற உறுதியான பலம்கொண்ட நிலைமை நமக்கு வரும்போது பார்ப்பனர்களை நாம் சேர்க்கவே மாட்டோம். நமக்கு பலமில்லை என்று தெரியும்போது பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளவும் அவர்களுக்குஉத்தியோகம் கொடுக்கவும்சிறிதும்பின்வாங்கவுமாட்டோம். சிலசமயத்தில் நமக்குபலமும் கட்டுப்பாடும் இருந்தாலும் தைரியக்குறைவு ஏற்பட்டால் பார்ப்பனர்களை நாமாக வேதேடிக்கொண்டும்போகின்றோம். இது தான் ஜஸ்டிஸ் கட்சியின் அனுபவமுமாகும்.

உதாரணமாகஎத்தனையோபார்ப்பனர்கள் தேவஸ்தான சட்டத்தை எதிர்த்தும் மற்றும் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்தும் அது நிறைவேறிய பின் ஜஸ்டிஸ் கட்சி மந்திரிகள் தேவஸ்தான போர்ட் தலைமைப் பதவியை ஒரு பார்ப்பனருக்கும் தேவஸ்தானக் கமிஷனர் பதவிகளில் ஒன்றை ஒரு பார்ப்பனருக்கும் வலியக் கொண்டுபோய் கொடுத்தார்கள். இதன் காரணம் என்னவென்றால் அந்தப்படி செய்திருக்காதபட்சம் அது சமயம் கக்ஷி நிர்வாகம் கஷ்டமானதாயிருந்திருக்கும் என்பதுதான். ஆனால் ஜஸ்டிஸ் கட்சி தோல்வியடைந்து பார்ப்பனக்கட்சி மந்திரி அதிகாரத்திற்கு வந்த சமயத்தில் அதேபோர்டு தலைவர் பதவி காலியானதும் பார்ப்பனக்கக்ஷி மந்திரிகளாலேயே அந்த ஒருபார்ப்பனரல்லாதாருக்குக் கொடுக்கப்பட்டது. இதைக்குறித்து ஒரு பார்ப்பனராவது சத்தம் போடவே இல்லை. இதன் காரணம் என்ன? இந்தப்படி செய்திருக்காவிட்டால் அந்த மந்திரிகளின் நிர்வாகமானது அப்போது சற்று கஷ்டமானதாயிருந்திருக்கும்; தவிர காங்கிரஸின் சார்பாக பார்ப்பனரல்லாத மந்திரி மார்களே மூவர் இருந்த காலத்தில்தான் ஜஸ்டிஸ்கட்சி அந்த மந்திரிகளை கவிழ்க்க முயற்சி செய்தது. காரணமென்னவென்றால் அந்த மந்திரிகளின் நிர்வாகமானது பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு கஷ்டத்தை உண்டாக்கும் என்பதுதான். தவிர அந்த பார்ப்பனரல்லாத மந்திரி சபையை கவிழ்த்த பார்ப்பனரல்லாதார் கட்சியானது ஒரு பார்ப்பனரல்லாத மந்திரியை ஒழித்து அந்த ஸ்தானத்தில் ஒரு பார்ப்பன மந்திரியை வைத்து ஆதரித்து அதற்கு எவ்வித ஆபத்தும் நேரிடாமல் இன்றும் காப்பாற்றிக் கொண்டு தான் வருகின்றது. இதன் காரணமென்னவென்றால் இந்தப்படி செய்யாவிட்டால் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு போதிய அனுகூலம் கிடைக்காது என்கின்ற கவலை தானே ஒழிய, கனம் சேதுரத்தினம் அய்யரை காப்பாற்றாவிட்டால்பார்ப்பனரல்லாதார் கட்சியே அடியோடு அழிந்துபோகும் என்கின்ற பயம் அல்லவே அல்ல. அன்றியும் சென்னை அரசாங்க நிர்வாக சபையில் மெம்பராயிருந்த திரு. கே. சீனிவாசய்யங்கார் காலம் சென்றதும் அந்த ஸ்தானத்திற்கு திருவாளர்கள் எஸ். சீனிவாசய்யங்காரும் சர். சி. பி. ராமசாமி அய்யரும் சர் தியாகராயர் வீட்டிற்கு நடந்ததில் சர். தியாகராயர் சர் சி. பி. அய்யரையே சர்க்காருக்கு சிபார்சு செய்தார். அந்தக் காலத்தில் சர். தியாகராயர் செல்வாக்கு அவ்வளவு பலமாயிருந்தும் ஏன் ஒரு பார்ப்பனரை சிபார்சு செய்தார் என்றால் அந்தக்காலத்தில் அது ஒரு பார்ப்பனருக்குக் கொடுத்துத்தான் தீரவேண்டிய நிலையில் சர்க்கார் இருந்ததுதான். அதே வேலை மறுபடியும் காலியானதும், பார்ப்பனரல்லாதார் கட்சிஅபிப்பிராயத்தை எதிர்பாராமலே ஒரு வருணாச்சிரம சாஸ்திரிக்குக் கொடுக்கப்படுவானேன்? அவர் கோபித்து வேண்டாம் என்ற பிறகுகூட அந்த வேலை பார்ப்பனரல்லாதார் கட்சியைத் தேடிக்கொண்டு வந்து சரண் புகுவானேன்? அன்றியும் அந்த சமயம் பார்ப்பனரல்லாதார் கட்சிக்கு அவ்வளவு பலமிருந்தும் கனம் சேதுரத்தினமாகிய ஒரு பார்ப்பனருக்கு மந்திரி பதவியை கொடுப்பானேன்? நம்மின் ஆள்கள் இல்லையா? அல்லது யாரும் ஆசைப்பட வில்லையா? எனவே மேற் கண்ட இந்த நடவடிக்கைகளையெல்லாம் கவனித்துப் பார்த்தால் மேலே சொல்லப்பட்ட தீர்மானத்தின் தத்துவம் என்ன என்பது ஒரு சாதாரண மனிதருக்கும் விளங்காமல் போகாது. நிற்க; இதற்காக நான்ஏன் இந்த தீர்மானத்தில் இவ்வளவுகவலைகொண்டு ஆமோதித்தேன்? நான் ஏன் நிறைவேற்ற வேண்டுமென்றும் ஆசைப்பட்டேன்? என்று பொது ஜனங்கள் அறிய ஆவல் கொள்வார்களானதால் அதற்கும் பதில் சொல்லியாகவேண்டியவனாக இருக்கின்றேன். அதாவது பானகல் அரசர் இறந்த காலத்தில் மந்திரி கட்சியார் நம்முடன் சேர வேண்டும் என்று ஆசைப்பட்டதற்கு அவர்கள் நம்மைக் கேட்டுக்கொண்ட குறைந்த நிபந்தனை இதுவாகஇருந்ததும்; அதாவது சட்டசபை கட்சியில் பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்ளலாம் என்பதும் இந்த குறைந்த நிபந்தனையும், அதுசமயம் தென் இந்திய நல உரிமைச் சங்கப் பிரமுகர்களும் அடியேனைக் கேட்டே முடிவு சொல்லவேண்டியிருப்பதாக சொன்னதாலும், மந்திரி கட்சியாரும் அடியேன் ஒப்புக்கொள்ளும் தைரியத்தாலேயே நம்பி சம்மதிக்கப் போவதாக சொன்னதாலும், அடியேனும் ஒப்புக்கொண்டு சம்மதமும் வாக்குத்தத்தமும் செய்யவேண்டியதாய் விட்டதால் அதை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டிய பொறுப்பு எனதுதலையிலும் சிறிது விழுந்துவிட்டது. எதிர்பாராதகஷ்ட சம்பவமாய் இருகட்சியின் தனித்தனிநன்மையோ அல்லது இரு கட்சியில் உள்ளவர்களின் தனித்தனி நன்மையோ நெல்லூர் மகாநாட்டில் இந்த நிபந்தனையின் முடிவைப் பொறுத்தே இருப்பதாக இரு கட்சியாரும் தெரியாமல் நினைத்துக்கொண்டதால், இத்தீர்மானத்தை நிறைவேற்ற ஒரு கட்சியும், தோற்கடிக்க ஒரு கட்சியும் முனைந்து முயற்சி செய்யவேண்டியதாய் ஏற்பட்டு விட்டது, ஆகையால் முனிசிபல் தேர்தல்களில் ஓட்டு சேகரிப்பதுபோலவே ஓட்டு

சேகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. என்றாலும் இந்த நிலையில் எனது கடமை என்ன என்பதை பொது ஜனங்கள்யோசித்துப் பார்க்கவேண்டுமாய் ஆசைப்படுகின்றேன். நடு நிலைமை வகிக்க முடியாத கஷ்டத்தில் சிக்கிக் கொண்டதால் ஏதாவது ஒரு கட்சியின் விஷ்டுரத்தை சம்பாதித்துக்கொள்ள வேண்டியதாய் போய்விட்டதில் எந்தப்படி நடந்தால் விஷ்டுரம் வந்தாலும் நாணயத்தை பாதிக்காது என்று நினைத்தேனே, அந்தப்படி செய்யவேண்டிய தொண்டில் இறங்க முடிவுசெய்து விட்டேன். அன்றியும் இந்த முடிவானது என்னை நன்றாய் அறிந்த எனது நண்பர்களின் கருத்துக்கு விரோதமாயிருந்தாலும், என்னை அன்னியனாய்க் கொண்டு இருந்து பிறகு துணிந்து நம்பியவர்களுக்கு தாங்கள் நம்பின நபரிடத்தில் மோசமில்லை என்று கருதும்படியாகவும் இருந்ததால் நிறைவேற்றி வைக்க மனதாரமுயற்சி செய்தேன். ஆனால் முயற்சி பலிக்கவில்லை; தோல்வியே அடைந்தேன். என்றாலும் இந்த தோல்வி எனது நாணயத்தையாவது நான்செய்த முடிவையாவது சிறிதும் பாதிக்கவில்லை. என் தோல்வி அடைந்தேன் என்றால் முதலாவது மகாநாட்டுத் தலைவர் ஒழுங்காய் காரியங்களை நடத்தவில்லை. விஷயாலோசனைக்கமிட்டி நியமனவிதியை அடிக்கடி மாற்றிக் கொண்டார். அவர் வாக்குக் கொடுத்ததுபோல் நடக்க முடியாமல் குழப்பம் ஏற்பட்டு விட்டது. ஆதலால் தலைவருக்கு மன உறுதி போய்விட்டது. அப்படி இருந்தாலும் இந்த தீர்மானம் விஷயாலோசனைக் கமிட்டியில் ஒரு ஓட்டில் தோற்றுப் போயிருந்தும் அந்த முடிவை மகாநாட்டிற்குத் கொண்டுவர காலையில் சம்மதித்தவர், பிறகு கொண்டுவரவில்லை அன்றியும் இத்தீர்மானத்தைப்பற்றியும் ஓட்டுச் சேகரித்தவர்கள் செய்வித்த குழப்பங்களால் ஏற்பட்ட குழப்பங்களையும் விளக்க சந்தர்ப்பம் கொடுப்பதாய் வாக்குக் கொடுத்து அதற்காகவே கமிட்டியை ஒத்திப்போட்டவர் மறுபடியும் கமிட்டி கூடினதும் அக்குழப்பத்துடனேயே ஓட்டு எடுத்துவிட்டார். இவைகள் ஒருபுறமிருக்க, இத்தீர்மான விஷயத்தில் எனக்கு உள் எண்ணம் கற்பித்து பிரசாரம் செய்ததும் என்னை "குரு" என்றும் "தலைவர்" என்றும் சொல்லிக்கொண்டிருந்தவர்களே இவ்வித பிரசாரத்தில் பலமாக ஈடுபட்டிருந்ததும், அதிலும் சிலருக்கு தீர்மானத்தைப்பற்றி கவலையேஇல்லாமல் எனக்குவிரோதமாய் முயற்சி செய்வதை தங்களுக்கு ஒரு பெரிய உற்சாகமாய் கொண்டதும் ஆகிய காரியங்கள் என்னுடைய நம்பிக்கைக்குவிரோதமான பலனைக் கொடுக்க நேர்ந்துவிட்டது. இந்தத்தீர்மானத்தில் தமிழ் ஜில்லாக்கள் 13 ல் 10 ஜில்லாக்கள் எனக்கு விரோதமாய ஓட்டுச்செய்ததும், அனுகூலமாக ஓட்டு செய்த 3 ஜில்லாக்களில் இரண்டு ஜில்லா நமது சம்பந்தமில்லாமல் எதிர்கட்சி பிரசாரத்தால் ஓட்டுச் செய்ததும், ஒரே ஒரு ஜில்லா அதுவும் கோயமுத்தூர் ஜில்லா மாத்திரம் எனக்கு அனுகூலமாய் எனது சொந்த தாட்சண்யத்திற்காக ஓட்டுச் செய்ததுமான நடவடிக்கையைபார்க்கும்போது, எனக்கு தமிழ் நாட்டில் உள்ள செல்வாக்கு எவ்வளவு என்பது கெதியாக்கியது மல்லாமல் "ஈ. வெ. ராமசாமியும், கண்ணப்பரும் மந்திரிகளுடன் சேர்ந்து கொண்டு பார்ப்பனர்களை தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தில் சேர்த்துக்கொள்ள நெல்லூர் மகாநாட்டில் முயற்சி செய்தார்கள். நாங்கள் ஒரே அடியாய் அடித்து விட்டோம்" என்றும், மற்றும் சில கற்பனைகளைக்கொண்டும் திண்ணைப் திலில்லை என்றும், அதனால் எனது சொந்தத்திற்கு எவ்வளவு கெடுதி ஏற்படுவதாயிருந்தாலும் நமக்குக் கவலை இல்லை என்றும் நினைத்துக் கொண்டிருக்கும் நான், பார்ப்பனர்களை தென் இந்திய நல உரிமைக் கட்சியில் சேர்க்கவேண்டுமென்று நினைத்து விட்டால், கட்சியின் நன்மை தீமைகளைப் பற்றி கவலை இல்



நெல்லூர் மகாநாட்டுத் தொண்டர் படை:—திரு. பி. முனிசாமி நாயுடு, ஈ. வெ. இராமசாமி, பி. இராமச்சந்திர ரெட்டி முதலானவர்கள் அமர்ந்துள்ளனர். [போட்டோ நியூஸ் ஏஜன்ஸி]



திரு. ஆர். கே. ஷண்முகம் அவர்கள் பேசுகிறார். [போட்டோ நியூஸ் ஏஜன்ஸி]

தும், எனது "தலைமை" ஸ்தானத்தின் யோக்கியதை எவ்வளவு என்பதும் குருடனுக்கும் விளங்காமல் போகாது. மேலும் "குதிரை கீழே தூக்கிப்போட்டதுமல்லாமல் புதைப் பதற்கு குழியும் பறித்தது" என்கின்ற பழமொழிபோல் நமது தீர்மானத்தையும் விருப்பத்தையும் இக் பிரசாரமும் செய்வதில் சிலர் ஊக்கமாக இருப்பதைப் பார்த்தால், அவர்களைப் பற்றி ஒரு புறம் வேடிக்கையும் மற்றொருபுறம் பரிதாபமும் படவேண்டியிருக்கின்றது. ஏனெனில் கட்சியின் நலத்தைத்தவிர வேறு எந்தக் காரியத்தை உத்தேசித்தும் பார்ப்பனர்கள் சம்பந்தம் நமக்குவேண்டிய லாமல் தமது சொந்த நன்மை தீமையை உத்தேசித்தேசேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கருதிக் கொண்டிருக்கும் தலைவர்களும் பின்பற்றுபவர்களும் பெரும்பான்மையாய் உள்ள கட்சியில் அது எப்படி நிறைவேறாமல் போகும் என்பது பரிகாசமாயிருப்பதுடன், இம்முயற்சியில்

## செய்தித் திரள்.

திருப்பூர்:—14-10-1929 திங்களன்று மாலை 4-30 மணிக்கு திருப்பூர் முனிசிபல் பழைய டவுன் ஆண் பெண் ஆரம்ப பாடசாலைகளின் முதலாண்டு நிறைவு விழா திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார் தலைமையில் நடைபெறும்.

* * *

வேளாங்கண்ணி:—(1) காலஞ்சென்ற வேளாக்கிழார் அருணாசலனாரது பதினாறும் நாள் சடங்கு பார்ப்பனரல்லாதாரால் நடாத்தப்பெற்று சமபந்திச் சாப்பாடு படைக்கப்பெற்றது. (2) இவ்வூர் ஆசிரியர் திரு. எம். எ முருகேசன் அவர்கள் தம் மைப் பெற்றார் திதியை முழுப் புரோகிதமொழித்து சமபந்திச் சாப்பாடு படைத்துக் கொண்டாடினர்.

* * *

தென்தின்னனூர்:—வந்தவாசி, ஒருகுருக்கருகே உள்ள தென்தின்னனூர் கிராமத்தில் திருவளர் சுப்பராய முதலியார் தனது மனைவியார் காலஞ்சென்றதற்காக புரோகிதத்தை ஒழித்து பஜனை நடாத்திக் கருமாதிகளை அநுட்டித்தார் என்று அறிவிக்கப்படுகின்றது.

---

எவ்விதம் வெற்றி அடைவார்கள் என்பதில் பரிதாபமாயுமிருக்கின்றது. நானும் திரு. ராஜன் அவர்களும் தமிழ் ஜில்லாக்களில் சமீபத்தில் சுற்றுப்பிரயாணம்செய்த காலத்தில் ஒவ்வொரு ஜில்லாக்காரர்களும் இவ்விஷயத்தில் அவர்கள் கொண்ட அபிப்பிராயம் நமக்கும்நான்கொண்ட அபிப்பிராயம் அவர்களுக்கும் நன்றாய் தெரிந்ததும், பிறகு கடைசியாக இருவருக்குள்ளும் ஏற்பட்ட முடிவும், தலைமையில் உள்ள யாவருக்கும் இதற்குள் மறந்து போயிருக்காது. ஏதோ சமய சந்தர்ப்பத்தினால் இம்மாதிரி நடக்க முடிந்தது என்றும், இவ்வித முடிவு ஏற்பட வேண்டியிருந்த தென்றும் உண்மையை ஒப்புக்கொண்டு இருப்பவர்களைப்பற்றி எவ்விதத்திலும்நமக்கும், நம்மைப்பற்றி அவர்களுக்கும், கடுகளவு அபிப்பிராய பேதமும் ஏற்பட நியாயம் கிடையாது என்பதும்; இவ்விதம் ஒரு சம்பவம் நடந்ததாகவே ஒருவருக்கொருவர் மறுபடியும் ஞாபகத்திற்கே கொண்டுவர வேண்டியதில்லை என்பதும் முடிவான காரியமாகும். ஆனால் இந்த விஷயத்தை பொறுப்பற்ற சிலர்கள் ஆயுதமாக வைத்துக்கொண்டு கூலிப்பிரசாரம் செய்வதாக தெரியவருவதால் பாமர மக்களுக்கு இதை விளக்காமல் இருக்க முடியவில்லை யாதலால், இதை இவ்வளவு தூரம் எழுதித் தீரவேண்டியிருந்ததற்கு நானே வருந்துகின்றேன். மற்றபடி நான்என்றென் இந்திய நல உரிமைச் சங்கத்திற்கு ஒருதலைவரை நியமிப்பதற்கு பதிலாக கமிட்டி நியமிக்க வேண்டுமென்று தீர்மானம் கொண்டுவந்தேன் என்பதற்கு உள்ள காரணத்தை பின்னால் தெரிவித்துகொள்ளுகிறேன்.

ஈ. வெ. ரா.

---


அசல்

# தாம்பர பஸ்பம்

மூன்றே வேளையில் குணம் தெரியும்.

குணமில்லாவிடில் பணம் வாபீஸ்.

கொடிய ரோகமாயிருந்தபோதிலும் சரியே நமது அசல் தாம்பர பஸ்பத்தை 12 நாள சாப்பிட்டால் போதுமானது. மற்ற மருந்துகளைப்போல் நம்பிக்கையில்லாமல் நினைத்து தருவித்து சாப்பிடாமல் நோயால் கஷ்டப்படாதீர்கள். நம்பிக்கையுடன் தருவித்து சாப்பிட்டு குணத்தை அடையுங்கள். நிச்சயமாய் குணமுண்டாகும்.

சாப்பிடுங்கள்; கைகண்ட மருந்து.

குஷ்டம், குறை நோய், தடிப்பு, திமிர், மதமதப்பு, செம்மேகப் பற்று, கருமேகப் பற்று, கருங் குஷ்டம், வெண் குஷ்டம், அரிப்பு, நமைச்சல், கிரந்தி, ஆராத ரணங்கள், குழிப்புண்-புரை, கண்டமாலை, பவுத்திரம், கன்னப் புற்று, யோனிப் புற்று, குன்மம், சூலை முதலிய கொடிய வியாதிகளும், நீரா தென கைவிடப்பட்ட இதர நோய்களும் அவசியம் குணமாகின்றன.

## உங்கள் கவலை தீர்ந்துவிட்டது!

உங்களைப்போலிருந்து கவலை ஒழிந்த மனிதன் கூறுவதைக் கவனியுங்கள்:—

நற்சாக்ஷி:— கோலாலம்பூர், கண்டங்கர்பு ரோட்டு, பஜனை மடம், ஸ்கூல்மாஸ்டர், எஸ். குழந்தைசாமி பிள்ளை 31-10-1928-ல் எழுதுவதை பாருங்கள்:—

ஐயா, தாங்களனுப்பிய தாம்பர பஸ்பத்தை 12 நாள் என் மகளுக்குக் கொடுத்ததில் வளைந்திருந்த விரல்கள் நிமிர்ந்துவிட்டன. நெருப்புப் பட்ட போதிலும் தெரியாமல் சொரணையற்றிருந்த இடங்களில் சொரணையும் கை விரல்களில் கெட்டியும் உண்டாகிவிட்டது.

12 நாள் சாப்பிடக்கூடிய அனுபானம் உள்பட ரூ. 15—0—0.

அரண்மனை வைத்தியர் S. T. மாணிக்கம் பிள்ளை,

ஆயக்குடி போஸ்டு, (Via.) திண்டுக்கல் S. I. R.

குறிப்பு:—நம்மிடம் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகளிருக்கின்றன. மலாய் நாட்டுவாசிகள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது ரூபா 5 அட்வான்சு அனுப்பவேண்டும்.

(49)


புதியமுத்தூர்: 13 9-29ல் திரு: சுப்பய்யாவுக்கும் செல்வி நடராஜம்மாளுக்கும் மணமகன் இல்லத்தில் ஆடம்பரமின்றி சுத்த சுயமரியாதை திருமணம் நடைபெற்றது. அதுகாலை அவ்வூர்ப்பிரமுகர்கள் அனைவருமே எழுந்தருளியது மிகவும் பாராட்டற்பாலது.

* * *

காஞ்சிபுரம்: ஐயங்கார் பாளையத்தில் பார்ப்பனர் ஒழிந்த சுயமரியாதைத்திருமணம் ஆசிரியர் திருவாளர் பரசுராமன் அவர்கட்கும் செல்வி நாகம்மாளுக்கும் இனிது நடைபெற்றது என்றும் இதுவே இவ்வூரில் முதன்மையான சுயமரியாதை திருமணம் என்றும் திரு. சி. ராஜமாணிக்கம் அறிவிக்கின்றார்.

* * *

உத்திரன் மேரூர்:— அத்தியூர் கிராமம் திரு. அ. வி. கிருஷ்ணசாமி அவர்கள் சிற்றம்மையார் ஜானகி அம்மாளது பதினாறாம் நாட் கடன் புரோகிதத்தை அறவே நீக்கி நிறைவேற்றப்பட்டது என்றும் அதுகாலை சுமார் 600 பேர்கட்குப் பெருஞ்சோறு படைக்கப்பட்டதென்றும் அறிவிக்கப்படுகின்றது.

## சீலையப்பட்டியில் மதம் மாற்றம்

—0—

### 69 இந்துக்கள்-முஸ்லிம்களானார்.

இவ்வூரில் இருக்கலாகிய, பிள்ளைகளின் ஊட்டுதிய அகங்காரத்தில் அமிழ்த்தப்படுகிற "குடும்பர்கள்" 6—10—29 தேதி ஆண் பெண் பாலடங்க 69 நபர்கள் முஸ்லிம் மதம் புகுந்தனர். அன்று உத்தமபாளையம் சின்னமனூர் சீப் பாலக்கோட்டை முதலிய நகர்களிலிருந்து ஏராளமாக 300 நபர்கள் வரை முஸ்லிம்கள் விஜயம் செய்திருந்தனர். இவ்வரிய பெரிய கூட்டத்தினிடையே முஸ்லிம் சகோதரர்கள் அரிய சொற்பெருக்கு நிகழ்த்தி அன்று முஸ்லிம் மதம் புகுந்த குடும்பர்களுக்கு சமபந்தி போஜனம் செய்வித்தது மெச்சத் தக்கதாகும். இன்னும் கூடிய சீக்கிரத்தில் மிகுதியுள்ள இந்து மதக் "குடும்பர்களும்" முஸ்லிம் மதத்தில் சேருவதாக வாக்களித்திருக்கின்றனர் நமது இந்தியாவில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஒரு சில அறிவிலிகளால் இந்து மதம் சீர்கேடடையுமென்பதில் எட்டுணையும் ஐயமின்று. இது விஷயமாக இந்து மத சீர்திருத்தக்காரர்கள் கவனிப்பார்களாக. சீர்திருத்தக்காரர்களாக வாளாவிருப்பின் இந்துமதத்திலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களனைவரும் முஸ்லிமாகத் தோன்றுவார்கள். அக்காலம் நமது இந்து மதம் எத்துணை கேவல நிலைக்கு வருமென்று நண்பர்கள் ஊன்றி நோக்குவார்களாக என்று ஒரு நிருபர் எழுதுகின்றார்.

# ஸ்ரீ காசிமடத்து சுவாமிகளின் கருணை

—0—

இத்தலைப்பிட்ட கட்டுரை சிவநேசன் பத்திரிகையில் 30—9—29 ல் வெளிவந்திருக்கிறது. அதில் பிரம்ம ஸ்ரீ சாமிநாதய்யரின் தலையில் பிரம்ம ஸ்ரீ சுப்ரமண்யஅய்யருக்கு, ஸ்ரீலஸ்ரீ சொக்கலிங்கத்தம்பிரானால் ஆயிர ரூபாய் கொடுக்கப்பட்டதென்றும், திருவாலவாய் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் அக்காலத்தில் பக்தருக்கு பொற்கிளி அளித்தருளியது போல, இக்காலத்தில் திருப்பனந்தாள் காசி மடத்தில் ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரானாக வந்து தனித் தமிழ் மொழி வல்லுனருக்குப் பொன்முடிப்பளித்து தனது கருணையைக் காட்டினார் என்றும் எழுதக் கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறோம்.

ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரானும், திருவாவடுதுறை ஆதீனத்தாரும் மற்றொரு வகையிலும் கருணையுடையவர்களாகவே காணப்படுகிறார்கள்.

படிக்கும்போது மேற்படி சுப்பிரமணிய அய்யர் கோதண்டராம அய்யரால் தூண்டப்பட்டு சில பார்ப்பன மக்கள் கேட்டு நகைக்க, காசி மடத்துத் தம்பிரான்களும், திருவாவடுதுறைத் தம்பிரான்களும், காவி வேட்டி உடுத்திக்கொண்டு கைம்பெண்களையும் கற்புடைய பெண்களையும், கூடுகின்றார்கள் என்று அடிக்கடி வைவாரென்று பல மாணாக்கர்கள் சொல்லுவார்கள். அதனாலேயே மாணாக்கர்கட்குள் சில சண்டைகள் நடந்தனவாம். அப்படி வைத சுப்ரமண்ய அய்யருக்கு ரூபாய் ஆயிரமும் வையும்படி தூண்டும் கோதண்டராமய்யருக்கு ஆண்டு தோறும் காசிமடத்தாரும், திருவாவடுதுறை ஆதீனத்தாரும், நூறுக்குக் குறையாமலும் கொடுத்தும் கொடுக்கிறார்களென்றும் தெரிகிறோம். வைதவர்களுக்கு, எந்தத் தமிழனாவது, எந்த ஆரியனாவது பணம் கொடுப்பானா? கொடுத்தால், கொடுத்தது கருணை யென்றல்லவோ சொல்ல வேண்டும். அப்படிக் கொடுப்பது, மக்கட்குரிய குணமல்லாமையாலும், கடவுளைக் கூறும் போது, "முத்தமிழால், வைதாரையும் அங்கு வாழ வைப்போன்" என்று கூறுகிறபடியால், அப்படிப்பட்ட குணம் ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரானிடம் இருப்பதாலும், சொல்லொப்புமையாலும், சொக்கலிங்கக் கடவுளென்றே கூறவேண்டுவதில் என்ன ஐயம் இருக்கிறது? அவரைக் கருணையில்லாதவரென்று எவ்வாறு கூறுவது?

ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் கடவுளாகவும், கருணை யுடையவராகவும் இருந்தாலும் சுப்பிரமண்ய அய்யருக்கு ரூபாய் ஆயிரம் கொடுப்பதற்கு மூன்று தடைகள் இருந்தன. (1) வழக்கமாக முன்னால் ஒருவருக்குக் கொடுக்காதது. (2) மீனாட்சி தமிழ்க் காலேஜ் திருவையாற்றுக் காலேஜ் மாணவர் கட்கும், பொது ஜனங்கட்கும் ஆயிரம் ரூபாய் கொடுப்பதாகத் தெரிவிக்காதது. (3) பரிசு கொடுப்பதும் சுப்பிரமணிய அய்யர் தேறிய பரீட்சைக் கல்லாமல் தனித்தமிழ் பரீட்சையாகிய 7 டி. என்ற பிரிவுக்கிருப்பது.

இம்மூன்று தடைகளால் கடவுளாகிய சொக்கலிங்கத் தம்பிரானுக்கும் சுப்பிரமணிய அய்யருக்கும் சம்பந்தமில்லாமலிருந்தது.

ஸ்ரீ சொக்கலிங்கத் தம்பிரான் கடவுளாகையாலும் கடவுளுக்கு வழி காட்டுவது பார்ப்பார் ஆகையால் அப்பார்ப்பாரில் தானொருவராகையாலும் தனக்கு வழி காட்டுந் தொழில் உரியது என்பதற்கு மகா மகோபாத்தியாயர் முதலிய பட்டம் முன்னாலேயே அமைந்திருப்பதாலும், கடவுளைக் காண்பது பார்ப்பார்க்கு மட்டும் உரியதாகையால் அப்பார்ப்பாரில் சுப்பிரமணிய அய்யரும் ஒரு பார்ப்பாராகையாலும், முத்தடைகளையும் நீக்கி விடலாமென்று மகாமகோபாத்தியாயர் சாமிநாதய்யர் சுப்பிரமணியய்யருக்கு வழி காட்டுவதற்கு திருப்பனந்தாள் சொக்கலிங்கக் கடவுளிடஞ் சென்று ஒரு மண்டலம் மந்திரம் செபித்தார். செபிக்கச் செபிக்க முத்தடைகளும் நீங்கின. சொக்கலிங்கக் கடவுளும் கருணையால், கட்டிக்கொடுத்தார். சுப்பிரமண்ய அய்யரும் ரூபாய் ஆயிரம்பெற்றார்.

சாமிநாதய்யர் செய்த முயற்சியால் சுப்பிரமண்ய அய்யருக்கு மட்டும் ரூபாய் ஆயிரங்கிடைத்ததே யொழிய உபாத்தியாயராயிருந்து வழிகாட்டிய அய்யருக்கு ரூபாய் கிடைக்கவில்லையென்றே தெரிகின்றன. அவருக்குக் கொடுக்காததற்காக மிக வருந்துகிறோம். சாமிநாதய்யர் தமிழ்கற்றதால் தமிழ் மக்களிடம் கடன் பெற்றிருக்கிறாரே யொழிய தமிழ்மக்களுக்குள் ஒருவர்க்காவது கடன் கொடுத்திருக்கிறதாகத் தெரியவில்லை திருவாவடுதுறையில் அவர் தமிழ் கற்ற இருபதாண்டு வரை அவ்வாதீனச் சோற்றையேயுண்டு கடன்பட்டிருக்கிறார். புத்தகம் போடத்தொடங்கிய காலமுதல், இன்றுவரை தாம் சம்பாதித்ததிலிருந்து ஒரு காசும்போட முடியாமையால் ஒவ்வொரு புத்தகத்திற்கும், அச்சு முழுமையையும், ஒவ்வொரு தமிழ் மக்களிடமும் வாங்கிக் கடன் பட்டிருக்கிறார். ஐந்தாண்டுகட்கு முன்னால் தமிழ்ச்சங்கத்திற் கூடிய பல தமிழ் மக்களிடம், கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி ரூபாய் ஐயாயிரம் கடன்பட்டிருக்கிறார். இவ்வளவும் போதாமல் திருவாவடுதுறை, திருப்பனந்தாள், ராமநாதபுரம், முதலிய இடங்கட்குச் சென்று பாட்டுப்பாடி பணந் தேடிக்கொண்டும் வருகிறார். இவ்வளவிற்கும்மேலே, பிறரிடத்தில் பொருள் வாங்கி அச்சுப்போடும் புத்தகங்களையெல்லாம் அடக்கத்திற்கு ஒன்பது மடங்கு மட்டும் விலைகட்டி மிகவும் வருத்தப்பட்டு விற்றுக்கொண்டும் வருகிறார். இப்படி வருத்தப்பட்டுப் பொருள் தேடிக்கொண்டிருக்கிற அய்யரவர்கட்கு பொருள் கொடுக்காதது வருந்தத் தக்கதேயாகும். ஆயினும் ஐயரவர்கள் இவ்வாறெல்லாம் பொருள்தேடுவது தன் வயிற்றுக்குப் போதாமையினாலா? அல்லது பணப்பேய் விடாதிருப்பதினாலா? என்று தமிழ் மக்கள் யோசிக்கத்தக்கதாயிருக்கிறது. தமிழ் கற்று பணப்பேய் பிடித்து தமிழரிடத்திலேயே பணந் தேடுஞ்சாமிநாதய்யர், சென்றஆண்டுகளில் பரீட்சை தேறிய தமிழ் மக்கட்கு திருப்பனந்தாட் பரிசு முதல் முதலாகக் கிடைக்கும்படி திருப்பனந்தாள் சொக்கலிங்கக் கடவுளிடஞ் சென்று மந்திரஞ் செபிக்கலாகாதா வென்று கேட்கின்றோம். சாமிநாதய்யரால் தமிழ்மக்கட்கு உதவியில்லாமையால் தனக்குப்பொருள் தேடவும் பார்ப்பனர்க்குப் பொருள் வாங்கிக் கொடுக்கவும் பார்ப்பனர்களைத் தமிழ் நூல்களிற் புகுத்தவுமே அவர்தமிழ்க் கற்றவராகத்தெரிகிறது. ஸ்ரீ சொக்கலிங்கதம்பிரான் கடவுளாகவும் கருணையுடையவராகவும் இருந்தாலும் சென்ற ஆண்டுகளிற்றேறிய பார்ப்பனரல்லாத வித்வான்களுக்கு பரிசு கொடுக்காததும் கொடுப்பதாக எல்லோருக்கும் தெரிவிக்காததும், 7 டி என்ற பிரிவுக்கு உரிய பரிசை மாற்றி 7 பி என்ற பிரிவில் தேறிய சுப்பிரமணிய அய்யருக்குக் கொடுத்ததும் அவருடைய கருணையற்ற செயலாகவும் பார்ப்பனர்களுக்குக் கொடுத்த பிறகே தமிழருக்குக் கொடுக்க வேண்டுமென்ற நீய கொள்கை அவருடைய கொள்கையாகவும் தோன்றுகின்றன. பார்ப்பனர்களுக்கும் தம்பிரான்களுக்கும் சில ஆண்டுகளாக இருக்கிற நெருங்கிய சம்பந்தம் போல சுப்பிரமணிய அய்யருக்கும் கொடுக்க வேண்டியதாயிருந்தால் அவர்களுக்கு கொடுப்பது போலக் கொடுக்கலாமே கொடுப்பதும் முறை தவறியா கொடுக்க வேண்டும் என்று சிதம்பரம் ஜீ வேங்கடாசலம் எழுதுகிறார்.

---

## கடவுள் கடவுளென்ன காசை துலையாதே

---


**வலியுள்ளவர்கள்!**

சீக்கிரம் குணந்தரும் மருந்துக்கு ஆசைப்படுவார்கள் அதுதான்

### தேகரக்ஷாமிர்தம்

தீரும் வியாதிகள்

| | | |
|---|---|---|
| தலைவலி | வீக்கம் | வண்டு கடி |
| பிடரிவலி | சுரம் | தேள் கடி |
| முதுகுவலி | சளி | மேக ஊரல் |
| இடுப்புவலி | இருமல் | தேமல் |
| குடைச்சல் | மூக்கடைப்பு | வெட்டுக்காயம் |
| கை கால் பிடிப்பு | மார்சளி | பல்வலி |
| நெஞ்சடைப்பு | ஜன்னி | செவி நோய் |

நிமிடத்தில் குணப்படுத்த ஒரு துளி அமிர்தம் போதுமானது. ஒருமுறை பரிட்சிக்கவும்.

புட்டி 1க்கு விலை ரூ. 1—8—0 (தபால் செலவு வேறு)

நல்ல கமிஷன்; ஏஜண்டுகள் தேவை:—

தேகரக்ஷாமிர்தம் கம்பெனி, அம்மாபேட்டை, சேலம் S. I.



### குடி அரசு புத்தகாலயம்

வெளியாக்கும்

| | |
|---|---|
| ஞானசூரியன் 2-ம் பதிப்பு ... | 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். ... | 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ... | 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு ... | 0—2—0 |
| சோதிடப்புரட்டு ... | 0—2—0 |
| சாமிகளின் அடிமைகள் ... | 0-12—0 |

8 அணாவுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. 5 ரூபாய்க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணமனுப்பவேண்டும்.

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

(எப்) 14, மவுண்ட்ரோட், மதராஸ்.

## பினாங்கு செல்வி ஜானகி அம்மாளின் சொற்பெருக்கு


அன்பு நிறைந்த அக்கிராசனாதிபதி அவர்கட்கும், சகோதர சகோதரிகட்கும் எனது வணக்கத்தைச் செலுத்துகின்றேன்.

பணம் பிடுங்கும் பார்ப்பனரின் ஏமாற்றும் மூடச்சடங்குகளுக்கு அகப்படாது இன்று சுயமரியாதை முறைப்படி மணந்துகொண்ட மணமக்களிருவர்களும் எந்நாளும் சந்தோஷ வாழ்க்கையிலீடுபடவும், மற்றுமுள்ள சகோதரர்களையும் பார்ப்பனர்கள் ஏமாற்றும் சடங்குகளுக்கு அகப்படாது செய்ய மணமக்கள் பாடுபட வேண்டுகின்றேன். இங்கு வந்திருக்கும் சுவாமிஜீ அவர்களும், திரு. ஐயாரு அவர்களும் மக்களின் முன்னேற்றத்தைக்கருதி தம் அறிவின் களஞ்சியத்தினின்று அறிவின் சொற்களை வாரி வாரி சொரியிடும் திரு: அமீது களஞ்சியம் அவர்களும், பார்ப்பனரின் பணம் பிடுங்கும் மோச வலையை தகர்த்தெறியும் வீரருகிய, திரு: சுப்பிரமணியம் அவர்களும் மக்கள் நலத்திற்காகவும், பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் தன்னலம் பாராது பாடுபடும் தீரராவார்கள். "பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்" என்ற மூதோர் வாக்கியத்தின்படி அவர்களால் எனக்கு ஏற்பட்ட அறிவினால் "கற்பு" என்ற தலைப்பின்கீழ் என் சிற்றறிவிற்கு எட்டியபடி பேசதுணிந்தேன். தவைகளில் தோன்றும் குற்றத்தை நீக்கி குணத்தைக் கொள்வதே நீங்கள் எனக்கு அளிக்கும் சொந்தஉடைமையாகும். தாய் தந்தையர்கள் சிறுவை வைத்து மகளுக்கு மனிதத்தன்மை இல்லாத எந்த மூடனாய் இருந்தபோதிலும் மணமகனாய் தேர்ந்தெடுத்தால், பெண்கள் சலிப்பில்லாது கணவனாய் ஏற்றுக் கொள்ளவேண்டுமாம்! கணவன் படுக்கையை விட்டெழுந்திருக்கா முன்னமே மனைவி எழுந்திருந்து நீராடி சுத்த பக்தியாய் கணவனை கடவுளாக வணங்கவேண்டுமாம். கடும்பசி வந்தபோதிலும், அதை யடக்கிக் கொண்டு, கணவன் எவ்வளவு நேரம் சென்று வந்தபோதிலும் அவர் உண்டபின்பே மனைவி உண்ணவேண்டுமாம். இது மட்டுமா மாமி, நாத்தி, கொழுனன் இவர்கள் வேண்டுமென்று அடித்து உதைத்தாலும் பெண்கள் அடங்கிக் கிடக்கவேண்டுமாம்! "நீங்கள் செய்வது சரியில்லை" என்று சொன்னால் வம்புக்காரி, வாயாடி சிறுக்கியென்றும்; ஒழுக்கமில்லாதவளென்றும் பேசிவிடுகிறார்கள். கணவன்பழைய சாதத்திற்கு விசிறிகொண்டு விசிறு என்று கூறினால் காரணம் கேட்காது செய்யவேண்டுமாம். யாரேனும் அழகிய பெண்களைக் கணவன் கண்டு இச்சைகொள்வார்களாகில், அதைத் திருப்தி செய்யவேண்டிய கடமை மனைவியுடையதாம். மாட்டை அடிப்பதுபோல் மனைவியை கணவன் அடித்து சூடுபோட்டால் வாய் பேசாது மௌனமாய் இருக்கவேண்டுமாம்!

இவ்வித கொள்கைக்கு ஆளாகும் பெண்கள்தான் மகா கற்புடையவர்களாம்! இவ்விதம் இயற்கைக்கு மாறுபாக்கூறும் புராணங்களை உண்மையென்று சொல்லும் இனத்தார்களை என்னென்று சொல்லுவது? கேளுங்கள்! உங்கள் பகுத்தறிவால் தெரிந்து கொள்ளுங்கள்.

உலகத்தில்மஹா உயர்ந்தமதமென கொண்டாடும் இவ்விந்து மதத்தைச் சார்ந்த பெண்களையும், தாம் சார்ந்த மதமெனச் சொல்லிக்கொள்ளும் மதப் பெண்களையும் சீர்தூக்கிப் பாருங்கள். எந்த மதத்தைச் சார்ந்தவர்கள் கொண்ட கணவனைவிட்டு, நாகரிகச் சீரழிந்து, மிகக்கேவலநிலைமையில் இருப்பவர்கள் யாரென்பதை உங்கள் நுண்ணறிவால் ஆராயுங்கள்; சகோதரர்களே! உங்கள் சகோதரிகளாகிய பெண்ணினத்தை உங்களைப் போலவே அவர்களையும் மனிதத் தன்மையெனக் கருதி இனி மேலாகிலும் பெண்களுக்கு சுதந்திரம் கொடுக்க உங்கள் அனைவரையும் மிக மன்றாடி கேட்டுக் கொள்ளுகிறேன். ஸ்ரீ அற்புதானந்த சுவாமிகளும் திரு சுப்பிரமணியம் அவர்களும் பெண்களுக்குள்ள குறைவுகளை மிக விரிவாகப் பேசுவார்களென்க் கூறியே இத்துடன் எனது சொற்களை முடித்துக் கொள்கிறேன் என்று ஒரு திருபர் எழுதுகிறார்.

அதி நூதனம்! மிக ஆச்சரியம்!!
மாதம் 100 ரூபா முதல்
500 ரூபா வரை
சம்பாதிக்கக்கூடிய
சிறிய சைஸ்
தையல் இயந்திரம்



இது சாதாரண மெஷின்களைப் போலவே மேஜையின் பேரில் முடுக்கி, தையல் வேலை செய்பவர்களும், பெண்களும், குழந்தைகளும், எல்லா தையல் வேலையும், சட்டைகள், கோட்டுகள், துணிகள் முதலியவை தைக்கலாம் இதைச்சேர்ந்த சாமான்களுடன் இதற்குரிய பெட்டியில் பாக்கிங் செய்தனுப்பப்படும்.

5 வருட காரண்டியுள்ளது.
விலை ரூ. 3—14—0.
பினங், சிங்கப்பூர் முதலிய மலாய் நாடுகளுக்கு பாக்கிங் ரூ. 5—4—0. உள்பட முன் பணம் அனுப்பவேண்டும்.

லக்ஷ்மி டிரேட்ஸ் கம்பெனி,
தங்கசாலை, மதராஸ்.

கர்ப்பாட்சி
அல்லது
சுவாதீன கர்ப்பம்

ஸ்திரீகள் கருத்தரிப்பதை நம் இஷ்டம்போல் ஆட்சி செய்து கொள்வது அதாவது அனுபவசித்தி செய்து கொள்வது-இதனாலேயே இந்நூலுக்கு கர்ப்பாட்சி எனப் பெயர் வந்தது.

இந்நூலுள் காணப்படும்
விஷயங்கள்:—

கர்ப்பம் எப்படி உண்டாகின்றது? அதிக பிள்ளைகளைப் பெறுவதினால் உண்டாகும்கஷ்ட நஷ்டங்களென்ன? ஸ்திரீ புருஷர்கள் தங்களுடைய இன்ப சுகத்திற்கு இடையூறில்லாமல் போதுமான பிள்ளைகளைப் பெறுவதெப்படி? பிள்ளை வேண்டாம் என்று எண்ணுகிற காலம் வரையில் கர்ப்பம் வராமலே தடுத்து வைத்துக் கொள்ளுவதெப்படி? மறுபடியும் வேண்டும்போது கர்ப்பம் அடைவதெப்படி? என்பவைபோன்ற மிக நுண்மையான ரகசிய ஆராய்ச்சி முறைகளும் கர்ப்பந்தடுக்கும் கருவிகளின் உபயோகங்களும் அநேக ரகசிய சித்திரப் படங்களுடன் இந்நூலுள் செவ்வனே விளக்கப்பட்டிருப்பட்டிருப்பதால் ஒவ்வொரு குடும்பத்திலும் இந்நூல் அவசியமாக இருக்க வேண்டியதாகும்.

டை நூலின் விலை அணா 0-8-0
சம்போக காலத்தில் ஆண்கள் அணிந்துகொள்ளும் ரப்பர் பேஸாரி
விலை ரூ. 1—0—0
பெண்பேசாரி விலை ரூ. 2—8—0

வாஸன் புஸ்தக சாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஒரே மணி நேரத்தில
ஆச்சரிய குணமுண்டு.
மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப் போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒரு குளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும்.

டப்பி 1 ரூபாய் 2—0—0
ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
(3) தபால்பெட்டி 119, மதராஸ்

முன்னேற்றம்
இஃது
சுயமரியாதைக் கொள்கையை ஆயுதமாகக் கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப் பத்திரிகை.
இதன் ஆசிரியர்-வே.சி.நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது
$ 2—25.
விலாசம்:—மானேஜர்,
"முன்னேற்றம்"
(எப்) 155, செலிகிரோட், சிங்கப்பூர்

பழநி சி. எம். சாமி,
குருதாம்பர பஸ்பம்

இது அபூர்வ சக்திவாய்ந்தது. திமிர், குஷ்டம், மதமதப்பு, குறைநோய், வீக்கம், பெருவயறு, மகோதரம். ஆனைக்கால், பவுத்திரம், கண்டமாலை, பீனிசம், சொறிகள், பத்துகள், தடிப்புகள், பிளவை, ஆறாத குழிப்புண் முதலிய சகல வியாதிகளையும் நீக்கும். அனுபவத்தில் கைகண்டது.

50 வேளை பஸ்பம் ரூபா 25. ஏழைகளுக்குப் பாதிவிலை.
ஏராளமான நற்சாக்ஷிகளை கேட்லாக்கில் பார்க்கலாம்.
அன்னிய நாட்டார் ரூ. 5. முன் பணம் அனுப்பவேண்டும்.
சி. வையாபுரிசாமி, நித்தியானந்த வைத்திய சாலை, பழநி.
(பி)

(4-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வும் கம்பர் புதிதாகக் கதை கட்டுகி ருர். இது எதற்கென்றால் இராம னைத் தெய்வமெனக் கூறி உலகை ஏமாற்றவே! முன்னர் அகலிகை யைக் கல்லாக்கி இராமனை மிதிக் கச்செய்து பெண்ணுக்கிப் புதுக்கதை கட்டியவர்தானே கம்பர்! "கூற்றி னும் பாவலர் கொடியராவரே" என்ற கவி இதுபற்றியே எழுந்தது போலும்!! சுயமரியாதை உணர் ச்சியென்பது கொஞ்சமாவது இவ ருக்கிருந்திருந்தால் இவ்வளவு கேவ லமாகக் கதையை மாற்றி எழுதிப் பகைவர்புகழ் பேணுவாரா?

சுயம் பிரபை தனது வரலாறு கூறி வானரர்களை உண்ணச் செய்து அவர்கள் களைப்புநீங்கியபின் அவர் களுடைய வரலாறு வினவினளென அவளை மிகவும் அருளுடையவளாக வால்மீகி கூற, கம்பர் அவர்களைக் கண்டவுடன் அவள் சினம் கொண்டு வரலாறு வினவினளென்றும் இராமன் பெயர் கேட்டவுடன் மகிழ்ந்து ஆடி அவர்களுக்கு உணவுகொடுத்து தன் வரலாறு கூறினளெனவும் மாற்றிக்கூறுகிருர். அவர்கள் பழங் களை உண்டதாக வால்மீகி கூற அவள் படைத்த உணவை உண்டன ரெனக் கம்பர் கூறுகிருர்.

அனுமான் பணிந்து அம்மே! உனக் கு யாம் செய்யத் தகுந்த கைம்மாறு ஏதோ என வேண்டிக் கொண்டும் கூட, அவள் தவமுதியளாகியவெனக்கு ஒன்றும்தேவையில்லையெனக் கூறிவி டுகின்ருள் உண்மை இவ்வாருக அவள் வலிய அனுமானிடம் தான் தேவருல கடைய வழி உண்டோ என வின வியதாகவும் அதற்கு அனுமான் உன் னைச் சுவர்க்கத்தில் சேர்ப்பேனென வாக்களித்ததாகவும் கம்பர் பொய்க் கதை புனைகிருர். ஈதெல்லாம் தாம் வைணவரிடம் புகழ் பெறுமாறு அனு மானிடம் தெய்வத் தன்மை காட்டும் பொருட்டே கம்பர் இவ்வளவில் நின் ருர். வானரர் பிலத்தினின் றும் வெளியே கொண்டுபோய் விட வேண்டிக்கொண்டவுடன் அனு மான் பேருருவெடுத்து பிலத்தின் மேற்பாகத்தைப் பிளந்து பிடுங்கிக் கடலில் எறிந்தான் எனவும், வானரர் வெளிப்பட்டனரெனவும் சுயம்பிர பை விண்ணிடைப் போயினளென வும் அனுமானுடைய புகழை அவர் மிக எடுத்தோதினர். உண்மை இது வன்று. அனுமான் வெளியே வர முடியாமல் தட்டழிந்து அவளை வேண்டிக் கொள்ள அவ்வம்மை அவர்களைக் கண்ணை மூடிக் கொள்ளச் செய்து வெளி யில் கொண்டுவந்து சேர்த்து மறுபடி பிலத்துட்போயினள் என்பதே உண் மை. உண்மையை உரைத்தால் அனு மானைச் சாதாரணக் குரங்கென உல கினர் சிந்தித்து மிகைபடப்புகழமாட் டார்களல்லவா? அதற்காகவே கம் பர் இவ்வாறு பொய்யை மெய்போ லக்காட்டி உலகைமயக்க முயன்ருர்

அரக்கன் வானரருக்கெதிரே தோ ன்றி அவர்களைக் கொல்லவர அங்க தன் அவனை அடித்துக் கொன்ருன் எனவால்மீகி கூறுகிருர்கம்பரோ இக்க தையை மாற்றி குரங்குகள் ஒரு குகைக் கரையில் தூங்கிக் கொண்டிருக்கும் போது அவன் தோன்றிக் கொல்ல வந்து அங்கதனை அடித்தான் என வும் அங்கதன் விழித்து அவனை அறைந்து கொன்ருனெனவும் பின் னர் குரங்குகளெல்லாம் விழித்து நடந்ததுணர்ந்து வேறுயாரும் வந் தாலும் வரலாமென அதன் பின் தூங்காதிருந்தனரெனவும்கூறுகிருர். இது உறங்கும்போது கூடக்கொல்ல வரும் தீய சிந்தையன் என அவர் அவ்வரக்கனை உலகத்தாருக்கு மிகக் கொடியவனுகக் காட்ட விரும்பிய தையே விளக்கும், இனிமேற் செல்லுதும்.


வியாபாரத்திற்கழகு —
— விளம்பரம் செய்தல்



மாதம் 100 ரூபாய் முதல் 500 ரூபாய் வரை சம்பாதிக்கலாம்.

# கைத்தொழில் முறைகள்

(திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு)

இந்நூலின் முதற்பதிப்பு 2,000 பிரதிகள் சில மாதங்களில் விற்றுப்போயின. இந்தியாவின் வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் சூரியனைக்கண்ட பனிபோல் போக்கக்கூடிய அரிய புஸ்தகம். சோப்புகள், மெழுகுவர்த்திகள், பிஸ்கத்துகள், இங்கி கள், தீக்குச்சிகள், சகலவிதமான வாசனை சாமான்கள், மருந்துகள் இதுபோன்ற 1,000 இரகசிய முறைகள் இந்நூலில்அடங்கியிருக்கின் றன. பிறர் உதவியின்றி நாமே தொழில்செய்து சம்பாதிக்கத்தக்க அரிய போதனைகள் அடங்கிய இந்நூலுக்கு விலை மிகவும் சொற்பம் என்பதைக் கவனியுங்கள்.

300 பக்கங்களுள்ளது, ஏரோப்ளேன் டிரேட் மார்க் உள்ளது. விலை ரூபா 1—8—0 தபால் செலவு அ. 5.

(3) வாஸன் புஸ்தகசாலை, 244, தங்கசாலை வீதி, மதராஸ்.



வெளியாகி விட்டது! வெளியாகி விட்டது!

# சாமிகளின் அடிமைகள்

சாமிகளின் அடிமைகள் என்னும் மொழி பெயர்ப்பு நூல் இப்போழுது விற்பனைக்குத் தயாராய் உள்ளது. இதன் விலை 1-8-0 ரூபாய் என்று நாம் குறிப்பிட்டி ருந்தோம். ஆனல் பலர் இவ்விலையைச் சிறிது குறை க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில் நாம் பிரதி ஒன்றை 12 அணுவிற்கே கொடுப்பதாக உத் தேசித்துள்ளோம்.

விலை ரூபாய் 0—12—0.

திராவிடன் புத்தகாலயம்,
14, மௌண்ட் ரோட், சென்னை.

தனிப்பிரதி விரும்புவோர் 14-அணு காலணு ஸ்டாம்பு அனுப்பவும்.



# உலகமெங்கும் உலாவி வருகிற தமிழ் மாதப்பத்திரிகை எது?



யாரை வேண்டுமானுலும் கேளுங்கள். ஆனந்த விகடன் என்று சொல்லுவார்கள். தமிழர்கள் இவ்வுலகத்திலேயே எங்கெங்கு குடியிருக்கிருர்களோ ஆங்கெல்லாம் விகடன் மாதாமாதம் போகின்ருன். சுருங்கச் சொல்லின் விகடன் பேரிலுள்ள தமிழர்களின் அபிமானம் உலகெங்கும் பரவிவிட்டது. என்? நீங்களும் விகடன் அபிமானியாக வேண்டுமா? வருடத்திலே ஒரு ரூபாய்தான் கட்டணம்.

மாதிரி காபி இனம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
(3) 244, தங்கசாலை வீதி, மதராஸ்.



ரத்த விர்த்தி, தேக பலம், தாது புஷ்டிக்கு
தேத்தானவிதை லேகியம்

# தங்க பஸ்பம் சாப்பிடுங்கள்

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாத முள்ளது.

எப்படி? ஒரு தொட்டி கலங்கிய ஜலத்தில் ஒரு தேத்தான் விதையை உரைத்துக் கலக்கினல் உடனே அந்த ஜலம் பூராவும் தெளிந்து சுத்தமாகிவிடும். அதுபோல் உங்கள் ரத்தத்தையும் சுத் தம் செய்து நல்ல ரத்தத்தை ஏராளமாகப் பெருக்கி தேக பலம், தாது புஷ்டி உண்டு பண்ணும். சகலவித உஷ்ணம், வெள்ளை, வெட்டை, நீரழிவு, காசம், க்ஷயம், இருமல்களுக்கு ஒரு மண்டலம் சாப்பிட்டால் போதும். குழந்தை முதல் ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம். அதிக ருசியுள்ளது. 50 வேளை டின் ரூ. 2-8-0. வி. பி. வேறு. உயர்ந்த பலனை விரைவில் அடையவேண்டுவோர் லேகியத்துடன் சேர்த்துச் சாப்பிட 50 வேளை தங்கபஸ்பம் ரூ. 10-0-0. 100 வேளை ரூ. 20-0-0. ஏஜண்டுகள் தேவை:—

(35) தெண்டபாணி வைத்தியசாலை, பழனி.

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

காவேரி அகஸ்தியர் கமண்டலத்தில் எப்படியடங்கி ஒடுங்கி இருந்தது என்று கேட்டால் கேட்பவர்களை சமயதூஷணைக்காரர் என்றுசொல்லு கிறார்களேயல்லாமல் அதற்குச்சரி யானபதில் சொல்லுவதில்லை. அதற்கு தத்துவஅருத்தமிருப்பதாகநடிக்கிறார் கள். அப்படி இருந்தால் அதை வெளிப்படுத்துவதுமில்லை.

இவ்வித அஸம்பாவித விசாரணை நெடுங்காலமாக நடைபெற்று வந் திருக்கிறது. இந்த அசம்பாவிதத் திற்கு நெடுங்காலம் நமது வித்வப் பெரியார்கள் இடம் கொடுத்து தனது விதிகளே ஜகத்தின் விதி யென்று பாவனை செய்து கொண்டி ருந்தால் எப்பொழுதாவது திட ரென்று சரித்திரமானது ஒரு சிறிய தடையில் இடறித்தலை கீழாகக் கவிழ்ந்து விடுமென்பதை பண்டிதர் கள் தெரிந்து கொள்ளும் காலமும் பக்கமே இருக்கிறது. மேற்சொன்ன அகஸ்தியர் கதையைப் போன்ற ஆராய்ச்சி, சமயத்தின் உண்மை தத்துவத்தை வெளிப்படுத்தவோ, உண்மை அகத்தியன் வரலாற் றைத் தெரிவிக்கவோ உபயோ கிக்கப்படாமல், மந்த புத்தியும் மூட நம்பிக்கையும் வளர்ந்து கீழ் மேல் கற்பிக்கும் குணங்களையே பெருக்குகின்றன.

பல நூற்றாண்டுகளாக தமிழர்க ளும் பார்ப்பனர்களும் கூடியிருந்தும் தம்முள் மனுஷ்ய சம்பந்தங்கள் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. பார்ப் பான் தமிழனை அடிமை கொண்ட வழியையே ஸ்திரப்படுத்த ஆசைப் படுகிறான். அவ்வழிக்குப் பாடும் பல் லவி மாத்திரம் தவறாமல் பாடுகிறார் கள். நமது வித்வப் பெரியார்களின் ஆராய்ச்சி அப்பாட்டுக்குப் பக்க மேளமாகவிருக்கிறது. அகத்தியரைப் போன்ற கதைகளே அதற்கு அரண் மனையாகவும் முடிந்தது, இவ்வித கதைகளுடைய ஆராய்ச்சியிற் பிறந்த சமையானது நெடுநாள் ஸ்திரமான சம நிலையில் இருக்குமா? இதற்கு நெறிப்படி இதுவரையிலும்ஒருதீர்ப் புச்செய்யாததினுல் தானேநமதுசரித் திர நாடகங்களெல்லாம் சோகமாக முடிந்திருக்கின்றன.

மனிதர்கள் ஒன்றுசேர்ந்து யோ சனைபண்ணி என்றைக்கும் நமது நாட்டில் பிரிவுபட்டு நிற்க ஏற்படுத் திய வழிக்கு அனுகூலமாக எழுதப் பட்ட கதைகளிலும் புராணங்களி லும் பார்ப்பனர்களுடைய ஆதிக்கம் முழுதும் நிலைநிறுத்துவதற்கல்லவொ அகத்தியனைப் போன்றகதை அங் கங்கு நுழைக்கப்பட்டிருக்கிறது. மனிதனுக்குக்கிடைத்த பேறாக வில் சிறந்தபேறுகிய விசாரிக்கும் சக்தியைப் பண்டிதர்கள் அரிவினி யோகப்படுத்திக் கொள்ளுவதினுல் அவர்களுடைய கருமப்புலன்கள் மழுங்கிப்போகின்றன.

ஒசேறொன்று போட்ட சங் கடையில் மலைகள் ஆகாசம்வரையி லும் வளர்ந்து சந்திரர் சூரியர்களின் ஓட்டத்தைத் தடைப்படுத்தினதி னுல் ஏற்பட்ட துன்பம் தீரசிவபெரு மான் வரம் கொடுத்து அகத்தியரை தெற்கே யனுப்பினுர்; சிவபெருமா னின் கலியாணத்தில் தேவர்கள் முனிவர்கள் வந்து சேர்ந்ததினுல் வடகோடு தாழ்ந்து தென்கோடு உயர்ந்துவிட்டது; அதைச்சமப்படுத்த சிவபெருமான் அகத்தியரை தெற்கே யனுப்பினுர்; அனுப்புகையில் தமிழ் இலக்கணத்தையும் உபதேசித்து அனுப்பினுர்; தென் தேசத்திலிருந்த சண்டாளப்பாவிகளின் பாவத்தை விமோசனம் பண்ண காவேரியையும் அவர் கையில் கொடுத்தனுப்பினர்; இதுவே அகஸ்தியரைப் பற்றி ஆராய்ச்சிப்பண்டிதர்களுக்கு ஆரம் பக்கதை. இந்தக் கதையை ஒரு துளி கூடவிடாமல் நம்பி அந்தக்கதைகளைச் சொல்லியிருக்கும் புராணங்களை அதற்கு ஆதாரமாகக்கொண்டு ஆரா ய்ச்சி செய்தால் அதிலிருந்துவரும் உண்மைத்தெளிவைப்பற்றி நீங்களே ஆலோசித்துப்பாருங்கள். இப்பொ ழுது பெரிய காலேஜ் பண்டிதர்கள் கூட அகஸ்தியரைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்புறப்பட்டிருக்கிறார்கள். வட கோடு தாழ்ந்துதென்கோடு உயர்ந்த தென்னும் கதையே இவர்களுக்கும் அஸ்திவாரம். (தொடரும்)

---

## சுயமரியாதை இயக்கத்தின் ஊக்கம்

---

திருவாங்கூரின் தென் பாகத்தில் ஆளூர் ஒரு சிறிய கிராமம். தீண்டா மையும் வைதீகப் புராண வைராக் கியமும் சிறந்து விளங்குவதில் முன் னேற்கமடைந்த இவ்வூரில் கிறிஸ் தவ நண்பர்களின் கோவில் முற்ற வெளியில் வழக்கம்போல் 29-9-29ல் ஓர் அன்னதானம் வழங்கப்பட்டது.

சுயமரியாதை இயக்கத்தில் ஒரு சிறிது ஈடுபட்டுள்ள நண்பர்களில் சிலரும், ஏனைய இந்து முஸ்லீம் கன வான்களில் சிலருமாய் உடனே ஓர் அவசரக்கூட்டங் கூடி "சுயமரியாதை இயக்கத்தில் உண்மையாகவே அபி மான முள்ளவர்கள்" இன்று கிறிஸ் தவர்களால் நடைபெறும் அன்ன தான விருந்திலமர்ந்து வெளியரங்க மாய் சமபந்தி போஜன மருந்த வேண்டுமென்று விவாதஞ் செய்தார் கள். ஆனல் சுயமரியாதை இயக் கத்திலீடுபட்டுள்ளவர்களில் வேளா ளர் குல கனவான் திருவாளர்கள் கே. குமாரபிள்ளை, சி. இசக்கிமாடன், முகம்மதுமுகையதீன் சாயபு இவர்கள் ஏகோபித்த மனதினராய் ஆமோ தித்து கிறிஸ்தவர்களுடன் பகிரங்க மாய் சமபந்தியமர்ந்து போஜன மருந்தினுர்கள். இதைக்கண்ணுற்ற அநேக ஜனங்களின் சுயமரியாதை பற்றற்ற சிலர் இகழ்ந்தும் சிலர் சுயமரியாதை இயக்கத்தின் ஊக்கத் தை புகழ்ந்தும் பேசி சந்தோஷ ஆர் பாட்டமாய் கூட்டங்கலைந்தது.

---

# நாங்கள் ஜவாப்தாரியல்ல

## இந்திய தபால் தந்தி இலாகா

ரெ. சி. எ. 200

சென்னை சர்க்கிள் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலிடமிருந்து

'குடி அரசு' பிரசுரக்காரருக்கு
14, மவுண்டு ரோட், சென்னை.

சென்னை, 25/26, செப்டம்பர், 1929.

ஐயா,

1929 ஆகஸ்டு 14-ந்தேதி ரெ. சி. எ. 200 ஆபீஸ் கடிதத் தொடர்ச்சியாக, ஒவ்வொருவார ஞாயிற்றுக்கிழமைதோறும் நேரம்தாழ்ந்து மாலையில் மவுண்டுரோடு போஸ்ட் ஆபீசில் "குடி அரசு" பத்திரிகைகள் அடங்கிய 7,500 கட்டுகள் அனுப்பப்படுவதாக விசாரணை செய்ததில் அறிகின்றேன். ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளானதால், போஸ்டாபீசில் சிலரே வேலை செய்கின்றனர். அதே நாளில் எல்லா கட்டுகளையும் அனுப்பமுடியவில்லை. எனவே, ஒரு பகுதி நிறுத்தப்பட்டு மறுநாள் அனுப்பப்படுகிறது. இப்பொழுதுள்ள காலதாமதம் ஏற்படாதிருக்க வேண்டுமாயின் ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாக வேறு எந்த நாளிலாவது காலை 11-மணிக்கு முன்பு உங்கள் பத்திரிகைகளை அனுப்ப நீங்கள் ஏற்பாடுகள் செய்வது உசிதமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

2. 13-ந்தேதிய தங்களது கடிதமும் கவனிக்கப்பட்டு வருகிறது. அவசியமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் அசௌகரியத்திற்காக வருந்துகின்றோம்.

உங்கள் ஊழியன்,
போஸ்ட்மாஸ்டர் ஜெனரலுக்காக,

[பிரதி] (ஒப்பம்) பீமராவ்.

---


குறிப்பு:—இம்மாதிரியான பதில் கடிதம் தபால் இலாகாதாரிடமிருந்து கிடைத்திருக்கிறபடியால் "குடி அரசு" பத்திரிகை தாமதமாகக்கிடைப்பதாக தினப்படிவரும் ஆவலாதிகளுக்கு நாங்கள் ஜவாப்தாரியல்ல என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

முக்கிய குறிப்பு:—7,500 கட்டுகள் என்று குறிப்பிட்டிருப்பதால் நேயர்கள் "குடி அரசு" 7,500 பத்திரிகைகள் மாத்திரந்தான் வெளியாவதாகக் கருதிக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்ளுகின்றோம். ஏனெனில் தபாலில் மாத்திரம் ஏழாயிரத்துச் சில்லரை போலதையும் ரயில்வே பார்சலில் 30, 40 ஏஜண்டுகளுக்கு சுமார் 2,500 பத்திரிகைகள்வரை போய்க்கொண்டிருப்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---


இதுவரையில் வெளிவராத தமிழ் புஸ்தகம்

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப் பயிற்சிமுறையும்"



விலை ரூபா 1—8—0
(தபால் சார்ஜ் வேறு)
(1916-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது)

அன்னிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும் தவிர, 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிஸம் கற்றுக் கொடுத்து கவர்ன்மென்ட் லைசென்ஸ் வாங்கிக் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
(11) மைலாப்பூர், சென்னை.

ஜனங்களுக்குச் சந்தோஷத்தைத் தரும்

# ஜனோபகாரி தைலம்.

இத்தைலமானது 27 வகை வன மூலிகைகளால் செய்யப்பட்டது. அநேக நற்சாட்சிகள் பெற்றது.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"
நல்ல குளிர்ந்த வாசனையுள்ள தைலம்.

இத்தைலத்தால் தீரும் வியாதிகள்:—தீராத தலைக்கனம், ஓயாத மண்டையிடி, ஒருதலைக்குத்து, தலையரிப்பு, முடிகழிதல் இவைகளை நீக்கிக் கூந்தலை வளரச்செய்யும் காதிரைச்சல், காதடைப்பு, குத்தல், கண்வலி, எரிவு, கூச்சம், நீர்வடிதல், சிகப்பு விழுதல், காதிலிருந்து மஞ்சள்நிறத் தண்ணீர் வடிதல், ஓயாத் தும்மல், சிராபோல் விழுதல், வாய்க்கசப்பு, புளிம்பு, தூர்க்கந்த மடித்தல் முதலிய வியாதிகள் நீங்கி தேகத்திற்குச்சுகம்உண்டாகும். கண்டத்துக்குமேல் ஏற்படக்கூடிய 96 வியாதிகளும் தீரும்.

பெரிய டின் ரூ. 1—12—0 } தபால் சார்ஜ் வேறு.
சிறிய டின் ரூ. 1—0—0 }

# பார்ச வாய்வு மருந்து.

விதை வாய்வு, நரம்புத்தடிப்பு, வலி, வீக்கம் முதலிய விதை சம்மந்தமான சகல வியாதிகளுக்கும் இந்த மருந்தை உபயோகியுங்கள். பத்தியம் கிடையாது. பெண்கள் அண்டவாய்வுக்கும் உபயோகிக்கலாம்.

14 வேளை மருந்து ரூபா 1—0—0. தபால் சார்ஜ் வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய வெளிநாட்டு நேயர்கள் வி. பி. செலவு சேர்த்து முன்பணம் அனுப்பவேண்டும். நீங்கள் கடிதம் எழுதும்போது தெளிவாய் அச்செழுத்தைப்போல இங்கிலீஷிலோ, தமிழிலோ எழுதவேண்டும். சோல் ஏஜண்டுகள் தேவை விவரம் நேரில் எழுதி தெரிந்துகொள்ளவும்.

உ. கா. நாகூர்மீரா அன் பிரதர்,
7-வது தெரு, ஏர்வாடி போஸ்டு,
திருநெல்வேலி ஜில்லா (தென்னிந்தியா)

(41)



# நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்

(1919-ல் பம்பாயில் ஸ்தாபிக்கப்பட்டது)

சேர்மன்:—

## சர்: டோராப் ஜே. டாட்டா Kt.

### மூலதனம்:

| | | |
|---|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | ... ரூ. | 6,00,00,000. |
| பதிவு செய்யப்பெற்ற ,, | ... ரூ. | 3,56,05,275. |
| வசூலான ,, | ... ரூ. | 71,21,055. |

இதைப்பற்றி 1929 ஜூன் மாதம் வெளிவந்த "இந்தியன் இன்ஷியூரன்ஸ்" பத்திரிகை பின் வருமாறு கூறுகிறது: "நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி இந்தியாவிலே மிகவும் பெரிய ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கம்பெனியென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மூலதனத்தைக் கவனித்தால் அது உலகத்திலுள்ள பெரிய இன்ஷியூரன்ஸ் கம்பெனிகளில் ஒன்றென்று கூறிக்கொள்ள அதற்கு உரிமையுண்டு."

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் உயிர், நெருப்பு, மேரைன், மோட்டர்கார், விபத்து முதலிய பலவித அஷ்யூரன்ஸ்களுக்கும் ஏஜென்சிகள் கிடைக்கும்.

பிராஞ்சு மானேஜர்,
4, முதல் லைன்பீச், சென்னை.

(28)



பார்க்கப் பவுன் மோதிரம் தோற்றும்படியான
ஜ்வலிட்புள்ள அற்புத

# எலெக்டிரிக் மோதிரம்

அமெரிக்கா தேசத்தில் ஓர் மின்சார நிபுணரால் இப்பொழுது நூதனமாய்க் கண்டு பிடிக்கப்பெற்றது !



இம்மோதிரத்தை பாலர் முதல் விருத்தர்வரை ஆண் பெண் இருதாரத்தார்களும் உபயோகப்படுத்தலாம் இம்மோதிரத்திற்குள்ளிருக்கும் எலக்டிரிக் பவர் குறையாமல் எக்காலமும் நீடித்திருக்கும். தாங்கள் நோய்வராமல் தடுத்துக் கொள்வதற்கும், இருக்கும் நோயை குணப்படுத்திக் கொள்வதற்கும் இம்மோதிரத்தை உபயோகியுங்கள் !

இம்மோதிரமானது 8-வித லோகங்களைக் கொண்டு வெகு அழகாகவும், பார்வையாகவும் செய்யப்பெற்றிருக்கின்றது. இதைநீ விரலில் போட்ட மாத்திரத்தில் அதினின்றும் எலெக்டிரிக் பவர் மின்சார சக்தி வெளியாகி விரல் மூலம் அது தேகமெங்கும் பரவி பலத்தைக் கொடுப்பதோடு காய்ச்சல், வாந்திபேதி, தொத்து வியாதிகள், வைசூரி, இன்புளூவன்சா, க்ஷயம், குஷ்டம், பிளேக், தலைவலி, அஜீர்ணம், மூலம், அன்னத்துவேஷம், மலச்சிக்கல், வாதம் சூலை வெட்டை முதலிய ஸ்திரீ கொரோமான வியாதிகள் எதுவுமே அணுகாது. நற்சாட்சிப் பத்திரங்கள் பிரதிதினமும் வந்துகொண்டிருக்கின்றன.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 8 0
மோதிரம் 3-க்கு விலை ரூபா 3 12 0

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

(3)



ரூ. 2-15-0 ரூ. 2-15-0

# பௌண்டன் பேனா

நீங்கள் கனவிலும் நினைக்கமுடியாத குறைந்த விலை!

இங்கிலாந்தில் செய்து மாக்ஷிமை தங்கிய 5-ம் ஜார்ஜ் சக்கரவர்த்தியால் புகழ்ப்பெற்றுப் பிரக்யாதியடைந்த ரிஜிஸ்டர்டு W. B. பவுண்டன் பேனா, தங்கப்ளேட் நிப்பு போட்டது. இதை வாங்குபவர்களுக்கு எக்காலமும் ஓடக்கூடிய மூன்று வருஷம் உத்தரவாதமுள்ள லீவர் பாக்கெட் வாட்சு இனாமாய் அனுப்பப்படும்.



சென்னை இராஜதானியில் இந்தப் பவுண்டன் பேனாவைப் பிரபலப்படுத்துவதற்காக லீவர் பாக்கெட் வாட்சுகளை ஏராளமாகத் தருவித்து ஒவ்வொருவருக்கும் இனாமாக அனுப்பிக்கொண்டு வருகிறோம். ஸ்கூல் உபாத்தியாயர்கள், வக்கீல்கள், வக்கீல் குமாஸ்தாக்கள், இன்னும் ஏனைய உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் எழுதப்பேனாவும், மணி பார்க்கக் கடியாரமும் இந்த சொற்ப விலையில் கிடைக்கிறது ஆச்சரியமல்லவா?

W. B. பவுண்டன் பென் விலை ரூ. 2-15-0. இதற்கு மேற்சொல்லிய பாக்கெட் வாட்சு இனாம். ஒரே காலத்தில் இரண்டு பேனாக்களுக்கு ஆர்டர் கொடுத்தால், பாக்கெட் வாட்சுக்குப் பதிலாக ரோல்டு கோல்டு ரிஸ்டு வாட்சு எந்த ஷேப் வேண்டுமோ இனாம்.

முக்கிய குறிப்பு:—எங்களிடமிருந்து ½ டஜன், ½ டஜன் இப்படிப் பவுண்டன் பேனாக்களைத் தருவித்துப் பிறகு, பேனாக்களையும், கடியாரங்களையும் தனித்தனியாக அதிக விலைக்கு விற்று லாபம் சம்பாதிக்கவும் வழியுள்ள இத்தருணத்தைக் கைவிடாதீர்கள்.

(30) The Laxmi Trades Co., Sowcarpet, Madras.

## Beauty For Ladies !
## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில் பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஆரஞ்சி, ரோஸ், ஸ்கப் கலர்கள். கரைக்கும் முந்திக்கும் பூவேலையினமுள்ள நூதனமான புடவை.

18 முழம் × 2½ அகலம் ரூ. 4-6
15 முழம் × 2½ அகலம் ரூ. 3-12

The Madura Oriental Trading Co.,
Laxmi, Cloth Store, MADURA.
(34)

---

## எங்கு சரசமான விலை? நயம் சரக்கு?

அயல் காட்டிலிருந்து இவண் வந்து விற்பதற்கு சரியான பெங்கால், கலர், சில்வர், மேச்சஸ்கள், மாவிச்வையர் ஓடியிற் கண்டவர்களிடம் தேவையானது கிடைக்கும்.

காரியஸ்தர், தீப்பெட்டிகம்பெனி,
(37) பாலக்காடு, (தென்மலபார்.)

---

## குமரன்

காரைக்குடி தனவணிக நாட்டில் பிராமணரல்லாதார் முன்னேற்றத்துக்காக உழைக்கும் சிறந்த செந்தமிழ்ப்பத்திரிகை,

அடிமை வாழ்வைப் போக்கிக் குருட்டு நம்பிக்கையை நீக்கி, அறிவுச் சுடர் கொளுத்தும், கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகின்றது.

வருடச் சந்தா விவரம்:—
வாரப்பதிப்பு ரூ. 5—0—0
மாதப்பதிப்பு ரூ. 1—8—0
மானேஜர் குமரன், காரைக்குடி.
ஙப்)

---

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப் பத்திரிகை; தமிழ் நாட்டில் வெளிவரும் மாதச் சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது; 20,000 சந்தாதாரர்களையுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டு வரும் உயர்ந்த வியாசங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 64-பக்கங்கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும், லயன் பிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.


மாதிரி காபி இனாம்.

வருட சந்தா தபால்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூபா 1—0—0
வெளிநாடுகளுக்கு ,, 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.
(5)

---

## A GOLD PLATED *LEVER* WRIST WATCH FOR. Rs. 6—14—0.




எங்கள் ரிஜிஸ்டர்டு ரோல்டு கோல்டு "ரிடோ" லீவர் கைக்கடியாரம் பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான டைம் காட்டும். வலிலிண்டர் கடியாரங்களைப்போல் கொஞ்ச நாளைக்குள் நின்று போவதல்ல. 5 வருஷமல்ல, 10 வருஷங்கள்கூட ரிப்பேர் இல்லாமல் போகக்கூடிய கடியாரம். இதை வாங்குவோருக்கு ரோல்டு கோல்டு கைச்சங்கிலி இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும். வீணிலே வலிலிண்டர் கடியாரங்களில் பணத்தை யிழக்காமல் எங்களை நம்பி எக்காலத்தும் உழைக்கக்கூடிய லீவர் கடியாரத்தை வரவழைத்துக் கொள்ளுங்கள். வாங்கிக்கொண்ட ஒருவாரம் வரை சரியாக ஓடவில்லையென்றால் வாபஸ் ஒப்புக் கொள்ளப்படும். 5 வருடம் காரண்டியுள்ளது. இனாம் சங்கிலியுடன் கடியாரம் விலை ரூ. 6-14-0. ஸ்டாக் கொஞ்சம். உடனே எழுதுங்கள்.

Fancy Watch House,
(3) 119, G, P. O. MADRAS.

---

நிமிஷத்தில் குணமடையலாம் விட்டு ஏன் கவலைப்படுகிறீர்? அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி !!

## சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும் கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப்பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது.


48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டின் 1க்கு ரூ. 1—4.
தபால் கூலி அணா. 4. ஒரு டஜன் டின் விலை ரூ. 9.
6 டின் விலை. ரூ. 5-4. 3 டின் விலை ரூ. 3.
F, M. S. முதலியவர்களுக்கு முன் பணம் ரூ. 2-8. அனுப்பவேண்டும்.
முன் பணம் இல்லாத ஆர்டர்களை கவனிக்கப்படமாட்டாது.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு வைத்தியசாலை,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

---

முந்துங்கள் ! முந்துங்கள்!

## விலை ரூபா 2—12—0 தான்



### 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி சாமான்கள் விவரம்.

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புள்ள பவுண்டன் பேனா; ரோல்டுகோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டை கோட்டு பொத்தான்கள் செட் 12; டை கல்லிழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான முகம் பார்க்கும் கண்ணாடி 1, அழகிய தந்தச் சீப்பு 1, நேர்த்தியான கத்தி 1; காமிநேஷன் நூதனசாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரக பென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபார்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கி மாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர் படங்கள் 34; அழகிய பலரக சேப்டி பின்கள் 24; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0.


தி. கிருஷ்ணா ஏஜன்ஸி,
(3) தபால்பெட்டி 119, மதராஸ்.

---

## ஒரே மாதம் வரையில் ரூ. 5-14 ஒரு உண்மையான கிராமபோன்

என்ன விலைக்குக் கிடைக்கிறது பாருங்கள்.

பேபி போன் என்று சொல்லப்படும் சிறிய சைஸ் கிராமபோன் இது 200, 300 விலையுள்ள பெரிய கிராமபோன்களுக்கு இணையாக வாசிக்கக் கூடியது.



இதன் இயந்திர அமைப்பு பெரிய கிராமபோனைப்போலவே உள்ளது. இந்த கிராமபோன் பெட்டியில் சவுண்டு பாக்ஸ், ஆரன், இரண்டு டஜன் கொண்ட ஊசிப்பெட்டி எல்லாம் உண்டு. இரண்டு பக்கமும் பாடக்கூடிய ஒரு ரிக்கார்டும் இனாமாகச் சேர்த்தனுப்பப்படும். இங்கிலீஷ் பாண்டுகள், சிரித்தல், விகடம் பேசுதல் முதலிய ரிக்கார்டுகள் தயாரிலுள்ளன.

தனி ரிக்கார்டு 1-க்கு ரூ. 1.
ஒரு ரிக்கார்டுடன் கிராமபோன் பெட்டி 1-க்கு ரூ. 5-14.
தபால் செலவு ரூ 1-5.
உடனே எழுதுங்கள்.

Sole distributors,—
CANADIAN WATCH PEOPLE,
(3) G. P. O. MADRAS.


---

## படக்காட்சி

ரூ 20 ஆகயிருந்தது ரூ. 5-0-0 தான்

## அமெரிக்கன் சிறிய சினிமா மெஷின்

வெகு நூதனமான இந்த மெஷினினால் பொதுப் படக்காட்சிச் சாலையில் அநுபவிக்கும் ஆனந்தத்தை உங்கள் வீட்டிலேயே அடையலாம்.



நர்த்தனமாடுவது, நீரச்செயல், கள் மோட்டார், ரயில், ஏரோப்ளேன் விபத்துகள், பாரிஸ் மாதர் லீலைகள், மலைகள், ஆறுகள் முதலிய காக்ஷிகள் ஓடுவதும் அசைவதும் மிகத் தெளிவாகத் தெரியும். பிலிம் டேப் ஒரு கஜம்கூட அனுப்பப்படும். உபயோகிக்கும் முறையும் மெஷினுடன் உண்டு.

மெஷின் குறைந்த (அசல்) விலை ரூ. 5 0 0
தனி பிலிம் டேப் 1 கஜம் 0 6,0
3 கஜங்கள் 1 0 0

முந்துங்கள்!

லக்ஷ்மி ட்ரேட்ஸ் கம்பேனி,
173, தங்கசாலை வீதி, சென்னை.
(30)


திரு. ஜே. எஸ். கண்ணப்பர் அவர்களால் சென்னை "நாடைடை" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.